1445

The "Bharati." Reg. No. M. 2911.

ஸ்ரீமுக-ஆனி

1933ஞு ஜூன்-ஜூலை மீ

மாலை 5 மணி 3.

ஓர் செந்தமிழ்

மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:-

உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 SEP 1933
MADRAS

இந்திய மூலதனம்! சுத்த சுதேசிக் கம்பெனி!

தமிழ் நாடு அஷ்யூரன்ஸ் & பாங்கிங் கம்பெனி Ltd.,

போடிநாயக்கனூர்.

அக்கிராசனதிபதி:
பெரியகுளம் தாலூகா போர்ட்
பிரஸிடெண்டும் போடிநாயக்கனூர் பிரபல லாண் லார்டுமான
1. மகா-ா-ாஸ்ரீ S. A. ரெங்கசாமி செட்டியா ரவர்கள்.

டைரக்டர்கள்:
2. ,, S. P. சுல்தான் அஹமெட் பதரதீன் ருவுத்தர் அவர்கள், லாண் லார்டு, போடி.
3. ,, V. புன்னைவனம் பிள்ளை, லாண் லார்டு & முனிசிபல் கவுன்சிலர், போடி.
4. ,, B. K. ஒன்னுராம் செட்டியார், லாண் லார்டு, போடி.
5. ,, S. S. M. பழனியப்பன் செட்டியார், வர்த்தகம், போடி.
6. ,, T. S. சாமிநாதன் அவர்கள், K. D. H. P. Co. Ltd., மூணார்.
7. ,, Dr. ஜான் ஜோசப், தந்த வைத்தியர், பெரியகுளம்.
8. ,, P. O. நயினன், கொட்டகுடி ரோட் ஓவர்சியர், போடி.

மானேஜிங் டைரக்டர்:
9. ,, T. S. கிருஷ்ணசாமி அய்யர், கொட்டகுடி ரோப்வே, போடி.

செக்ரட்டரி:
10. ,, S. பாஸ்கரன்.

மேற்கண்ட கண்ணியமும் பொறுப்பும் வாய்ந்த டைரக்டர்களால் இக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டு நன்கு நடந்து வருகிறது. அன்னிய நாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் மூலமாக நமது திரவியம் அகலுவதை நிறுத்தி, இக் கம்பெனியில் சேர்ந்து பாலிசி எடுத்துக்கொண்டு பொருள் சேகரிக்க முயலுங்கள். எல்லா விவரங்களுக்கும் இக் கம்பெனி காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளுங்கள்.

“பாரதி”

சிறந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை

4-ம் ஆண்டு முடிவுற்று ஸ்ரீமுக சித்திரை முதல்
5-ம் ஆண்டு ஆரம்பம்.

சுதந்திரம் கொண்டு சமத்வம்பற்றிச் சகோதரத்வம் ஏற்று
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் ஜாதி, மத, கட்சி பேதங்களற்று
இந்தியரனைவரும் பாரத மாதாவின் மக்க
ளென்ற மேலான கொள்கையுடன்
தேசாபி விருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு
தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும் செந்தமிழ் மாஸிகை

“பாரதி” ஒன்றே யாகும்.

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதாரர்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

சந்தா விபரம்:

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2/=** அல்லது **3** ஷிலிங்
வெளி நாடுகளுக்கு ,, ரூ **3/=** ,, **5** ,,

போஷக சந்தா குறைந்தது ரூ **100/=**

தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.
மாதிரிப் பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.
இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும்
ஏஜெண்டுகளை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

விபரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

பொறுப்பாளர்,

“பாரதி” ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

நம்மிடம் கிடைக்கும் இதர நூல்கள்.

1.	நெப்போலியன் போனபார்ட்	0—4—0
2.	மூத்தண்ணா (ஓர் துப்பறி கற்பிதம்)	1-12—0
3.	அறநூல் மூலம்	0—3—0
4.	ஷை பதவுரையுடன்	0-12—0
5.	ஸ்ரீ அரவிந்த யோக விளக்கம்	0—4—0
6.	வீர சிவாஜி விஜயம்	0—3—0
7.	ஸ்ரீ ராமகிருஷ்ணாமிருதம்	0—6—0
8.	அன்னை (ஸ்ரீ அரவிந்தர் அருளியது)	0—4—0
9.	கீதை காட்டும் பாதை	0-10—0
10.	புது யுகப் பாட்டு	0—5—0
11.	ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம்	0-12—0
12.	தென் இந்தியா விவசாய நூல்	1—4—0
13.	ஜான்ஸி மஹாராணி லக்ஷிமிபாய்	0—2—0
14.	போலந்து நாட்டின் சுதத்திம்	0—1—0

தபாற் செலவு பிரத்தியேகம்.

பாரதிப் புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

“பாரதி”யில் விளம்பரஞ் செய்ய விகிதம்.

சாதாரண	பக்கம்	1-க்கு	மாதம் 1-க்கு	ரூ	10—0—0
,,	,,	½-க்கு	,,		5—8—0
,,	,,	¼-க்கு	,,		3—0—0
கவர்	,,	2 & 3	,,		15—0—0
,,	,,	4	,,		20—0—0

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும்.
நீண்டகாலம் விளம்பரந் தருவோர் மானேஜருக்கு எழுதவும்.



சிறந்த செந்தமிழ் மாலிகை.

பொருள் அடக்கம்.

மாலை **5**. ஸ்ரீமுக௵ ஆனி௴ மணி **3**.

தொடர் எண்.		பக்கம்.
1.	ஓர் கேள்வி—	161
2,	வீரேச லிங்கம் பந்துலு— திரு. என் வேங்கடரமணன் அவர்கள் ...	162
3.	பொதுஜன ஊழியம்—திரு K. வெங்கட ராவ் அவர்கள்	179
4.	'கஜ்னி மஹமூது' சேஷய்யர்—'ஆனந்தா' ...	184
5.	வீரன் டி'வெலரா—திரு. ஸ்ரீவை. குஞ்சு அவர்கள் ...	188
6.	தமிழரும் தாய்மொழியும்—ஆசிரியர், "பாரதி." ...	195
7.	வறுமைப் பேயே! உன் ஆற்றல் எங்கே?— திரு. ஆரியூர் வ. பதுமநாப பிள்ளை அவர்கள் ...	211
8.	எனது குருநாதரின் கடிதம்—(மனோகரனார்) ...	223
9.	கண்ணம்மா—என் காதலன் —"ஞான விநோதன்" ...	232
10.	ஆராய்ச்சி மேடை—	235
11.	ஆசிரியக் குறிப்புகள்—	236

படம்:

வீரேச லிங்கம் பந்துலு.

வீரேச லிங்கம் பந்துலு.

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

OFFICE OF THE REGISTRAR ... 13 SEP 1933 MADRAS

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.

ரா. சுப்ர..., பொறுப்பாசிரியர்.

மாலை 5	ஸ்ரீமுக-ஆனி 1933-ஷ ஜுன்-ஜுலைமீ	மணி 3

ஓர் கேள்வி

யாத்திரிகரே! நீங்கள் செல்வது எங்கே!

மரஞ்செடி வழி நடுவே சிவந்த வைகறையில் சமுத்திர ஸ்நானஞ் செய்யப் போகிறேன்.

யாத்திரிகரே! அந்த சமுத்திர மெங்கே?

இந் நதியோட்டம் முடியுமங்கே வைகறை காலையாய் விரியும். அது நதிகள் மறையும் நிலயத்திலாகும்.

யாத்திரிகரே! உங்களுடன் வரும் வெகு பலர் எத்தனைபேர்?

அவர்களை எப்படி எண்ணுவதென எனக்கே தெரியாது. அவர்கள் நீரிலும் நிலத்திலும் நாளெல்லாம் கானஞ் செய்து, இரவு முழுதும் தங்கள் தங்கள் தீபங்களை ஏற்றிக்கொண்டு செல்லுகிறார்கள்.

அன்பே கடவுளின் சட்டம், கட்டளை. அறவழியே கடவுளை யடையும் நெறி. கடவுளுக்கு அடுத்தபடியானது அறமே.

19789)

வீரேச லிங்கம் பந்துலு.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் முதலில் அந் நாட்டு மக்களிடையில் எழுச்சி யுண்டாக வேண்டுவ தவசியம். அவ்வாறு பொது ஜனங்களிடையில் எழுச்சி யுண்டாவதற்கு அம் மக்களில் மனவிருள் நீங்கி விழிப் பேற்பட வேண்டும். பொது மக்களின் அறிவு நலம் வளர்ச்சியுற்று, அவர்களது அறியாமை யகன்ற பொழுதே நாட்டில் தேசாபிமானமும், பாஷாபிமானமும், சமூகாபிமானமும், பொது நலத்தில் ஊக்கமும், ஒற்றுமை யுணர்ச்சியும் ஓங்கி வளர்வனவாகும். பதினேழாவது நூற்றுண்டில் அடிமை

யாத்திரிகரே! சமுத்திரம் எத்தனை தூரம்?

எத்தனை தூரம் என நாமெல்லாம் வினவுகிறோம். நாம் பேசுவதை நிறுத்தினால் நீர் அலைகளின் ஆரவாரம் ஆகாசத்தில் பொங்கும். எப்பொழுதும் அருகிலும் ஆனால் அப்பாலுமிருப்பதாகப் புலனாகும்.

யாத்திரிகரே! வெயில் வன்மையுடன் வளர்கிறான். ஆமாம் நமது வழி தூரமாகி துக்கமுள்ளதுமாகும். ஊக்கம் குன்றினால் கானம் செய்வோம். உள்ளம் இளைத்தாலும் அதுவே துணையாகும்.

யாத்திரிகரே! இரவு முந்தினாலோ?

புதியகாலை கீதமுடன் புலனாகும்வரை நாம் தூங்கக் கீழே சாய்வோம். நம்மை அழைக்கும் கடல் காற்றிலே மிதப்பான்.

சாகரத்திலே நதி விழுந்து மறைந்தால், ஏன் சோகமுடனாக வேண்டும்?

—ரவீந்திரநாத் தாகூர்.

(மொழிபெயர்ப்பு.)

ஆயுளின் முடிவையும், மறு பிறப்பின் வருகையையும், அதன் தன்மையையும் அறியோம். இந்தக் காலம் இந்த நிகழ்ச்சி வரு மென்பதையும் தெரிந்திலோம். ஆதலின் நமது உயிர் உடலுடன் கூடியுள்ள போதே நாம் அறவினைகளைச் செய்தல் வேண்டும்.

வாழ்க்கையில் ஆழ்ந்து அல்லலுற்று நின்ற பிரான்சு தேசத்திய மக்களை, விழித்தெழுந்து வீரம் விளைத்து, அறிவாற்றல்களில் மிகுந்து, சுதந்திர தாகங்கொண்டு, தேசாபிமானம் படைத்து, நாட்டின் விடுதலையை நனி சாதிக்கும்படித் தூண்டும் முகத்தால், எண்ணற்ற நூல்களை எழுதிப் பரப்பி எழுச்சி யுண்டாக்கிய வால்டேர், ரூசோ போன்ற பண்டிதர்கள் பிறந்திராவிட்டால், பிரான்சின் நிலை எவ்வாறு யிருக்குமென்பதை எண்ணிப் பாருங்கள். ருஷிய தேசத்தைப் புதுக்கி யமைத்த லெனின் பண்டிதருடைய நூல்களின் பெருமை நுவலற்பாலதோ! பலபடக் கூறுவானேன்? ஒரு பண்டிதரின் பேனா முனையிலிருந்து தோன்றும், ஆவேசத்தை யள்ளிக் கொடுக்கும் நவநவமான நூல்கள் பலவும், அந் நாட்டு மக்களின் மனத்தில் அற்புதமான எழுச்சியைத் தூண்டிப் பெரும் பயன் விளைவிக்கின்றன வென்பதை யாரால் மறுக்க முடியும்? இன்று இந்தியாவில் பல துறைகளிலும் முதன்மையுற்று விளங்கும் வங்காள மாகாணம் இத்துணை முற்போக்கடைந் திருப்பதற்குக் காரணம் ஈசுவர சந்திர வித்யா சாகரர் என்ற பண்டிதர் வங்காள மொழியில் எண்ணற்ற நூல்களை எழுதி வங்காளியருக்கு வழங்கிய நவீன அறிவே யன்றோ? அது போல் இதுகாலை தென்னிந்தியாவில் தெலுங்கர்கள் மற்றவர்களைவிட பல துறைகளிலும் முதன்மை யடைந்திருப்பதற்கு மூலகாரணமாயிருந்து, ஆந்திர மொழியில் அநேக நூல்களை யியற்றிய அற்புத சேவை செய்த வீரேச லிங்கம் பந்துலு என்ற பண்டித மணியின் பெயரை யாரால் மறக்க முடியும்? தெலுங்கு மொழியில் செய்யுள் நூல்களன்றி வசன நூல்கள் வழக்கத்திலில்லாத காலத்தில் வசன நூல்களை எழுதி வழி காட்டியவரும், மேல் நாட்டு நவீன சாஸ்திரக் கருத்துக்களை ஆந்திர மொழியில் அள்ளிக் கொடுத்தவரும், நாட்டிடை ஆசார சீர்திருத்த வியக்கத்திற்கு அடிகோலியவரும், பாலிய விதவைகளின் பரிதாப நிலையைப் போக்கத் துணிந்து முன்னின்றுழைத்தவரும், பல திரப்பட்ட சமய சாஸ்திரக் குப்பைகளைக் களைந்து ஆஸ்திக மதக் கருத்துக்களின் கனத்தை விளக்கியவரும், சாதியின் பெயராலும், சமயத்தின் பெயராலும் மக்களைக் கவர்ந்துள்ள மூடக் கொள்கைகளை வேரறக் கண்டித்து விவேக மூட்டியவரும், உயர்வு தாழ்வுகளென்ற சாதி பேதப் பேய்களை விரட்டியடித்துத் தாம் பிராமண வகுப்பினராயினும் அல்லாதா ரனைவரோடும் சமத்துவத்தை நிலை நாட்டியவரும், ஆடவரைப் போல் பெண்டிரும் கல்வியறிவு பெற்றுக் கனமடைய வேண்டுமென்று கருதி யுழைத்தவரும்,

---

சூரியன் நாளென்னும் வாளால் நமது ஆயுளை எண்ணிச் சிதைத்து வருகிறான். அவன் நினைத்த நாளில், நமது ஆயுளை வாள் போன்று சிதைப்பான். உள்ளபோதே நமது பெயர் நிலைக்கும்படியான ஒரு தர்மத்தைச் செய்யவேண்டும்.

ஆந்திர பாஷையில் அரிய பத்திரிகைகளைப் பிரசுரித்து ஆந்திரரிடையில் ஆவேசத்தைக் கிளப்பியவரும், தேச நன்மைக்கான பல துறை யியக்கங்களுக்கும் ஆந்திர நாட்டில் இடமளித்து ஆதரித்தவரும் ஆகிய ஒரு பெரியார் யாவரெனக் கேட்குமிடத்து, தெலுங்கர் அனைவரும் ஒரு முகமாய் இராவ் பஹதூர். கந்து கூரி. வீரேச லிங்கம் பந்துலு என்று பகராமலிரார். எனவே அத்தகைய பெருமை படைத்த பெரியார் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றினைத் தமிழரும் அறிய வேண்டியது அவசியமாதலால் அவரது ஜீவிய சரித்திரச் சுருக்கத்தினை இங்கு தருகின்றோம்.

பிறப்பும் படிப்பும்

இராஜ ராஜ நரேந்திரன் முதலிய அரசர்களுக்கும், தெலுங்கு மொழியில் இலக்கண, இலக்கிய நூல்களுக்கு முதலாசிரியராகிய நன்னய பட்டர் முதலிய கவியரசர்களுக்கும் இருப்பிடமாய்த் திகழ்ந்த பண்டைப் பெருமை வாய்ந்த இராஜ மகேந்திரவரத்தில் (கோதாவரி ஜில்லா) 1848-ம் ஆண்டு ஏப்ரல்மீ 16வ ஞாயிற்றுக் கிழமை பகல் மூன்று நாழிகை யளவில் நமது வீரேச லிங்கம் பந்துலு பிறந்தார். அக் காலத்தில் அவரது பாட்டனாராகிய வீரேச லிங்கம் பந்துலு என்பவர் உயர்ந்த உத்தியோகத்திலிருந்து சிறந்த வீடும், போதிய செல்வமும் சம்பாதித்திருந்தார். நமது வீரேச லிங்கத்தின் தந்தையாரின் பெயர் சுப்பாராய பந்துலு என்பதாம்; அவரது அன்னையார் புன்னம்மா எனப்படுவார். இவர்களின் வீட்டுப் பெயர் கந்து கூர் என்பதாகும். ஆகவே, தெலுங்கு நாட்டாரின் வழக்கப்படி "கந்து கூரி; வீரேச லிங்கம் பந்துலு" என்றே இவர் அழைக்கப்பட்டார். இவரது பாட்டனாரின் காலத்திற்குப் பிறகு, அவரது குடும்பம் பல வகைகளிலும் நலிவுற்றுச் செல்வத்தை யிழந்து வந்ததாயினும், வீரேச லிங்கம் அவர்களின் தாயாரின் இடைவிடாத முயற்சியால் வீரேச லிங்கம் செல்வமாகவே வளர்ந்து வந்தார். லிங்கத்திற்கு நான்கு வயது நடைபெறுகையில் அவரது தந்தையார் காலமாயினார். ஆகவே, அது முதல் வீரேச லிங்கத்தை அவரது பெரிய தந்தையாராகிய வேங்கட ரத்னம் பந்துலு அவர்களே ஆதரித்துப் போஷித்து வந்தார். சிறு வயதில் வீரேச லிங்கம் கல்வி கற்பதற்காக ஆரம்பப் பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். அக் காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களாக வழங்கிய அப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் பெரும்பாலும் பண்டிதர்களாகவே யிருப்பர். எனவே அத் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தாய் மொழியாகிய தெலுங்கிற் சிறந்த அறிவு

பசுவைப் பால் கறந்த பிற்பாடு கன்றை ஊட்டவிட்டால், கன்றிற்கு பால் இருப்பது சந்தேகமே. உடலினின்று நமன் உயிர் கறந்த பின், நமது மக்கள் செய்யுங் கருமங்கள் நமது ஆன்மாவைப் புல்லுவது சந்தேகமானது.

பெற்றார். அப்பொழுதே தெலுங்கிலும், சமஸ்கிருதத்திலும் நிகண்டுகளைப் படித்து முடித்ததோடு, காவியங்களைப் படிக்கவும் பழக்கம் எய்தினார் அதன் மேல் துரைத்தன பாஷையாகிய ஆங்கிலத்தைக் கற்க வேண்டி, அக் காலத்திற் புதிதாக ஏற்படுத்தப்பட்ட துரைத்தனத்தாரின் ஆங்கிலப் பாடசாலையிற் சேர்ந்து படிக்கத் தொடங்கினார். தமது ஓய்வு நேரத்தை வீணாக்காது தம் வீட்டிலிருந்த ஓலைச்சுவடிகளாகிய பண்டைய நூல்கள் பலவற்றையும் படித்து வந்தார். அதனால் தெலுங்கு மொழியிலும், புராண இதிகாச நூல்களிலும் சிறு வயதிலேயே அவருக்கு அதிக பழக்கமுண்டாயிற்று. எவ் விஷயத்தையும் ஒரு முறைப் படித்த மாத்திரத்திலேயே ஞாபகத்தில் வைக்கத் தகுந்த ஆற்றல் அவருக்கு இயற்கையாக அமைந்திருந்தது. மேலும் தான் கொண்ட கருத்தை முடிப்பதில் பிடிவாதமும், கல்வியில் கனிந்த விருப்பமும், நல்லொழுக்கத்தில் ஆர்வமும் உடையவராக விளங்கினார். வீட்டிலிருந்த பெரிய தகப்பனார், பாட்டியார், தாயார் முதலிய பெரியோர்களிடத்திற் கீழ்ப்படிந்து நடக்குஞ் சுபாவத்தைக் கொண்டார். கடவுளிடத்து பக்தியும், ஆசார சீலமும், பரோபகாரத் தன்மையும், ஜீவகாருண்யமும் சிறு வயதினின்றே அவரிடத்துச் சிறந்து விளங்கின. எனவே பிற்காலத்தில் அவர் சிறந்த மேதாவியாக விளங்கியதற்கு அவையே காரணமாயின. "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பது பொய்யாமோ?

ஆங்கிலப் பாடசாலையில் படித்த முதல் வருடத்திலேயே வீரேச லிங்கம் பரீக்ஷையில் முதல் தரமாகத் தேர்ச்சி யடைந்தார். அதனால் பல பரிசுகள் பெற்றதோடு பாடசாலையில் சம்பளமில்லாமற் படிப்பதற்கு அனுமதிக்கப் பெற்றார். அதுமுதல் ஒவ்வொரு வருடப் பரீக்ஷையிலும் அவரே முதல்வராகத் தேர்ச்சியுற்று வந்தார். அதனால் அக் காலத்தில் பரீக்ஷாதிகாரிகளாலும், பாடசாலை ஆசிரியர்களாலும் பிற கனவான்களாலும் அவர் அதிகமாக நேசிக்கப்பட்டார். லிங்கம் அவர்களுக்குப் பதின்மூன்றாவது வயது நடைபெறுகையில் ஒன்பது வயதுடைய இராஜ்ய லக்ஷ்மி என்ற சிறு பெண்ணை அவருக்குக் கலியாணம் செய்வித்தனர். பிற்காலத்தில் பால்ய விவாகத்தை அவர் வன்மையாகக் கண்டித்து வந்தாராயினும், தமது பால்ய விவாகத்தால் தமக்கு அதிக துன்பம் நேர்ந்துவிடவில்லை யென்று கூறியுள்ளார். வீரேச லிங்கம் சிறு வயதினின்றே இருமல் முதலிய வியாதிகளால் அவஸ்தையுற்றாராகையால் துர்ப்பலமான தேகமுடையவரா யிருந்தார். மெலிந்த தேகமுடையவராயினும் மனோவலிமை வாய்ந்தவரா யிருந்தமை அதிசயிக்கத் தக்கதாகும். லிங்கம் ஆங்கிலப் பாடசாலை

அறம் என்பது இயல்பு. நாட்டிற்குத் தக்க இயல்புள்ள ஆசார நியமங்கள் ஏற்படுகின்றன. அவையே சுதேசிகளுக்கு மேன்மையானவை.

யில் ஆரம்பப் பரீக்ஷையில் தேறியதோடு 1867-ம் ஆண்டில் பிரவேச பரீக்ஷை வகுப்பில் சேர்ந்து படித்து வந்தார். அச் சமயத்தில் அவருக்கு ஆதாவு நல்கி வந்த அவரது பெரிய தந்தையார் நோய்வாய்ப்பட்டு தேகவியோக மடைந்தார். ஆகவே, அதன் பின் சின்னுட்கள் பாடசாலையை விட்டு ஏதேனும் உத்தியோகத்தில் அமரவேண்டுமென்று முயன்றுகொண்டிருந்தார். ஆயினும் வேலை கிடைக்காமையால் மீண்டும் பாடசாலையிற் சேர்ந்து படிக்கலானுர். இதனிடையில் தெலுங்கு மொழியில் சில சதகங்களும், புத்தகங்களும் எழுதினுர். அக் காலத்தில் நடைபெற்று வந்த "கோதாவரி வித்யா பிரபோதினி" என்ற பத்திரிகையில் பல வியாசங்கள் எழுதிவர ஆரம்பித்தார். பாடசாலை மாணவர்கள் சிலரோடு கூடி மாணவர் சங்கமொன் றேற்படுத்தி, அதில் வாரந்தோறும் பல விஷயங்களைப் பற்றிப் பிரசங்கங்கள் புரிந்து வரலானுர். பிரம்மானந்த கேசவசந்திர சேனரது பிரம்ம சமாஜ நூல்கள் சிலவற்றைப் படித்ததன் பயனும், ஆங்கிலப் பாடசாலையில் உதவி யாசிரியரா யிருந்த ஆத்மூரி. லக்ஷ்மீ நரசிம்மம் என்பவரது பிரம்ம சமாஜக் கருத்துக்களை விளக்கிய உரைகளைக் கேட்டதன் பயனும் வீரேச லிங்கம் விக்கிரகாராதனையில் வெறுப்பும், பிரம்மோபாசனையில் விருப்பும் கொள்ளலாயினுர். 1868-ம் ஆண்டுக்குப் பின்னர் பாடசாலையை விட்டு விட்டாராயினும், தனிமையில் படித்து 1870-ம் ஆண்டில் சர்வ கலாசாலைப் பிரவேசப் பரீக்ஷைக்குச் (மெட்ரிகுலேஷன்) சென்று தேர்ச்சி யடைந்தார். அதனுல் அவர் தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் சிறந்த அனுபவம் வாய்ந்திருந்ததோடு, ஆங்கிலத்திலும் நல்ல அறிவு பெற்றவரானுர். ஆங்கிலப் பாடசாலை ஆசிரியருக்கு விளங்காதவற்றையும் மாணவராகிய லிங்கம் அப்பொழுதே அர்த்தம் விளக்கிக் கூறும் ஆற்றல் வாய்ந்திருந்தார். அதுகாலை வீரேச லிங்கம் ஆந்திர மொழியில் கடினமான நிபந்தனைகளோடு கூடிய செய்யுள் காவியங்கள் சில எழுதினுர். வட மொழிக் கலப்பற்ற தனித் தெலுங்கில் உதடுகள் ஒட்டாத எழுத்துக்களைக் கொண்டு வசனம் சிறிதுங் கலவாமற் செய்யுள்களாக நைடத காவியத்தை எழுதினுர். "இரசிக ஜன மனோரஞ்சனம்" என்பது போன்ற மற்றுஞ் சில காவிய நூல்களை எழுதி முடித்தார். அவற்றைக் கண்ணுற்ற பல பண்டிதர்கள் அவரது கவிதையின் ஆற்றலுக்கு மெச்சி வந்தார்கள்.

உத்தியோகமும் உழைப்பும்

வீரேச லிங்கம் 1871-ம் ஆண்டில் இராஜ மகேந்திரம் ஜில்லா பாடசாலையில் உதவியாசிரியராக அமர்ந்தார். மாணவர்களுக்குப்

பிற நாட்டின் இயல்பி னமைந்த நடை வுடைகள் நம் நாட்டிற்கு ஒவ்வாதவை.

போதிக்கும் திறமையிலும், அவர்களை நடு நிலைமையோடு நடத்தும் பான்மையிலும் அவர் வெகுவாகப் புகழப்பட்டார். அவ் வேலையிலிருந்து கொண்டே வக்கீல் வேலைக்குப் படிக்க விரும்பினுர். அவ்வாறே 1879-ம் ஆண்டில் நடைபெற்ற "கிரிமினல் ஹையர் கிரேட்" என்ற பரீக்ஷைக்குச் சென்று தேர்ச்சி யடைந்தார். பின்னர் இராஜ மகேந்திரவரத்தின் பாடசாலை வேலையின் காலம் முடிவடைந்தபடியால் கோரங்கி என்ற ஊரிலிருந்த ஆங்கிலப் பாடசாலையின் தலைமை யாசிரியராகச் சென்று வேலை பார்க்கலானுர். சின்னுட்களில் அவ்விடத்தை விட்டு தவளேசுவரத்தில் ஆங்கிலப் பாடசாலையின் தலைமை யாசிரியரானுர். இதனிடையில் சோதிடம், பேய் முதலியவற்றைப் பற்றி ஆராய்ந்து வந்ததோடு அவை யனைத்தும் வீண் கற்பனைகளென்றும், உண்மைக்கு மாறுனவை யென்றும் விளக்கி எழுதினுர். பில்லி, சூனியப், சாமியாடல், சகுனம் முதலியவற்றைப் பற்றிய மூட நம்பிக்கைகளைக் கண்டித்துப் பத்திரிகைகளுக்கு எழுதினுர். பெண்கள் படிப்பதென்பது அதிசயமாகப் பாராட்டப்பட்ட அக் காலத்தில் நமது வீரேச லிங்கம் அவர்கள் பெண் கல்வியின் அவசியத்தை வற்புறுத்திப் பத்திரிகைகளுக்கு எழுதிவரலானுர். அக் காலத்தில் தெலுங்கு மொழிப் பண்டிதராய் விளங்கிய கோக்கண்ட. வேங்கட ரத்னம் பந்துலு அவர்கள் சநாதன வைதிக ஆசாரத்தில் பற்றுகொண்டவராய் வீரேச லிங்கம் அவர்களின் வியாசங்களைக் கண்டித்துப் பெண் கல்வி கூடாதென வற்புறுத்தி எழுத முற்பட்டார். அவ் விவாதங்கள் நீண்ட நாள் நடைபெற்று வந்தன. அதற்கென "ஆந்திர பாஷா சஞ்சீவினி" "புருஷார்த்தப் பிரதாயினி" என்ற இரு பத்திரிகைகளும் உழைத்து வந்தன. வாலிப உலகம் வீரேச லிங்கம் அவர்களின் வாதத்தை யாதரித்து வந்தது. கர்னுடக வாதிகளாகிய வைதீகர்கள் சிலரே கொக்கண்ட. வெங்கட ரத்னம் அவர்களைப் புகழ்ந்து வந்தார்கள். இப் பத்திரிகை விவாதங்களால் தெலுங்கு நாட்டு மக்கள் பத்திரிகைப் படிப்பில் ஆவல் கொண்டனர். சாஸ்திர வாதத்தோடும், யுக்தி வாதத்தோடும் வீரேச லிங்கம் எழுதிய எழுத்துக்கள் பொது ஜனங்களின் ஆவேசத்தைக் கிளப்பி விட்டன. எங்கும் பெண் கல்வியை யாதரிக்கும் பேச்சுகள் பிறந்தன. அதற்கேற்ப பொது ஜனங்கள் முன் வந்து ஆங்காங்கே பெண் பாடசாலைகளை ஸ்தாபிக்க முற்பட்டனர். பலரும் தன் பெண் குழந்தைகளைப் படிப்பிக்க ஆரம்பித்தனர். 1874-ம் ஆண்டில் "விவேக வர்த்தனி" என்ற பெயரால் லிங்கம் அவர்களே சொந்தத்தில் ஒரு பத்திரிகையை நடத்தத் தொடங்கினுர். அப் பத்திரிகையின் மூலமாய் அவர் எழுதிய

உடை, உணவு, வழிபாடு, கல்வி, தொழில், அரசியல் முதலியவற்றை நம் மியல்பிற்குத் தக்கபடி அமைத்துக்கொள்வதே தன்னறமாகும். பிற நாட்டை இவற்றிற் பின் பற்றுதல் நமது உடற்கும் உயிர்க்கும் இடராகும்.

எழுத்துக்கள் பல. சமயம், சாத்திரம், சமூகம், அரசியல், சரித்திரம், இலக்கணம், இலக்கியம் முதலிய துறைகளைப் பற்றி எண்ணற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். தெலுங்கு நாட்டில் அக் காலத்தில் பண்டிதர்களாகத் திகழ்ந்த பலரும் அவரது ஆணித்தரமான எழுத்துக்களைக் கண்டு ஆனந்தித்ததோடு அவரை யாதரித்தும் வந்தனர். மன்னவ. புச்சய்ய பந்துலு, வாவிலால. வாசுதேவ சாஸ்திரி முதலிய பண்டிதர்கள் அவரது நெருங்கிய நட்பினராக விருந்தனர். சரித்திர ஆராய்ச்சியில் பெயர் போனவர்களாக விளங்கும் சிலுகூர். வீரபத்திர ராவ் அவர்களும், மானவல்லி. இராமகிருஷ்ண கவி அவர்களும் வீரேச லிங்க மவர்களின் அரிய நண்பர்களே யாவர். பலவாறு கூறுவானேன்? இன்று ஆந்திர தேசத்திற் சிறந்து விளங்கும் பண்டிதர்கள், தேசத் தலைவர்கள், சமூக ஊழியர்கள் பலபேர் வீரேச லிங்கம் பந்துலுவின் ஆப்த நேயர்களும், சீடர்களுமே யாவர்.

1875-ம் ஆண்டில் பசவராஜு கவரராஜு அவர்கள் முன்னின்று இராஜ மகேந்திரவரத்தில் தேசிய பாடசாலைச் சங்கம் (School Club) ஸ்தாபித்த பொழுது, அதன் ஆரம்ப விழாவை நமது வீரேச லிங்கம் அவர்களை தலைமை பூண்டு நடாத்தினார்கள். அது முதல் லிங்கம் அவர்களுக்கு கவரராஜு அவர்கள் இணைபிரியா நண்பராகிப் பொது நலக் காரியங்கள் பலவற்றில் உடனிருந்து உழைத்து வந்தார். அதே வருடத்தில் லிங்கம் அவர்கள் சுருக்கெழுத்து (Precis writing)ப் பரீக்ஷைக்கு ஆஜராவதற்காக இராஜ மகேந்திரம் சென்றார். அப்போது அங்கு கவர்ன்மெண்ட் கலாசாலையின் தலைவராகவிருந்த மெட்காப் துரை யவர்கள் தெலுங்கு மொழியைப் பயின்று கொண்டிருந்தார். அப்பொழுது அவருக்கு ஒரு வாக்கியத்திற்குச் சரியான பொருள் விளங்காமற் போயிற்று. பல பேரைக் கேட்டும் சந்தேகம் தெளியாதவராய்க் கடைசியில் வீரேச லிங்கம் பந்துலு அவர்களின் ஆற்றலைக் கேள்வியுற்றவராய், பரீக்ஷை நடந்து கொண்டிருக்கையிலேயே லிங்கம் அவர்களிடத்திற்கு வந்து, அதன் சரியான பொருளைக் கேட்டுத் தெரிந்து சந்தோஷமுற்றார். அது முதல் துரை யவர்கள் அவரிடத்து அன்பும், ஆதரவுங்கொண்டு நேசம் பாராட்டினார். மேலே குறித்த சுருக்கெழுத்துப் பரீக்ஷையிலும் லிங்கம் அவர்கள் தேர்ச்சியடைந்தபடியால், அப்பொழுது சப் மாஜிஸ்திரேட் வேலைக்கு அவர் தகுதி யுடையவரானார். மற்றுமிரண்டு புத்தகங்களைப் படித்துப் பரீக்ஷைக் கொடுத்து விட்டாராயின் அக் காலத்தில் டிப்டி கலெக்டர் என்ற உத்தியோகத்தையும் பெறக்

தன் வீட்டிலும் நாட்டிலும் உள்ள சகோதரர் "தொடர்ந்தோர்" என்போர். அவருக்குற்ற துயரை நீக்குதல் செல்வர் கடன்.

கூடியவரா யிருந்தார். ஆயினும் அவரது மனது அத் துறையில் உத்தியோகம் பெற ஒருப்படவில்லை. மேலும் ஆரம்பத்தில் அவர் நினைத்தபடி வக்கீல் தொழிலுக்குரிய ஒரு பரீக்ஷையில் தேர்ச்சி யுற்றாராயினும், வக்கீல் தொழில் வஞ்சனையும், சூதும் வாய்ந்ததென்பதைக் கருதி அதையும் அவர் ஆசிக்கவில்லை. பாவமற்றதும், சுதந்திரமானதும், பொதுஜன சேவைக்கும், நாட்டு மொழிக்கும் உழைப்பதற்கேற்ற வசதிகள் வாய்ந்ததுமான உபாத்திமைத் தொழிலையே அவர் மனம் நாடி யிருந்தது.

1876-ம் ஆண்டில் தவளேசுவரத்தில் தாம் பார்த்து வந்த தலைமையாசிரியர் வேலையைத் தேவையில்லையென விட்டுவிட்டு, இராஜ மகேந்திரத்திற்கே வந்து "விவேக வர்த்தனி" பத்திரிகையைச் சிறப்புடன் நடத்த முற்பட்டார். அப் பத்திரிகையின் நோக்கம் தாய் மொழி வளர்ச்சியும், தேச நன்மையு மெனப்பட்டது. தாய்மொழியில் வசன நடையில் சிறந்த அறிவு தரும் நூல்கள் பலவற்றை எழுதி வெளியிடுவதும், பூர்வீக இலக்கிய இலக்கண நூல்களைச் சுலப நடையில் எழுதி யாவருக்கும் உதவுவதும், தேசப் பிரஜைகளிடம் காணப்படும் துராசாரங்களைக் கண்டித்தும், அவர்களைக் கவர்ந்துள்ள மூடக் கொள்கைகளை நீக்கியும் அவர்களை நல் வழிப்படுத்துவதும், அரசாங்க உத்தியோகங்களில் அமர்ந்துள்ள மக்கள் கர்வத்தில் மூழ்கி, நீதிக்கு முரணான வழியில் நடந்துவரும் கொடுஞ் செயல்களைக் கண்டித்து அவர்களைத் திருத்துவதும், பெண்கள் சமூகத்தை அஞ்ஞானப் படுகுழியினின்றும் மேலெழுப்பி இந்திய சமூகத்தைப் புனருத்தாரணம் செய்வதும், பாலிய விதவைகளுக்குக் கதிமோக்ஷ முண்டாக்குவதும், பல தெய்வ வணக்கங்களைக் கண்டித்து ஏகேசுவர உபாசனையை (ஒரு தெய்வ வணக்கத்தை) நிலைப்படுத்துவதும் இன்னோரன்ன பல அரிய கொள்கைகளைச் சாதிக்க அஃது செய்து வந்த வேலைகள் பலப்பல. அக் காலத்தில் தனவந்தர்கள் தாசிகள் வீடு செல்வதும், தங்கள் வீடுகளில் நடைபெறும் கலியாணம் முதலிய காலங்களில் தாசிகளின் கச்சேரிகளை நடத்துவதும் கௌரவமெனக் கருதி வந்தனர். "விவேக வர்த்தனி"யின் விவேக போதனைகளால் கூடிய விரைவில் அச் செயல்கள் நாட்டில் வெட்கத்தை யுண்டாக்குவதாகிவிட்டன. இலஞ்சம் வாங்கும் உத்தியோகஸ்தர்களுக்கு அப் பத்திரிகையைக் கண்டால் கடும் பயமாக விருந்தது. பல உத்தியோகஸ்தர்கள் செய்து வந்த குற்றங்கள் அப் பத்திரிகையால் வெளிப்படுத்தப்பட்டு தண்டனை யுற்றனர். சில அதிகாரிகள் கோபமுற்று

நாம் தர்மத்தை இழந்ததனாலேதான் இப்படி வீழ்ந்தோம். நாட்டின் விளைவோ பரதேசம் போகிறது.

அப் பத்திரிகையின் மீது வழக்குத் தொடர்ந்தும் மீண்டும் அவமானமே யடைந்தனர். அவ்வாறு துஷ்டர்களைக் கண்டிப்பதோடமையாது, நடுவு நிலைமையினின்று சிஷ்டர்களைப் புகழ்ந்து பாராட்டுவதிலும் அப் பத்திரிகைப் பின் வாங்கியதில்லை. அவ்விதம் வீரேச லிங்கம் அவர்கள் பத்திரிகையின் மூலம் செய்த ஊழியம் மிகவாகும். 1876-ம் ஆண்டில் மீண்டும் மெட்காப் துரை யவர்களின் வேண்டுகோளின் மீது இராஜ மகேந்திரம் துரைத்தன கலாசாலையில் தெலுங்கு பண்டிதராக வேலை பார்க்க முற்பட்டார். பந்துலு அவர்கள் பத்திரிகைகளின் மூலமாய் எழுதி வந்ததோடமையாது, ஆங்காங்கே சபைகள் கூட்டி உபந்நியாசங்கள் புரிந்துவந்தார். நாட்டில் எங்கும் நவீனக் கருத்துக்கள் உதயமாயின. உருத்திராக்ஷம், விபூதி, நாமம் போன்ற மத சம்பந்தமான வெளி வேஷங்கள் பிரயோஜனமற்றவை யெனக் கூறி, ஒரே கடவுளை யாவரும் வணங்கிப் பிரார்த்தனை புரிய வேண்டுமெனப் பிரசாரம் செய்துவந்தார். இராஜ மகேந்திரத்தில் முதன் முதலாக வீரேச லிங்கம் அவர்களின் வீட்டிலேயே 1878-ம் ஆண்டில் "பிரார்த்தனை சமாஜம்" ஏற்படுத்தப்பட்டது. அதன் சார்பில் அடிக்கடி நண்பர்கள் பலர் ஒன்றுகூடிக் கடவுளை வணங்கிப் பிரார்த்தனை புரிந்துவரத் தலைப்பட்டனர். அச் சபை இன்றும் இராஜ மகேந்திரத்தில் இடைவிடாது நடைபெற்று வருகிறது.

விதவா விவாகமும் விசேஷ முயற்சிகளும்

1881-ம் வருடம் வங்காளத்தினின்றும் பிரம்ம சமாஜத்தின் ஆசாரியராகிய பண்டித சிவநாத சாஸ்திரிகள் இராஜமகேந்திரத்திற்கு வந்து பல விஷயங்களைப்பற்றிச் சொற்பெருக்குகள் இட்டார். அப்பொழுது அப் பண்டிதருக்கும் நமது பந்துலுகாருக்கும் நெருங்கிய நட்புண்டாயிற்று. லிங்கம் அவர்கள் அவரோடு கல்கத்தாவரையிற் சென்று பல தரும ஸ்தாபனங்களை நேரிற் பார்வையிட்டு வந்தார். பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கு நாடகங்களும், பிரகசனங்கள் என்ற விகடக் கதைகளும் ஏற்ற சாதனங்கள் என்பதைக் கருதி, அத் துறையிலும் பல நூல்கள் எழுத முற்பட்டார். அரிய கருத்துக்களை எளிய நடையில் சுலபமான வாக்கியங்களில் அமைக்கும் ஆற்றல் அவருக்கே சொந்தமாக விருந்தது. அவரது நாடகங்களில் "வியவஹார தர்ம போதினி" என்பது 1880-ம் ஆண்டில் முதன் முதலாக நாடக மேடையில் நடிக்கப்பட்டது. 1881-ம் வருடத்தில் இராஜமகேந்திரத்தில் ஒரு நாடக சபை ஸ்தாபிக்கப்பட்டு, தெலுங்கில் புதிய முறையில் நாடகங்களை (Drama) நடத்தத் தலைப்பட்டது. அதற்கு வீரேசலிங்கம் வேண்டிய உதவிகள் புரிந்துவந்தார். பின்னர்

20 கோடி மக்கள் வறுமையால் நசுங்குகின்றனர். ஆடைக்கும் உணவிற்குமே அடிமையாகி இந்தியர் ஆண்மை யிழந்தனர்.

1913-ம் ஆண்டில் ஹிந்து நாடக சமாஜம் என்ற பெயரால் மற்றொரு சபை தொடங்கப்பெற்றது. அதன் ஆரம்ப விழாவும் லிங்கமவர்களின் தலைமையிலேயே நடைபெற்றது. பாலிய விதவைகளைப் பரிதாபகரமான கட்டாயக் கைமை வாழ்க்கையினின்றும் மீட்டு, அவர்களுக்கு மறுமணம் புரிவிக்கவேண்டுவது அவசியமும், நியாயமுமானதென்று சாஸ்திர ஆதாரங்களோடு பிரசங்கங்கள் புரிந்தும், புத்தகங்கள் பிரசுரித்தும் வந்ததல்லாமல், லிங்கம் அவர்கள் செய்கையில் மறுமணங்களை நடத்துவதற்கென 1884-ம் ஆண்டில் இராஜமகேந்திரத்தில் "விதவா விவாஹ சபை" யொன்றை ஸ்தாபித்தார். அப்பொழுது காக்கிநாடாவில் நீதிபதியாகவிருந்த கஞ்சி. கிருஷ்ணசுவாமி ராவ் அவர்களின் தூண்டுதலால் ஜமீன்தாராகிய பைடா இராமகிருஷ்ணய்யா அவர்கள் பதினாயிரம் ரூபாய்களை அச் சபைக்கு நன்கொடையாகக் கொடுத்துதவினார். வீரேசலிங்கம் அவர்கள் சென்னைபோன்ற நகரங்களில் விதவா விவாகத்தின் அவசியத்தைப்பற்றி உபந்நியாசங்கள் புரிந்து, ஆங்காங்கே விதவா விவாகச் சபைக்குப் பொருளுதவியைத் தேடினார். முதன்முதலில் பாலிய விதவைகளைத் தேடி, அவர்களுக்குத் தைரியமூட்டி, அவர்களைச் சம்மதிக்கச் செய்து, அவர்களை விவாகம் செய்துகொள்ளத்தக்க வாலிபர்களைத் தேர்ந்தெடுத்து, விவாகம் செய்விப்பது எவ்வளவோ கடினமாகத் தென்பட்டது. ஆயினும் லிங்கம் அவர்கள் கொண்ட முயற்சியில் தளர்ச்சியடையாமல் தமது பள்ளி மாணவர்களினுடையவும், ஆப்த மித்திரர்களினுடையவும் துணை வலியால் இரண்டொரு விவாஹங்களை நடத்தி முடித்தார். அச் சமயத்தில் வைதிகர்களாகிய பிராமணர்கள் சிலர் லிங்கம் அவர்களுக்கு இழைத்த இடையூறுகள் பலவாகும். சங்கராச்சாரியாரைக் கொண்டு பகிஷ்காரப் பத்திரிகையைப் பந்துலு அவர்களுக்குக் கொடுக்கச்செய்தனர். விதவா விவாகங்கள் நடைபெற ஒட்டாதவாறு ஆள் பலத்தாலும், பணத்தின் பலத்தாலும் பல தடைகள் செய்தனர். ஆயினும் அவையனைத்திலும் லிங்கம் வெற்றியுற்றதோடு ஒன்றன்பின் ஒன்றாக மற்றும் பல மறுமணங்களை நடத்திவந்தார். அவ் விஷயத்தில் அவருக்கு உதவியாகவிருந்து மேன்மேலும் ஊக்கிவந்த அவரது அருமை மனைவியாகிய இராஜ்ய லக்ஷ்மியம்மாளின் உழைப்பு நன்கு மதிக்கத் தக்கதாகும். 1884-ல் தோற்றுவிக்கப்பட்ட விதவா விவாக சபை 1891-ல் மறைந்துபோனபோதிலும், விதவா விவாகங்கள் பலவற்றை லிங்கம் அவர்கள் சொந்தச் செலவில் தாமே நடத்திவைத்து வந்தார். அவர் காலத்தில் அவரால் சுமார் 37 விதவா விவாகங்கள் செய்து முடிக்கப்பட்டன. அதன் பயனைய் இன்று தெலுங்கு நாட்

கதருடுத்தி, இராட்டினஞ் சுற்றி கிராமங்களில் விவசாயத்தைப் பெருக்கி, கள் தவிர்த்து, தீண்டாமை, விவகாரம், வேற்றுமை, விதேச சாமான்கள், பயம், ஒப்பந்தக்கூலி யாதல் முதலியவற்றை ஒழிக்க வேண்டும்.

டில் பல ஜாதிகளிலும் விதவா விவாகங்கள் நடைபெறுவது சர்வ சாதாரணமாகிவிட்டது.

பொதுநலத் தொண்டும் புத்தகப் பிரசுரங்களும்

அக் காலத்தில் மாணவர்கள் பாடசாலையிற் படிப்பதற்கேற்ற பாடப் புத்தகங்கள் இல்லாத குறையைக் கவனித்து நமது வீரேச லிங்கம் தெலுங்கில் அநேக பாடப் புத்தகங்களை எழுதி வெளியிட்டார். அவை துரைத்தனத்தாரின் பாடப் புத்தகக் கமிட்டியாரால் அங்கீகரிக்கப்பட்டுப் பாடசாலைகளில் பாடப் புத்தகங்களாக வைக்கப்பட்டன. அதனால் லிங்கம் அவர்களின் பொருள் வருவாய் அதிகரிக்கத் தலைப்பட்டது. வருவாய் மேன்மேலும் அதிகப்பட்டால் சிலருக்குக் கர்வமும், சுயநலமும் அதிகப்படுவது இயற்கை; ஆனால் நமது பந்துலு அவர்களுக்கோ அதற்கு நேர்மாறாகத் தாழ்மையும், பரோபகாரமுமே வளர்ந்தோங்கலாயின. அவரிடத்தில் மிஞ்சின பொருள் அனைத்தும் பரோபகாரத்திற்கே செலவாகிவந்தது. 1898-ம் ஆண்டில் சென்னைச் சர்வகலாசாலைக்கு ஒரு அங்கத்தினராக நமது வீரேசலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டார். சென்னை பாடசாலை சுதேச பாஷா புத்தகச் சங்கத்தார் அவரைக் காரிய நிர்வாகிகளில் ஒருவராகச் செய்துகொண்டனர். துரைத்தனத்தார் டெக்ஸ்ட் புக் கமிட்டியிலும் அவரை அங்கத்தினராக்கினர். கடைசியில் டிப்டி கலெக்டர் முதலியோரின் தெலுங்கு பரீக்ஷையின் பரீக்ஷாதிகாரியாக அமர்த்தப்பட்டார். 1893-ம் ஆண்டு பிறப்பின்போது துரைத்தனத்தார் "இராவ் பஹதூர்" என்ற பட்டத்தை பந்துலு அவர்களுக்கு வழங்கி அவரைக் கௌரவித்தனர். இராஜமகேந்திரவர நகர சபையிலும், தாலுகா, ஜில்லா போர்டுகளிலும் அவர் அங்கத்தினராயிருந்து அரிய ஊழியம் செய்தார். சின்னாட்கள் நகர சபையின் உதவித் தலைவராக விருந்து நகரத்திற்குப் புரிந்த நன்மைகள் பல. 1887-வது ஆண்டில் சென்னையில் நடைபெற்ற தேசிய காங்கிரஸ் மகா சபைக்கு வீரேசலிங்கம் பிரதிநிதியாகச் சென்றார். அரசியல் சீர்திருத்தங்களோடு, சாதி, சமயம், சமூகம் முதலியவற்றிலும் காலத்திற்கேற்ற சீர்திருத்தங்கள் தோன்றிவர வேண்டிய தவசியம் என்ற கருத்தை வலியுறுத்தினார். 1898-ம் ஆண்டில் சென்னையில் காங்கிரஸ் நடைபெற்றபோது அத்துடன் கூடிய ஆசார சீர்திருத்த மகாநாட்டுக்கு வீரேசலிங்கம் அவர்கள் தலைமைப் பூண்டு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். அம் மகாசபையில் மகாதேவ கோவிந்த ரானடே அவர்கள் "தென்னிந்திய வித்யா சாகரர்" என்று இவருக்குப் பட்டஞ் சூட்டினார். 1902வது

நமக்குச் சிறந்த தேசீய உணர்ச்சி நரம்புகளில் ஊக்கமாக ஏறவேண்டும். ஒவ்வொருவரும் தாம் தாம் பாரத தேசமென்று உணருக.

ஜூன்மீ 14-ம் தேதியில் காக்கினாடாவில் நிகழ்ந்த மாகாண ஆசார சீர்திருத்த மகாநாட்டுக்கும் லிங்கம் அவர்களே தலைமை வகித்தார். அதுபோல் பல சபைகளுக்கு அக்கிராசனம் வகித்தும், பல சபைகளுக்கு உபந்நியாசகராகச் சென்றும் சீர்திருத்தக் கருத்துக்களை எங்கும் பரப்பினார்.

தெலுங்கு மொழியில் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவாக அவர் எழுதி வெளியிட்டார். பண்டைத் தெலுங்குப் புலவர்கள் பலரது சரித்திரங்களையும் ஆராய்ந்து எழுதினார். பல பெரியோர்களது ஜீவிய சரித்திரங்களை ஆந்திர பாஷையில் சுலப நடையில் எழுதிப் பிரசுரித்தார். சித்திரக் கவிகள் எழுதுவதிலும் சிறந்து விளங்கினார். அஷ்டாவதானமும் செய்து தம் ஆற்றலை வெளியிட்டார். முதன் முதலாகத் தெலுங்கு மொழியில் நவீனங்கள் (நாவல்கள்) எழுத ஆரம்பித்தார். அவர் எழுதி வெளியிட்ட "இராஜ சேகர சரித்திரம்" என்ற நாவலை அக் காலத்தில் ஸ்ரீகாகுளத்தில் அமெரிக்கன் மிஷன் தலைவராக விருந்த ரேவரேண்ட் ஹச்சின்சன் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து "அதிர்ஷ்ட சக்கரம்" (Fortune's Wheel) என்ற பெயரால் சித்திரப் படங்களுடன் லண்டனில் அச்சிட்டுப் பிரசுரித்தார். அப் புத்தகத்தைப்பற்றி 30–9–1887 தேதிய "லண்டன் டைம்ஸ்" பத்திரிகை வெகுவாகப் புகழ்ந்து மதிப்புரையிடலாயிற்று. இலஞ்சம் வாங்கும் அதிகாரிகளையும், ஆசார சீர்திருத்தக் கருத்துக்களைக் கண்டிக்கும் சனாதன வாதிகளையும் நகைச்சுவையில் கண்டித்து, அவர்களுடைய மறச் செயல்களை பகிரங்கமாக வெளியிட்டுப் பரிகசித்து, பொதுஜனங்களுக்கு உண்மையுணர்ச்சியூட்டுவதற்கெனத் தனியாக "ஹாஸ்ய சஞ்சீவினி" என்ற பெயரால் மற்றொரு விகட மாதப் பத்திரிகையை வெளியிட்டார். பெண்கள் இயக்க வளர்ச்சிக்கெனவே "சதீஹித போதினி" என்று இன்னொரு சஞ்சிகையும் பிரசுரித்து வந்தார். சின்னாட்களுக்குப் பிறகு "சத்யவாதினி" என்ற பெயருடன் ஆங்கிலத்திலும், தெலுங்கிலுமாக ஒரு வாரப் பத்திரிகையும் நடத்திவரலானார். இந்தியப் பெண்களின் நேரிய வாழ்க்கையை நிதர்சனப்படுத்தும் வகையில் "சத்தியவதி சரித்திரம்" என்ற பெயரோடு அவர் எழுதிப் பிரசுரித்த நவீனமொன்று கன்னடம், தமிழ், இங்கிலீஷ் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தது. அதுபோன்ற பல அரிய நூல்கள் எழுதி வெளியிட்டார். இக் காலத்தில் மேல்நாட்டுக் கதைகளைத் தழுவிச் சிற்றின்ப ஊழல்களை விரிவாக விவரித்து, படாடோபமான பெயர்

இமயத் தலையும், குமரிப் பாதமும், கங்கைக் கூந்தலும், கிழக்கு மேற்கு மலைத் தொடர் கால்களும், விந்திய மார்புமுள்ள வீரராக உங்களைப் பாவித்துக்கொள்ளுங்கள்.

களோடு நாவல்களை எழுதிப் பிரசுரித்து, சுடச்சுட விற்றுப் பணந் திரட்டிவரும் ஆசிரியர்களைப் போலன்றி, நமது வீரேசலிங்கம் அவர்கள் தமது ஒவ்வொரு நூலிலும் சமூக, நீதி, மத, ஆசார சம்பந்தமான உயரிய கருத்துக்களை வாசகர்களின் மனத்தில் ஊன்றும் வகையில் புகுத்தெழுதுவதே நோக்கமாகக் கொண்டார். எனவே தெலுங்கு நாடெங்கும் அவரது நூல்கள் மக்கள் மனத்தில் புத்துணர்ச்சியை யூட்டிவந்தன.

இராஜ இராம மோகன ராயர் இங்கிலாந்திற்குச் சென்றிருந்தபோது நோய்வாய்ப்பட்டு அங்கே இன்னுயிர் நீத்தாரன்றோ? அவ்வாறு அவர் அங்கு அசௌக்கியமுற்றிருந்த காலத்தில் அவருக்கு மிஸ். கார்பெண்டர் முதலியவர்களோடு உடனிருந்து உபசாரங்கள் செய்துவந்த மிஸ். மியானிங் என்ற துரைசானியார் தாம் நடத்திவந்த பத்திரிகையில் நமது வீரேசலிங்கம் எழுதிய "இராஜ சேகர சரித்திர"த்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடத் தொடங்கினார். அவ் வம்மையார் லிங்கம் அவர்கள் செய்துவந்த சமூக நலத்தொண்டுகள் பலவற்றையும் கேள்விப்பட்டிருந்தா ராதலால், அவர் இந்தியாவுக்கு வந்தபோது சென்னையில் வீரேசலிங்கம் அவர்களின் இல்லத்திற்குச் சென்று, லிங்கம் அவர்களின் மனைவியாரைக் கட்டித் தழுவி யானந்தமடைந்து, அவரையும், அவரது கணவரையும் வெகுவாகப் புகழ்ந்தார். அவ் வம்மையார், இங்கிலாந்தில் நேரில் இராமமோகனர் அசௌக்கியமுற்றிருந்த காலையில் கத்தரிக்கப்பட்ட அவரது தலைமயிரிற் சிறிதை எடுத்துத் தம்மிடம் பத்திரமாய் வைத்திருந்ததை வீரேசலிங்கத்திற்கு வெகுமதியாக அளித்துச் சென்றார். அவ் வற்புதப் பொருளை பந்துலு அவர்கள் பத்திரமாகக் காப்பாற்றிவந்தார். மிஸ். மியானிங் அம்மையார் அவ்வளவோ டமையாது சீமைக்குச் சென்ற பின்னர் தமது மரண சாசனத்தில் தமது சொத்திற் சிறிது வீரேசலிங்கம் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று எழுதினார். அதன்படியே கிடைத்த பொருளை லிங்கம் அவர்கள் சமூக சீர்திருத்தத்திற்கான பொதுக் காரியங்களுக்கே உபயோகித்தார்.

புத்தக ஆராய்ச்சிகள் செய்யவும், பொதுநல உழைப்பில் ஆக்கம் பெறவுங் கருதி வீரேசலிங்கம் சில வருடங்கள் சென்னையில் வந்து தங்கினார். அச் சமயத்தில் சென்னை, மாகாணக் கல்லூரியில் தலைமைத் தெலுங்கு பண்டிதராக வேலைபார்த்து வந்தார். பின்னர் இராஜமகேந்திரத்திற்கே சென்று நிலையாக வசித்துவந்தார். வீரேசலிங்கம் ஆரம்பத்தினின்றும் பிரம்ம சமாஜக் கருத்துக்களில் பேரார

இந்தியாவின் நலம் எனது நலம்; பாரத தேவி எனது குல தெய்வம்; பாரத தேவியின் பாத தூளி யெல்லாம் என் விபூதிப் பிரசாதம். பாரத நாட்டின் மீதுள்ள விருப்பினாலன்றோ கண்ணனும் மண்ணை யுண்டான்!

வம் பெற்றிருந்தாராயினும், கல்கத்தாவினின்றும் பாபு ஹேமசந்திர சர்க்கார் அவர்கள் இராஜமகேந்திரத்திற்கு வந்தபோதே பிரம்ம சமாஜத்தைத் தழுவினார். தான் பிரம்ம சமாஜியானதன் காரணமாக 1906-ம் ஆண்டு பிப்ரவரிமீ 15உயில் தமது தந்தையாரின் சிராத்தத்தை பிரம்ம சமாஜக் கொள்கையின்படி எனவே பிராம்மணார்த்தம், பிண்டப் பிரதானம் முதலிய மூடாசாரங்களை விட்டொழித்துச் சிநேகிதர்கள் பலரைக் கூட்டுவித்து, ஈசுவர உபாசனை செய்து, இறந்தவரின் ஞாபகார்த்தமான இரண்டொரு சொற்பொழிவுகளுடன் இனிது முடித்தார். பூணூலை யொழித்து எல்லா சமூகத்தாருடனும் சமபந்தியில் உணவு உண்டார். அவர் எக் காரியத்தைச் செய்யினும் கடவுளைப் பிரார்த்தனை புரிந்தே தொடங்குவார். கடவுளிடத்து நீங்காத அன்பைக் காட்டிவந்தார். விக்கிரக வணக்கம், சாதி பேதம் முதலியவற்றை ஆணித்தரமாகக் கண்டித்தார்.

தரும ஸ்தாபனங்களும் தானதருமங்களும்

வீரேசலிங்கம் அவர்கள் தமது சுய முயற்சியால் ஈட்டிய பணத்தைக்கொண்டு அநேக தான தருமங்கள் செய்துவந்தார். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரெனவே அவர் வாழ்ந்துவந்தார். பெண்களின் நன்மைக்கான விஷயங்களிலும், தாழ்ந்த குலத்தோரை மேன்மைப்படுத்துங் காரியங்களிலும், மூட ஆசாரங்களைக் கண்டிப்பதிலும், பொது நன்மைக்கான ஒவ்வொரு முயற்சியிலும் பங்குபெற்று வேலைசெய்வதிலும் ஊக்கத்துடன் தமது உடல், பொருள், ஆவிகளை ஒருங்கே அர்ப்பணஞ் செய்து உழைத்து வந்தார். இராஜமகேந்திரவரத்தில் நகர பரிபாலன சபைக்கென ஒரு மாளிகையைக் (Town Hall) கட்டி வழங்கினார். அந் நகரில் சீரிய முறையில் நடைபெறும் சிறந்த பாடசாலையொன் றேற்படுத்த வேண்டுமென்று கருதி "ஆஸ்திக உயர்தரப் பாடசாலை"யை ஏற்படுத்தினார். அதுவே இன்று வீரேசலிங்கம் ஹை ஸ்கூல் என்ற பெயரால் வழங்கிவருகிறது. அக் காலத்தில் முதன்முதலாக அப் பாடசாலையில் தாழ்த்தப்பட்ட குலத்தோரும் சமத்துவமாகச் சேர்ந்து வாசிக்கலாமென்று வீரேசலிங்கம் விதி யேற்படுத்தினார். பெண்களுக்கெனவே பிரார்த்தனை மந்திரம் (வீடு) ஒன்றையுங் கட்டிக் கொடுத்தார். பெண் பாடசாலை யொன்றை ஸ்தாபித்தார். "விதந்து சரணாலயம்" என்ற பெயரோடு விதவைகளை யாதரித்து, அவர்களுக்குக் கல்வி கற்பித்து, மறுமணம் செய்துவைக்கும் விடுதியொன்றை ஏற்படுத்தினார்.

உங்களுக்கு இடையறா வேலைகள் கிராமங்களில் உள்ளன. பாட்டுகள் கதைகள் நாடகங்கள் மூலம் ஜனங்களுக்குத் தர்ம வுணர்ச்சியும் வீரத்தனமும் புகட்டுங்கள்!

அவையனைத்தையும் தமது சொந்தப் பொறுப்பில் தம் மேற்பார்வையின்கீழ் சிறப்பாக நடத்திவந்தார். பெங்களூர் வாசிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்கி அந் நகரில் பிரம்ம சமாஜத்திற்கென ஒரு மாளிகையைக் கட்டி இலவசமாக வழங்கினார். 1909-ம் ஆண்டில் சென்னையில் கவர்னராகவிருந்த லாலி துரையவர்கள் இராஜ மகேந்திரத்திற்குச் சென்றபோது வீரேசலிங்கம் நடத்திவந்த விதந்து சரணாலயத்தை (விதவைகள் விடுதியை) நேரிற் பார்வையிட்டு வீரேசலிங்கத்தை வெகுவாகப் பாராட்டினார். தற்போது உலகம் போற்றும் கவியரசியாகவும், காந்தியடிகளாரின் கனத்தைப் பெற்ற காங்கிரஸ் தலைவியாகவும் விளங்கும் சரோஜினி தேவியாருக்கு அவரது தந்தையார் வீரேசலிங்கம் அவர்களை முன்னின்று அவருடைய வீட்டிலேயே திருமணம் நடத்தும்படி கேட்டுக்கொண்டார். ஆயினும் சென்னை பிரம்ம சமாஜ மந்திரத்திலேயே அவ் விவாகத்தை வீரேசலிங்கம் முன்னின்று வெகு சிறப்பாக நடத்திவைத்தார். அதில் பிராம்மணப் பெண் ஒரு நாயுடு குலத்தவரை விவாகம் செய்துகொண்டபடியால், அஃது ஜாதிக் கலப்புச் சீர்திருத்த விவாகமாக அப்போது பாராட்டப்பட்டது.

ஆதிதிராவிடர்கள் போன்ற தாழ்ந்த சமூகத்தாருக்கும் சம உரிமை வழங்கினாலன்றி இந்து சமூகம் விரைவில் பலங்குன்றிப் போகுமென்பதை வீரேசலிங்கம் பன்முறை வற்புறுத்தினார். ஒடுக்கப்பட்ட மக்கள் பலருக்கும் வேண்டிய உதவிகள் புரிந்தார். இந்தியா முழுதும் சாதி வேற்றுமைகளின்றி ஒரே இந்திய சமூகமாக மக்கள் வாழவேண்டுமென்று பெரிதும் விரும்பினார். அவ்வாறே சமய வேற்றுமைகள் யாவும் ஒழிந்து ஒரு தெய்வ வணக்கஞ் செய்யும் ஒரு சமயமே எங்குமிருக்க வேண்டுமென்று விழைந்தார். இத்தகைய அவரது கருத்துக்கள் தெலுங்கு நாடெங்கும் விதைக்கப்பட்டபடியால், படித்த சமூகம் பெரும்பாலும் இன்று அவரது கொள்கைகளைத் தழுவி நிற்கின்றது. தமிழ் நாட்டைப் போல் தெலுங்கு நாட்டில், பிராம்மணர் பிராம்மணரல்லாதாரிடையில் அத்துணைக் கடுமையான சாதி வேற்றுமைகள் பாராட்டப்படுவதில்லை யென்பதைக் கவனிக்கவேண்டும். இவ்வளவுக்கும் மூலகாரணமானவர் வீரேசலிங்கம் என்பதை மறைக்க முடியாது. லிங்கம் அவர்களிடத்தில் மாறாத அன்பு படைத்த தெலுங்கு நாட்டு ஜமீன்தாரர்கள் பலர். அவர்களில் பித்தாபுரம் அரசர் முதன்மையானவர். அவர் வீரேசலிங்கம் அவர்களது பொதுநலக் காரியங்கள் பலவற்றிற்கும் பலவகைகளில் துணைபுரிந்து வந்தார். சென்னை யூனிவர்சிடி

அத்யாத்ம வாழ்வை கிராம மக்கட்கு வாழ்ந்து காட்டுங்கள்! தொழிற் கூடங்களும் அற நிலையங்களும் ஏற்படுத்துங்கள்.

யில் வைஸ் சான்சலராக விருந்த ஸர். ஆர். வெங்கடரத்னம் நாயுடு அவர்கள் வீரேசலிங்கம் அவர்களின் வலது புஜமாவர். வெங்கடரத்னம் அவர்கள் பிரம்ம சமாஜத்தவர். தெலுங்கர்கள் அவரை 'மஹரிஷி' யென்று கௌரவமாக இன்றும் அழைக்கின்றனர். வீரேசலிங்கம் இராஜமகேந்திரத்தில் தாம் நடத்திவந்த தரும ஸ்தாபனங்கள் பலவும் நீடு நின்று நடைபெற்று வரவேண்டுமென்பதைக் கருதி, "ஹிதகாரிணி சமாஜம்" என்ற பெயரால் ஒரு சங்கத்தை யேற்படுத்தி, அச் சங்கத்தினிடத்தில் தமது சொத்துக்கள் அனைத்தையும் ஒப்படைத்தார். பந்துலு அவர்கள் தம் ஆயுள்காலம் முழுதும் தாமே அச் சங்கத்திற்குத் தலைவராக விருந்தார். அவர் காலத்திற்குப் பிறகு இன்றுவரையில் அச் சங்கத்திற்கு மேலே குறித்த ஸர். இரகுபதி வெங்கடரத்னம் அவர்களே தலைவராக விருந்து, பழமைபோல் எல்லா ஸ்தாபனங்களையும் ஒழுங்காக நடத்திவருகின்றார். பித்தாபுரம் இராஜா அவர்கள் அச் சங்கத்திற்குப் போஷகராக விருந்துவருகிறார். ஆரம்பத்தில் "ஹிதகாரிணி சமாஜ"த்திற்குச் சகாயதனம் வசூலிக்க வேண்டி, தற்போது ஷை சமாஜத்தின் காரியதரிசியாக விருந்துவரும் திரு. K. ஹனுமந்த ராவ் அவர்களை யழைத்துக்கொண்டு வீரேசலிங்கம் அவர்கள் தம் மனைவியாரோடு பம்பாய்க்குச் சென்றார். அங்கு "சோஷியல் ரிபார்மர்" பத்திராதிபராகிய திரு K. நடராஜன் அவர்கள் வீட்டில் தங்கினார். அங்கு பலவிடங்களில் பந்துலு அவர்களுக்கு உபசரிப்புகள் நடைபெற்றன. முக்கியமாக நடைபெற்ற வரவேற்புக் கூட்டமொன்றில் ஜஸ்டிஸ் சந்திராவர்க்கர் அவர்கள் தலைமைப்பூண்டு வீரேசலிங்கம் அவர்களை விசேஷமாகப் பாராட்டிப் பேசினார். ஒரு வாரத்தில் பம்பாயில் வீரேசலிங்கம் 900 ரூபாய்களுக்குமேல் சந்தா வசூலித்தார். அவ் விஷயத்தில் பம்பாயில் அவருக்கு உடனிருந்து உதவிபுரிந்தவர்களில் திரு. K. நடராஜன், ஆந்திர பத்திரிகையின் அதிபராகிய திரு. K நாகேசுவர ராவ், புனா விதந்து சரணாலயத்தின் ஸ்தாபகராகிய திரு. கர்வே பண்டிதர் முதலியோர் முக்கியமாவர். 1910-ம் ஆண்டு ஆகஸ்டு மீ 11-ம் தேதி வீரேசலிங்கம் அவர்களின் அருமை மனைவியாராகிய இராஜ்ய லக்ஷ்மியம்மாள் தேகவியோகமடைந்தார். தமது மனைவியாரின் பிரிவுக்குப் பின்னரும் வீரேசலிங்கம் அவர்கள் ஊக்கத்திற் சிறிதுங் குன்றாதவராய்த் தமது தரும ஸ்தாபனங்களைச் சரிவர நடத்திவந்ததோடு, தெலுங்கு மொழியில் பற்பல அரிய நூல்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுவந்தார்.

தேசத்திற்குத் தக்க கல்விச்சாலைகள் ஏற்படுத்துங்கள். இராட்டினங்களைப் பரப்புங்கள்! நெசவுச்சாலைகள் வையுங்கள்.

பின்னர் 1919-ம் ஆண்டு கோடையில், தாம் எழுதிவந்த தெலுங்குப் புலவர்கள் சரித்திரம் இரண்டாம் வாலியத்தை ஆராய்ந்து பிரசுரிப்பதற்காகச் சென்னைக்குப் போந்தார். தினந்தோறும் சென்னையிலுள்ள ஓரியண்டல் பிரீ லைபரெரியில் பழமையான ஏட்டுச் சுவடிகள் பலவற்றைச் சேகரித்து ஆராய்ந்து வந்தார். கிருஷ்ண தேவராயரது சரித்திரத்தையும் பரிசோதித்து எழுதிமுடித்தார். இந்த நிலையில் திடீரென்று விஷ ஜுரத்தால் தாக்குண்டு 1919-ம் வருடம் மேமீ 27-ந் தேதி செவ்வாய்க் கிழமை காலை 4½ மணி சுமாருக்குத் தமது எழுபத்திமூன்றாவது வயதில் இராவ் பஹதூர் கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு அவர்கள் எழும்பூரில் பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பைத் தாங்கினர். அவர் உயிர்துறப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர், அச் சமயத்தில் தெலுங்கு நாட்டுப் பண்டிதரிடையில் விவாதிக்கப்பட்டுவந்த "ஒரு கல்லு, ஒண்டிமிட்டா" விவாதத்தில், அப்பொழுதே தாம் ஆராய்ந்து கண்ட சில ஆதாரங்களைக் காட்டி ஒரு முடிவான சிறந்த கட்டுரையை எழுதி முடித்தார். அஃது அவ்வாண்டு வெளிவந்த ஆந்திர பத்திரிகையின் ஆண்டு மலரில் வெளியாயிருக்கிறது. எனவே அவர் உயிர்விடுந் தருணம் வரையில் மொழிக்கும், நாட்டுக்கும் உழைத்துவந்தாரென்பதை யறியலாம். அவர் ஸ்தாபித்து நடத்திவந்த தரும ஸ்தாபனங்களாகிய அனாதை யாச்சிரமம், விதந்து சரணாலயம், ஆஸ்திக மத பாடசாலைகள், சிற்பசாலை, ஆனந்தாச்சிரமம், பிரார்த்தனை மந்திரம், புத்தகாலயம் முதலியவற்றை சாசுவதமாக என்றும் நடந்துவருவதற்கென ஹிதகாரிணி சமாஜத்தார் வசம் அவர் ஒப்படைத்த சொத்துக்களின் மதிப்பு (வீடுகள், தோட்டங்கள், கட்டிடங்கள், புத்தகங்கள், புத்தகங்களின் பதிப்புரிமைகள், ரொக்கம் ஆகியவனைத்தும் சேர்ந்து) ரூ. 41,500 ஆம். வீரேசலிங்கம் அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. ஆயினும் அவரது மனைவியாரையும், அவரையும் அபிமானத் தாய் தந்தையராகக் கொண்ட ஆடவரும் பெண்டிரும் பலருளர். அவர் தெலுங்கில் நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். தெலுங்கு நாட்டில் தம் சரித்திரத்தைத் தாமே முதன் முதலாக (இரண்டு வாலியங்களாக) எழுதி வெளியிட்டவரும் அவரேயாவர். இன்று இராஜமகேந்திரத்திலுள்ள ஹிதகாரிணி சமாஜத்தார் பந்துலு அவர்கள் நடத்திவந்த தரும ஸ்தாபனங்களைக் கிரமமாக நடத்திவருவதோடு, அவரது நூல்களையும் அச்சிட்டுப் பிரசுரித்து வருகின்றனர். தெலுங்கு நாட்டில் வீரேசலிங்கம் அவர்களின் திருநாமம் குன்றின்மேலிட்ட விளக்கெனப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. வந்தே மாதரம்.

ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்படுத்துங்கள். கிராமங்களைச் சிறு தேசமாக்கிப் பூரணப்படுத்துங்கள்.

பொது ஜன ஊழிய.

திரு. K. வெங்கட ராவ் அவர்கள்.

"பொது ஜன ஊழியம்" என்பது வெகு கம்பீரமாகவே தொனிக்கிறது. கேட்கவும் ஆனந்தமே. ஆனால் பொது ஜன ஊழியம் செய்த நண்பர்கள் எவராயினும் தென்பட்டால் அவர்களைக் கேட்க வேண்டும். அப்போது அவர்கள் பட்டபாடு—அடைந்த துன்பம்—நேர்ந்த அவமானங்கள் நன்கு விளங்கும். அரசாங்கத்துடன் ஒத்துழைக்காமலேயே பொது ஜன சௌகரியத்தையும் க்ஷேமத்தையும் உத்தேசித்து பிரசாரம் செய்து உழைக்கலாம் என்று சொல்லும் தொண்டன் தன் வழியில் எண்ணிலா இடுக்கண்கள் காண்கிறான். அறிவிலிகள் நகைப்பு, பிற்போக்காளர் இகைப்பு இவை போன்ற முட்கள் இவன் கால்களில் தைக்கின்றன. இவைகளைப் பிடுங்கி எறிந்துவிட்டு அப்பால் சென்றாலோ குடும்பத் தொல்லைகள், பசி நோய் முதலிய பள்ளத்தாக்குகளைக் கண்டு மலைக்க வேண்டியதாகிறது. இவைகளையும் தாண்டிச் சென்றாலோ குள்ள நரிகளைப் போன்ற 144 களும், புலிகளைப் போன்ற பெனல் கோட் பிரிவுகளும், ஆள் தூக்கி அவசரச் சட்டங்களைப் போன்ற பூதங்களும் இவனை அப்படியே விழுங்கிவிட எதிர்வந்து நிற்கின்றன. சற்று பயங்கொள்ளியாயும், தன்னம்பிக்கையற்றவனாயும், தன்னுறுதி யில்லாதவனாயும் இருந்தானாகில் தொண்டன் வந்த வழியே திரும்பி ஓடவேண்டியதே. இதைவிட்டு அரசாங்க உத்தியோகஸ்தர்களுடன் ஒத்துழைத்தே ஏதாவதோர் பிரச்னையைத் தீர்த்துக்கொண்டு பல மக்கட்கு நன்மை செய்து வைக்கலாம் என்று ஒருவன் எண்ணுவானாகில் இதுவும் பெருத்த அவதியப்பா! கீழே வர வர கீழ்தர சில்லரை உத்தியோகஸ்தர்கள் மூட்டைப் பூச்சியைப் போல் செய்யும் சேஷ்டைகள் அது வோர் கோடியே யென்னலாம். உயர்தர உத்தியோகஸ்தர்களாவது நியாயத்தைச் சொன்னால் அதற்குச் செவி சாய்க்கிறார்கள். குடிகளிட கஷ்டங்களைக் கூடிய மட்டில் கருணையுடனேயே கவனிக்

தொழிலையும் அறிவையுங் கண்டு வறுமை மடமையை வேட்டையாடுங்கள்.

கிறார்கள். கவனித்து உத்திரவு போட்டால், இங்கே கீழே உட்கார்ந்திருக்கும் உத்தியோகஸ்தன் என்ன செய்கிறான் தெரியுமா? உயர்தர அதிகாரி போடும் உத்திரவிற்கு தனக்கும் தனக்குக் கீழுள்ள சில்லறை தேவதைகளுக்கும் அனுகூலமாகப் புதுப் புது வியாக்யானங்கள் செய்கிறான். அதற்குப் பதிலாக நாம் என்ன தான் சமாதானம் சொன்னாலும் அதற்குச் செவிசாய்ப்பதே கிடையாது. மறுபடியும் நாம் உத்திரவுபோட்ட மகானிடமே போய் நடந்ததைச் சொல்லியாக வேண்டியிருக்கிறது. இதற்கு உழைப்பு எவ்வளவு? மனோ வேதனை எவ்வளவு? பணச் செலவு எவ்வளவு? உயர்தர அதிகாரியிடம் போய் நாம் நியாயம் பெற்றுவிட்டாலோ, வேறோர் விஷயம் வரும்போது கீழ்தர உத்தியோகஸ்தன் சுழித்துவிடுகிறான். மேலும் "இவன் போராடுபவன்; அதிகாரிகளை மதிப்பவனல்லன்" என்று குட்டிச் சாத்தான்கள் உளறித்திரிகின்றன. இப் பேச்சை வேதம்போல் எடுத்துக்கொள்ளும் உத்தியோகஸ்தர்கள் வரும்போதே சீறிக்கொண்டே வருகின்றனர். இவையனைத்தும் என் அனுபவம். வெறுங் கட்டுக்கதையல்ல.

"ஆரம்பாசிரியர்களும் கிராம வாழ்க்கைச் சீர்திருத்தமும்." என்ற மகுடத்தின்கீழ் நமது நண்பர் திரு. சி ர. இரகுநாதன் அவர்கள் "பாரதி"யின் மாலை 5, மணி 1-ல் வரைந்த கட்டுரையை ஒவ்வொரு பொது ஜன ஊழியரும் தத்தம் ஆவியுள் பொதித்துக் கொள்ளவேண்டும். அவர் கூறுவது சாத்தியமான முறைகள்—சீர்திருத்தக் கொள்கைகள்—மக்கட்கு முற்றிலும் நலமே யளிப்பன. எந்த உத்தியோகமுமில்லாமல் நன்கு கற்றுணர்ந்த நண்பர் எவரேனும் கிராமவாசியாயிருந்தால் இவ்வழியில் பாடுபட்டுப் பொதுநலத் தொண்டுபுரியலாம். ஆனால் எளிமையும், அனைத்தையும், கந்தலை யுடுத்த ஆரம்ப ஆசிரியர்கள் இத் துறையி லீடுபட் டுழைக்க இந் நாட்களில் முடியாது. அனுபவ வாயிலாகக் கவனிக்குமிடத்து ஆரம்ப ஆசிரியருக்குக் கொடுக்கப்படும் சம்பளமோ வெகு வெகு சொற்பம். மக்களும் மனைவியும் பசி நோயால் வாடுகின்றனர். உடுத்தக் கந்தையுமின்றித் தவிக்கின்றனர். இப்போது தாலூக்கா போர்டுகளின் அமுல் நடக்கிறது. ஏதாவதோர் கிராமத்தில் ஓர் ஆசிரியர் கிராமப் பஞ்சாயத்து, ஐக்கிய நாணயச் சங்கம் முதலியவற்றில் ஈடுபட்டால், இதைக் கண்டு பொறுக்காத நபர்கள் உடனே தாலூக்கா போர்டு பிரசிடெண்டுக்கோ, மெம்பர்களுக்கோ கோள் சொல்லக் கிளம்பிவிடுகின்றனர். பள்ளிக்கூடத்தைச் சரியாய்க் கவனிப்பதில்லை. ஆசிரியருக்கு இதர வேலைகளே வெகுவாய்க்

ஒரு கிராமத்தை உங்கள் வாழ் நாளில் நல்வழிப் படுத்தினால் அதன் உதாரணத்தை மற்றக் கிராமங்களும் பின்பற்றும்.

கிடக்கின்றனவென்று பெட்டிஷன்கள் கிளம்பிவிடுகின்றன. சம்பளத்திற்கு மேலாகவே ஊதியம் சம்பாதிக்கிறான் என்றும் சொல்லுகின்றனர். இப்போதைய சீர்திருத்தத்தின் பயனாக எழுத்தறிவில்லாத மூடனும் தாலூக்கா போர்டு பிரசிடெண்டாக வரலாம். கிராம முனிசீப்பு ஒருவர் பிரசிடெண்டானால், இந்த ஊர் கிராம முனிசீப்பும், கணக்கப்பிள்ளையும் கோள் சொல்ல சௌகரியமாய் விடுகிறது. உடனே ஆசிரியரை மாற்றிவிடுகிறார்கள். சுருங்கச் சொல்லின் அணுவேனும் பொதுநலத் தொண்டுபுரியவோ, சுதந்திர வுணர்ச்சி காட்டவோ, மனிதப் பிறவிக்குண்டான சுயமரியாதையைக் காட்டவோ இக் காலத்திய ஆரம்பாசிரியர்களுக்கு அடுக்காது—அவர்களிட நிலைமையும், அவர்தம் எஜமானர் யென்போர் நோக்கும் போக்கும் அவ்வளவி லிருக்கிறது. ஆரம்பாசிரியர்கள் எவ்வளவோ வகைகளில் உழைக்கலாம் என்று நாம் எளிதில் கூறலாமேயன்றி அவர்களிட நிலைமை எவ்வளவு சீர்கெட்டிருக்கிறது—அவர்களை எவ்வளவு பாதாளத்தில் வைத்திருக்கிறார்கள் என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்போமாகில் கண்ணீர் கலங்கவேண்டியதேயாகும்.

மற்றோர் நண்பர் பத்திராசிரியர்களின் அருமை பெருமைகளைப் பற்றியும், அன்னார் செய்யவல்ல பொதுநலத் தொண்டைப்பற்றியும் ஓர் வியாசம் வரைந்துள்ளார். மேற்சொன்ன இரு நண்பர்களின் ஒவ்வோர் எழுத்தையும் நான் பொன்னேபோல் போற்றுகிறேன். அவர்களிட அரிய கட்டுரைகளை முகவுரையாக வைத்துக்கொண்டே இக் கட்டுரையை முடிவுரையாக எழுதியுள்ளேன் என்பதை அன்னார் கவனிக்கப் பிரார்த்திக்கிறேன். பத்திராசிரியர்களிட பெருமைகளும் கௌரவமும் பல்லாயிரக் கணக்கிலென்றால், அவர்களிட பாதையிலுள்ள இடுக்கண்களும் பேராபத்துகளும் பல கோடியாகும்.

தேவைக்குத் தகுந்த திரவியம் வைத்துக்கொண்டோ அல்லது சேர்த்துக்கொண்டோ நடைபெறும் பத்திரிகைகளோ வெகு வெகு சொற்பம். ஆனால் பத்திரிகா உலகைச் சற்று எட்டிப் பார்க்குமளவில் பல இடுக்கண்களால் வாடி வதங்கும் பத்திரிகைகளே பெருவாரியென்று கூறலாம். ஆனால் எப்பேர்ப்பட்ட பத்திரிகையும் முதன்முதலில் பாடுபட்டுப் பரிதவித்தே தலையெடுக்க வேண்டியதாகிறது. கஷ்டப்படாமலேயே பத்திரிகையை நடத்திவிட்டதாக எவனும் வீறு பேச இயலாது. ஏனெனின், பத்திரிகைத் தொழி

அறஞ் செய்வது நமது கடன். அதன் பால் வரும் இன்னல்களைத் தீர்க்கக் கடவுள் துணை செய்வார். அறம் நிறுத்தி மறந் தவிர்த்தல் அவர் கடனாகும். ஆதலின் மகிழ்வுடன் நம்பி நம்மறத்தைச் செய்வோமாக.

லுக்குப் பணம் இறைப்பது பிசாசுக்கு வேலை கொடுப்பதை யொக்கும். பத்திரிகையை நடத்தவல்ல பொருளைச் சேகரிக்க ஒரு நபரும், பத்திரிகையை அலங்கரிக்கவல்ல பொருளைச் சேகரிப்பவன் வேறொருவனாகவு மிருந்தால் அவ்வளவு சிரமமல்ல. ஆனால் இருவிதப் பொருள்களையும் சேகரித்துப் பத்திரிகையை நடத்தும் பொறுப்பும் ஒரு தலைமீதே விடிந்தால், அந்த உடலும் மூளையும் ஒன்றுக்கும் உதவாத நிலைமைக்கு விரைவில் வந்துவிடும். இப்பேர்ப்பட்ட சங்கடமான நிலைமையில்தான் நம் தமிழ் நாட்டில் பத்திரிகாசிரியர்கள் வாடுகின்றனர். நமது "பாரதி" ஆசிரியரையும் இவர்களி லொருவராய் எடுத்துக்கொள்ளுவேன். அவர் கோபித்துக்கொண்டாலும் பாதகமில்லை.

பத்திரிகைத் தொழில் எவ்வளவு கஷ்டமப்பா? அதை நடத்தியவர்களுக்கே தெரியும். அவர்கள் ஓர் ஒப்பாரியையேதான் ஒப்பிப்பார்கள். பொருளுக்காக அலையும் அலைச்சல் எத்தனை? அச்சுக் கோர்த்து வைத்துவிட்டால், அச்சடிக்கக் காகிதமில்லாத கவலையெத்தனை? கடனாகக் காகிதம் கொண்டுவந்து அச்சியற்றி, தபாலில் போட உறைகளும் (Wrappers) போட்டு, விலாசங்களும் எழுதி தயாராயிருப்பினும், தபால் பில்லைக்கில்லாத தவிப்பெத்தனை? இது கடனுக் ககப்படுமா? பணம் கொடுத்தே யாகவேண்டும். தெரிந்த நண்பர்கள் கஷ்டத்தைக் கவனித்து வி.பி.களைப் பெற்றுக் கொள்ளுவார்கள் என்னும் நம்பிக்கையின்பேரில் அன்னார்க்கு வி.பி.கள் அனுப்பித் தனித்தனிக் கடிதங்கள் எழுதினாலும் அவர்கள் திருப்பியடித்து மனதை நோகவைக்கும் நாட்களெத்தனை? வி.பி.கள் மூலம் பணம் வந்து காக்கும் என்று ஒவ்வொன்றுக்கும் 4 அணா வீதம் செலவுசெய்து உள்ள சிறிது பொருளையு மிழந்த துடிதுடிப்பெத்தனை? வி.பி.யில் அனுப்புங்கள் என்று எழுதிவிட்டு, அது வந்ததும் திருப்புவோரும், வருட முழுமையும் அனுப்பிவாருங்கள் கடைசியில் பணம் கொடுக்கிறேன் என்று சொல்லிப் பத்திரிகையை நெடுகப் பெற்றுக்கொண்டேவந்து இறுதியிலும் பணம் தராமல் ஏமாற்றும் கோலங்களெத்தனை? இவ்வளவும் போகக் கட்டுரைகளைப் பற்றியோ சொல்லவேண்டியதே யில்லை. பத்திராசிரியர்களுக்கு வரும் கட்டுரைகள் பிரம்ம எழுத்துக்களைவிடக் கேடாகக் கிடக்கின்றன. வேறு சில கட்டுரைகளை ஓர் முறை வாசித்து முடிப்பதற்கும் கடலினும் பெரிதான பொறுமை வேண்டியிருக்கிறது. இலக்கண வழுக்களெத்தனை? சொற்பிழைகளெத்தனை? ஒன்றுக்கு முகவு

காலத்திற்குத் தக்கபடி நற் செயல்கள் புதிது புதிதாய்த் தோன்றுகின்றன. அவற்றை அந்தந்த சமயம் வரும்போதே செய்வது அறத்தின் பாற்பாகும்.

ரையே காணோம்; மற்றொன்றுக்கு முடிவுரையே காணோம்; மற்றும் சில கட்டுரைகளைப் படித்துப் பார்த்தால், எழுதியவர் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதே ஆசிரியருக்குப் புரிவதில்லை. வேறு சிலர் தாங்கள் கற்ற நூற்பயிற்சி முழுமையையும் கட்டுரைகளிலேயே காட்டிவிடுகின்றனர். படிக்கும் நபர்கள் சாதாரண ஜனங்கள்தானே என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை. வேறு பலர் எழுதுவதோ ஒரு வியாசம் ஒரு மாதப் பத்திரிகையின் பூரா பக்கங்களையும் நிரப்பி வைக்கத் தக்கதாயிருக்கும். எவ்வளவு அருமையான வியாசமானாலும் அதிக நீளமாயிருத்தல் கூடாது. ஒரு வியாசத்தைப் படிக்கும்போதே பாவம் பத்திராசிரியர் தனக்குண்டான பொறுமைக் குணத்தையெல்லாம் சகித்துக்கொண்டு, "இதை எழுதியவர் உற்ற நண்பராயிருக்கிறார். இப்போது இதைப் போட்டுவிடலாம்; போகட்டு" மென்று நிச்சயித்துக்கொண்டு படித்துக்கொண்டே கடைசிப் பக்கத்திற்கு வந்தால் கடைசியில் உள்ள ஓர் வார்த்தையைக் கண்டதும் ஆசிரியர் அப்படியே குபீரென்று சாய்ந்துவிடவேண்டியதாய் நேரிடும். அதுதான் 'தொடரும்" என்பது. அந்தத் "தொடரும்" என்பது ஆசிரியரைக் குப்புறப் படுக்கவைக்கும் சக்தியுடையது. அந்தோ! இந்த வார்த்தை ஏன் அகராதியில் நுழைந்ததோ, சனியன்!, என்று சொல்லவேண்டியதாகவும் நேரிடுகிறது.

தங்கள் கட்டுரைகளை ஏன் போடவில்லை என்று கோபித்தெழுதும் கடிதங்களெத்தனை? கட்டுரை போட இஷ்டமில்லையாகில் என் பெயரை சந்தாதார் ஜாபிதாவிலிருந்து நீக்கிவிடுங்கள் என்று கேட்போர் எத்தனை? கட்டுரையை வெளியிடத் தாமதித்ததற்குத் திட்டுவோர் எத்தனை? பலப்பல வகையாய்த் தினந்தோறும் கடிதங்கள் குவிந்துகொண்டே யிருக்கும். பாதிப் பேர் அரிய கட்டுரைகளையே எழுதியிருப்பார்கள்; ஆனால் பிரம்மன் எழுத்தே. அச்சுக் கோர்ப்பவன் என்ன செய்வான்? அவன் சாதாரணமாகப் படித்தவன்தானே! ஆதலின் பத்திரிகாசிரியரே இக் கட்டுரையைத் தான் பார்த்தெழுதிக் கொடுக்கவேண்டும். இதனிடையே அச்சுக் கோர்க்கும் சிறுவர்களோ பத்திரிகாசிரியரைப் பரீக்ஷை செய்யக் கிளம்பிவிடுகிறார்கள். வேண்டுமென்றே ஓர் வார்த்தையை சற்று அனர்த்தமாக அச்சுக் கோர்த்துவிடுகிறார்கள். ஆசிரியர் கவனிக்கிறாரோ இல்லையோ பார்ப்போம் என்ற விளையாட்டுதான். ஆசிரியர் கவனிக்காமற்போனால், அப்படியே அச்சுக்குப் போய் பிரசுரமாய்விடும்.

பிற மனிதருக்கு நாம் அடிமைப்படுவதும், மனம் தீய நினைவுகளுக்கு ஆளாதலும், நீங்கவேண்டும். வயிற்றுக் கஞ்சிக்காக வாழ்வை விற்றல் கூடாது.

‘கஜ்னி மஹமூது’ சேஷய்யர்.

‘ஆனந்தா.’

‘அட கஜனி மஹமூதுகளா! கேளுங்களடா!’ என்பார் சரித்திர போதகாசிரியர் சேஷய்யர் தன் சிஷ்யர்களை நோக்கி.

‘கஜ்னி மஹமூது’ என்றால் தெய்வங்களை ஹதம் செய்வோன், அநேகந் தடவை படையெடுப்போன், பணப்பேய் பிடித்தவன் என்று பொருள்’ என்று தன் சிஷ்யர்களுக்குச் சொல்லுவதுண்டு.

படிப்பவர்கள் “எந்த மடையன் இப்படி எழுதினான்” என்று சொல்ல வேண்டியதுதான். கொழும்பு நகரில் ‘‘தேச பக்தன்’’ என்னும் தினசரிப் பத்திரிகையின் பொறுப்பேற்று நான் நடத்திவந்த காலையில் ஓர் சம்பவம் நிகழ்ந்தது. ‘‘கண்ணி’’ என்னும் சொல்லின் முதல் எழுத்தை மாற்றியமைத்ததால் அந்த வார்த்தை ஆபாசமாய் விட்டது. நான் Proof-ஐப் பார்த்துக் கையெழுத்துப் போட்டாய் விட்டது. ஆனால் உதவி ஆசிரியர் அதைக் கண்டுபிடித்து மறுபடியும் என்னிடம் கொண்டுவந்து காட்டியபோது அந்த வார்த்தை அதுவும் பெரிய கொட்டை எழுத்திலிருந்ததைக் கவனித்து அப்படியே திக்பிரமையானேன்! அப்படியே வெளியாயிருந்தால் யாருக்கு முட்டாள் பட்டம்? ஆசிரியருக்கன்றோ? பத்திராசிரியர் பதவி சாமான்யமல்ல. அனுபவத்தைச் சொல்லப் பேனாவை எடுத்தால் ஒரு புஸ்தகமேயாய்விடும்.

நமது ‘‘பாரதி’’யும் எண்ணிலா இடுக்கண்களிடையே அருந்தொண்டாற்றி வருகிறது. இதற்கு நேயர்களிட தூண்டுகோலும் வேண்டும். பத்திரிகையை அலங்கரிக்க வேண்டிய பொருளுக்குப் பஞ்சமில்லை. அதை எப்படியாவது சரிப்படுத்திக்கொள்ளலாம். பத்திரிகை நடந்தேறக் கைகொடுக்கும் பொருளன்னை வேண்டியதாயிருக்கிறது. ‘‘பாரதி’’யின் உயர்வைக் கருதும் நண்பர்கள் எவ்வளவோ வகைகளில் உதவிபுரியலாம். ‘‘பாரதி’’யின் நோக்கும் போக்கும் என்னென்ன, நேயர்கள் எவ்வெவ் வகையில் உதவலாம் என்பதை அடுத்துக் கவனிப்போம்.

பகலை உழைப்பிலும் இரவைக் கடவுள் நினைப்பிலும் கழித்தல் நலம்.

இக் காலத்து மாணவர்களில் நாஸ்திகம் பேசுவோர் எத்தனை பேர்? எஸ். எஸ். எல். ஸி. (S.S.L.C.) பரீக்ஷைக்கு அநேகந் தடவை படையெடுத்துச் செல்லுவோர் எத்தனை பேர்? பணப்பேய் பிடித்தவர் எத்தனை பேர்? ஆதலால் அந்தப் பெயரைத் தாராளமாக மாணவர்களுக்கு வழங்குவதுண்டு.

சிஷ்யர்களோ கஜப் பேர்வழிகள்! அந்தப் பெயரை உபாத்தியாயருக்கே சூட்டிவிட்டனர்.

* * * *

காலை நேரம். அன்று ‘ஸ்கூல் இன்ஸ்பெக்ஷன்’. ஆதலால் சேஷய்யர் முக க்ஷவரம் செய்துகொண்டு, நீராடி, மூக்குக்கண்ணாடியணிந்து, பெட்டியிலிருந்த ஆடைகளை எடுக்கத் தொடங்கினார். விசேஷ காலங்களில் உபயோகிக்க வைத்திருக்கும் நீண்ட வெளியங்கியை எடுத்தார். ஒரு பொத்தானைத் தவிர மற்றவைகளெல்லாம் ஒடிந்துபோயிருந்தன.

‘சுத்த பூல்ஸ்! இந்த வண்ணாரப் பயல்களையெல்லாம் என்ன செய்யவேண்டும் தெரியுமா?’ என்று முணுமுணுத்தார். செய்வது என்ன பாவம்? இரண்டு ‘சேப்டி பின்கள்’ கிடைத்தன. அவைகளைப் பொத்தான்களுக்குப் பதிலாக உபயோகித்துக்கொண்டார்.

ஆடை தரித்தான பின் ‘காபி ஆயுடுத்தோ?’ என்று அடுப்பங்கரையிலிருக்கும் தன் மனைவியை நோக்கிக் கேட்டார்.

‘கட்டையிலே போற பால்க்காரியை இத்தனை நாழியாயும் காணும் நேத்திக்கே காசு தரலேன்னு அவளுக்குச் சடவு’ என்று பதில் வந்தது.

சேஷய்யர் கெடியாரத்தைப் பார்த்தார். ‘அடடா! டைம் ஆயுடுத்தே!’ என்று புருவங்களை உயர்த்தினார்.

எப்போதும் சீக்கிரமே புறப்படும் அவர், அன்று சிறிது தாமதித்துவிட்டார். நெடுநாட்களாக எழுதாத பாடபோதனைக் குறிப்புகளை (Notes of Lessons) அவசர அவசரமாய் எழுதிக்கொண்டிருந்ததாலும், முக க்ஷவரம் செய்துகொண்டதாலும் காலங் கடந்துவிட்டது.

அடுத்த அறையிலிருந்து பலவீனமான குரல் கேட்டது. சேஷய்யர் அங்கே சென்றார். அவருடைய ஒரே புதல்வன் சில நாட்

உணவுடைத் தேவைகளை தூய முயற்சியால் அடைந்து, முத் தூய்மையுற்றால் பூரண சுதந்திரம் வாய்க்கும். அச் சுதந்திர வொளியால் எதிர்த்தால் வறுமையும் இருளும் அற்றுவிடும்.

களாய் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தான். மார்பில் கை வைத்து 'சீனு சீனு' என்றார். சீனுவின் கண்கள் திறந்தன. தந்தை முகத்தை ஆயாசத்தோடு நோக்கி மூடிக்கொண்டன. இச் சமயம் சேஷய்யர் மனைவியும் உள்ளே வந்தாள்.

'டாக்டர் ஒரு மருந்தைச் சொன்னார். அதை வாங்கவும் 'தம் பிடி'யில்லை. ......உம்......ஈசுவரன் இருக்கிறான். அவன் பார்த்துக் கொள்ளுவான்' என்றார் சேஷய்யர். அவர் மனைவி முன்தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

'சரி! நேரம் ஆய்விட்டது. நான் பள்ளிக்கூடத்திற்குப் போகிறேன்' என்று புறப்பட்டார் சேஷய்யர்.

'காபி சாப்பிடாமெ போரியளே!' என்றாள் அவர் மனைவி மூக்கில் விரல் வைத்து.

''இன்றைக்கு 'இன்ஸ்பெக்டர்' வருகிறார். சீக்கிரம் போகவேண்டும்'' என்று அவசர அவசரமாய் வெளியேறினார்.

சற்றுதூரம் போனவுடன் பால்க்காரி எதிர்ப்பட்டாள்.

'ஏன் இவ்வளவு லேட்? உன்னாலே நான் காபி சாப்பிடாமலே போகிறேன். என்னமோ உன் தயவு!' என்று சொன்னார்.

'செத்த நேரமாயிடுச்சுங்க சாமி' என்றாள் தலையை ஆட்டிக் கொண்டு பால்க்காரி ஆயச்சி.

சேஷய்யர் 'போய் கொடு' என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்.

''காசு தார வழியைக் காணோம். பால்மட்டும் 'கரக்கிட்டா' ஊத்திடணும் சாமிக்கு'' என்று ஒரு வெட்டு வெட்டினாள் தலையை பால்காரி.

'ஆம்! இந்த அய்யர்' இப்படித்தான் என்பதைப் போல ஆடியது அவள் காது ஓலைகளும்.

பார்த்ததும், பார்க்காததையும்போல் நடந்தார் சேஷய்யர். கொஞ்சதூரம் போனதும் போதனைக் குறிப்பு நோட்டை எடுத்துவர மறந்துபோனதை அறிந்தார். நெஞ்சு 'தக்' என்றது. விரைவாக

அனைவரும் இதமான நெறியை ஆராய்ந் தறிதல் வேண்டும். எல்லோரிடமும் அன்பு பேணி, களிப்புடன் அந் நெறியில் உண்மையாக ஒழுகுதல் சிறந்த அறவழி யாகும். நலமே எண்ணி, நலமே பேசி, நலமே செய்வோர் மூத் தூய்மை யுற்று எல்லாச் சிறப்புகளுக்கும் உரியராவர்.

வீட்டுக்குத் திரும்பினார். வேகமாய் நடந்தார். 'இப்படி நடந்தால் என் பாடு என்ன ஆவது? போதும் உங்கள் சிநேகிதம்' என்பதைப் போல் ஒரு செருப்பு வார் அறுந்து தூரப் போய் விழுந்தது.

சேஷய்யர் மூளையில் கொதிப்பு ஏறியது. என்ன செய்வார் பாவம்! பட்ட காலில்தானே படும்.

வீதியில் செருப்பைக் கையில் ஏந்தியா செல்லுவார்? காலில் மாட்டினார். நொண்டி நொண்டி நடந்துகொண்டு வெகு சிரமத்தோடு வீட்டுக்கு வந்தார். வந்ததும் 'தத் போங்கள்' என்று அவைகளை உதறி எறிந்தார். மறந்து வைத்துவிட்ட நோட்டை எடுத்து தூசி போக்குவதைப் போல் 'தொப்'பென ஒரு போடு போட்டு எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

அவர் அன்று காலை யார் முகத்தில் விழித்து எழுந்தாரோ தெரியாது. வழியில் வீட்டுச் சொந்தக்காரர் தென்பட்டார். சேஷய்யருக்கு ஒரு கும்பிடு போட்டார். எப்போதும் சேஷய்யரே முதலில் அவருக்குக் கும்பிடு போடுவதுண்டு. இன்று அவர் முதலில் போட்டதற்கு அர்த்தம் இல்லாமல் இல்லை. 'வாடகை ஏன் இன்னும் தரவில்லை ஓய்?' என்பது அதன் பொருள். சேஷய்யரும் பதில் கும்பிடு போட்டு, 'நேரம் ஆகிவிட்டது' போய்வருகிறேன், என்றார். அவர் முகத்தில் அசட்டுச் சிரிப்பு இலங்கியது.

'தயவு வேணும்' என்னும் மொழிகள் சேஷய்யர் செவியில் விழுந்தன. 'ஆகட்டும்! வருகிறேன்' என்று நடையைக் கூட்டினார்.

பள்ளிக்கூடத்தை அணுகியதும் 'டணை் டணைன்' என்ற மணியோசை கேட்டது. நல்ல வேளை! குறித்த நேரத்திற்கே வந்துவிட்டோம் என்ற சந்தோஷத்தோடு அவசர அவசரமாய் உள்ளே நுழைந்தார்.

அன்று 'இன்ஸ்பெக்ஷன்' என்பதைப் பள்ளிக்கூடத்தின் ஒவ்வொரு மூலையும் காண்பித்தது. வரப்போகும் இன்ஸ்பெக்டர் 'அப்படிப்பட்டவர், இப்படிப்பட்டவர்' என்று உபாத்தியாயர்களிடையே பேச்சு நடந்துகொண்டிருந்தது. சேஷய்யரும் போய்ச் சேர்ந்தார். உபாத்தியாயருக்காக ஏற்பட்ட அறையிலிருந்த தனது தலைப்பாகையை எடுத்து அணிந்துகொண்டு, 'சரியாய் இருக்கிறதா?' என்று அடுத்தவரிடம் கேட்டார். ஐந்து நிமிஷம் அதைச் சரிப்படுத்துவதிலேயே கழித்து விரைவாய்த் தன் வகுப்புக்குச் சென்றார்.

பிழை வருந்திக் கடவுளிடம் மன்னிப்புக் கேட்டு, அப் பிழையை மறுபடி செய்யாமல் மனத்தை உறுதிப் படுத்திக்கொண்டே வந்தால் சிறந்த ஒழுக்கம் ஏற்பட்டுச் சுத்த நிலை எய்தும்.

வீரன் டி’வெலரா.

திரு. ஸ்ரீவை குஞ்சு அவர்கள்.

அடிமை நாடுகளுக்கெல்லாம் படிப்படியாக நல்ல காலம் பிறக்கின்றது. ஒரு நாட்டின் நிர்வாகம் முழுவதும் ஒரு தனி மனிதன் கையிலிருப்பதை யெல்லோரும் வெறுக்கின்றார்கள். மக்களெல்லோரும் தங்கள் பிரதிநிதிகள் மூலம் நாட்டின் அரசாக்ஷி நடைபெற வேண்டுமென்று விரும்புவது சகஜம். பிற நாட்டின் சொந்த லாபத்திற்காகத் தங்கள் நாடு உபயோகப்படக் கூடாதென்ற நோக்கம் எல்லோர் மனதிலும் கனிவுற்றிருக்கின்றது. ‘மாற்றானின் வலிமைக்கு அஞ்சி யினி நாம் வாழ மாட்டோம்; எங்களுக்கும் அவனோடு போட்டி போடும் சக்தியுண்டு; அதில்

மறுநாள் மாலை உபாத்தியாயர்கள் கூட்டம் ஒன்று இன்ஸ்பெக்டர் தலைமையில் கூடியது. அப்போது பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே வந்த இன்ஸ்பெக்டர் “இரண்டு நாட்களாய் நான் உபாத்தியாயர் முகங்களில் புன்சிரிப் பென்பதையே காணவில்லை. எல்லாரும் ‘உர்’ என்று உட்கார்ந்து போதித்துக்கொண்டிருந்தார்கள். அப்படியெல்லாம் இருக்கக்கூடாது” என்று என்னென்னவோ சொன்னார். தூர உட்கார்ந்திருந்த சேஷய்யருக்கு ஆத்திரம் பொங்கியது.

“அனுதினமும் என் மனசு படும் பாடு எனக்குத் தெரியும். இவருக்கென்ன ‘ஜெண்டில் மேனுக்கு?’ தினசரி பால், பழம், நெய், ரொட்டி முதலியவை விலாப்புடைக்கத் தின்றுவிட்டு ஏன் உற்சாகத்துடன் பேசமாட்டார்?” என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டார். ‘உங்களைச் சொல்லக் குற்றமில்லை. எல்லாம் கல்வித் திட்டத்தின் லீலைகள்’ என்று ‘பர்’ரெனப் பறந்தது ஜன்னலிலிருந்த ஓர் ஊர்க்குருவி.

கற்றதை ஆராய்ந்து அறிய வேண்டும். அதன் வழி யொழுகிக் குற்றமற்ற நேரான நெறியில் நடத்தல் வேண்டும். அத்தகையோனுக்கு எல்லா நன்மைகளுமாகும்

வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கை யுண்டு’ என்று அடிமை நாட்டில் எங்கோவொரு மூலையிலுள்ள வயலில் உழுவதற்காகக் கலப்பையைச் சுமந்து செல்லும் கல்வி யறிவற்ற குடியானவனும் கூறுவது இன்னமுங் கேட்கிறது. பண்டமாற்று நடைபெற்ற காலத்தில் எங்கள் நில வருவாய்க்கு மதிப்பிருந்தது; இப்பொழுது பணமே பெரிதாகக் கருதப்படுவதால் பணக்கார விவசாயியுங்கூட தரித்திரப் பல்லவியைப் பாடுகிறான். இது அடிமை நாட்டின் கதி.

பிரிட்டனுக்கு வெகு சமீபத்திலுள்ள அயர்லாந்து என்ற சிறு தீவிலுள்ள மக்களின் பெரும்பாலோர் விவசாயிகள். பல நூற்றாண்டுகளாக ஆங்கில வேந்தர்களின் ஆட்சியிலிருந்து இப்பொழுதுதான் விலகிக்கொள்ளப் போகிறார்கள். இயல்பாகவே அடிமை நாட்டிற்கு ஏற்பட்ட கஷ்டங்கள் ஒன்றும் இவர்களைச் சூழாமலிருக்கவில்லை. பெரும்பாலோர் ஏழைகள். ஓ’கன்னல், பார்னல் முதலிய தலைவர்கள் சுதந்திரத்திற்காகக் கிளர்ச்சி செய்தார்கள். எல்லோரையும்விட மஹா புத்திசாலி யென்றும், ஆற்றல் வாய்ந்த வீரனென்றும், கணித சாஸ்திர நிபுணனென்றும் பெயரெடுத்த டி’வெலராவின் வாழ்க்கை வரலாற்றையும், அரிய செயல்களையும் குறிப்பிடுகின்றேன்.

ஸ்பானிய தந்தைக்கும், ஐரிஷ் ஸ்திரீக்கும் 1882-ல் பிறந்தவர் டி’வெலரா. இவர் பிறந்த இடம் அமெரிக்கா. சிறு வயதிலேயே கணிதத்தில் கெட்டிக்காரரென்று பெயரெடுத்தார். முப்பது வயதுவரை பொது விஷயங்களில் தலையிடவில்லை. டிரினிடி கல்லூரியில் சில ஆண்டுவரைக் கணித ஆசிரியராக அமர்ந்திருந்தார். தந்தையின் மரணத்திற்குப் பிறகு அயர்லாந்து திரும்பிய இவர் தாயாரின் ஜாதியினர்க்குள் வீரனாக விளங்குவாரென்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. கார்க் நகரின் கல்லூரியில் ஸ்திரமாக ஆசிரியராக அமர்ந்திருப்பாரானால், அயர்லாந்தின் தேசீய சரித்திரத்தில் இத்தகைய புதிய மாறுதலும், நவ வேகமும் ஏற்பட்டிராது.

டி’வெலரா நெட்டையான மனிதர். கொம்பின் சட்டத்தாலாகிய மூக்குக் கண்ணாடியே அணிந்து வருகிறார். சபைகளில் பேசும்பொழுது முசோலினியைப் போன்ற வீரமும், ஹிட்லரைப் போன்ற அக்னிஜுவாலையும் அவர் சொற்பொழிவில் காண முடியாது. சாதாரணப் பிரசங்கி. சொல்லும் வார்த்தைகளில் உருக்கமும் உண்மையும் உண்டு.

வசிப்பதற்கு ஒரு சிறு குடில், உழுதுண்ணத் தேவையளவு வயல், உடுத்திக்கொள்ளக் கதராடை, கவலையற்ற உறக்கம் ஆகிய இவை ஒருவனுடைய அற வாழ்விற்குப் போதுமானவை.

உலக நிலைமை

ஒரு காலத்தில் உலகிலுள்ள ஜனசமூகத்தின் அபிப்பிராயம் முழுவதும் தனியரசுக்கு எதிரிடையாகவே யிருந்தது 'புரட்சி வருஷம்,' என்று கூறப்படும் 1848-வது ஆண்டில் சட்டசபை ஆட்சியே நன்மை செய்யு மென்று ஜனங்கள் கருதினர். இந்தப் பன்னிரு வருடங்களாகச் சில நாடுகளில் தேசியத் துறையில் அடிக்கடி மாறுதலேற்படுவதைப் பார்த்து வருகின்றோம். சட்டசபை மூலம் ஆட்சி யெங்கும் நடை பெருகிறது. பலவானின் அரசாங்கம் புதிய நாகரீகமாகவே எண்ணப்படும்.

ஐரோப்பாவில் மட்டுமல்ல, அமெரிக்காவிலும் ஜனங்கள் சம்பாஷணைகளிலும், கட்டுரைகளிலும், பத்திரிகைகளிலும் திறமை வாய்ந்த சர்வாதிகாரியை யெதிர்பார்த்து நின்றதாகத் தெரிகிறது. ரூஸ்வெல்ட் அதிகாரத்திற்கு வந்ததே இப்பொழுது அனேகருக்கு ஆறுதலளித்திருக்கிறது.

சரித்திர மாணவர்களுக்கு இத்தகைய நிகழ்ச்சிகள் உற்சாகத்தைக் கொடுக்கும். மனித சுபாவத்தை அறிய விழையும் அனேகருக்கு, ராஜ தந்திரத்தைப் பார்க்கிலும், அதில் தேர்ச்சிபெற்று சர்வாதிகளாக விளங்கும் பெரியார்களின் குணாதிசயங்களைத் தெரிந்துகொள்ளவே ஆவலிருக்கும். ஒவ்வொரு காலத்திலும் பல விடங்களில் அவசியத்திற் கேற்ப இத்தகைய மனிதர்கள் தோன்றுகிறார்கள். ஆனால் நமக்கு இவர்கள் புதியவர்கள்தான். நம்மில் தினசரி காரியங்களுக்குப் புறம்பான விஷயங்களில் தலையிடுபவர்களும், பெரிய காரியங்களைப் பற்றிச் சிந்திக்க முற்படுபவர்களும், இவர்களைப்பற்றி அசிரத்தைகொள்ள முடியாது. ஏராளமான ஜனங்களின் நம்பிக்கையைப் பெற்றவர்களும், ஜனங்களின் உரிமையான காரியங்களைத் தங்கள் தலைமேற் போட்டுக்கொண்டு நடத்தும் இந்த மனிதர்கள் எத்துணையான சக்தி வாய்ந்தவர்கள்.

பழக்கமற்றவர்கள்

ஒரு விஷயமட்டும் சாதாரணமாய்த் தெரிகிறது. மேலே குறிப்பிட்டவர்க ளெல்லாம் பழக்கமற்றவர்கள். எங்கு பார்த்தாலும் பழைய கூட்டத்திற்கு மதிப்பில்லை. புதிதாக யெவராவது தலைவர்களாகத் தோன்றட்டு மென்று எதிர் பார்க்கிறார்கள். லெனின், முசோலினி, ஹிட்லர் முதலியோர் பதவிக்கு வருமுன்னர் அரசாங்கத்தில் சிறிதும் அநுபோகமில்லா திருந்தார்கள். ஜுகோஸ்லோவாக்யா என்ற தேசத்தில் மாத்திரம் தற்காலீகமாக கவர்னர் (Acting Governor) உத்தியோகம் வகித்தவர் சர்வாதிகாரியாக முயற்சித்ததுண்டு; ஆனால் பலன்படவில்லை. இதற்குக் காரணம் சர்வசாதாரணமானது. குடியரசு திடீரென்று புதுமாதிரியில் கொடுங்கோன்மைக்கு ஆரம்பித்துவிட்டால், வெற்றி பெறாது திண்ணமாய் அழிந்துவிடும். ராஜ தந்திரத்தை யிதுவரை கையாளாதவர்களே திறமை வாய்ந்த சர்வாதிகாரிகளாக முடியும்.

என் திரவியங்களை அற நெறி நிற்போற்கும், வாலிபத்தை பாடுபடுவதற்கும், உயிரை என்னுள் பிரகாசிக்கும் ஆண்டவன் பணிக்கும் அர்ப்பணிக்கிறேன்.

நம்மில் அனேகர், அயர்லாந்து சுதந்திரம் வாய்ந்த ஜனநாயக ஆட்சியின்கீழ் உள்ளது என்று நம்புகிறோம். ஆனால் உண்மையாக நோக்கும் பொழுது வேறு விதமானது. பார்லிமெண்ட் சபையில் டி'வெலரா வீற்றிருக்கும்வரை, அவரோடு சர்வாதிகாரமும் இருக்கும். இதை ஐரிஷ் மக்கள் சும்மா விட்டு விடுவதோடு கூட ஆமோதிக்கின்றார்கள். அவர்மீது ஜனங்களுக்குள்ள நம்பிக்கை அத்துணையானது. அவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை மாற்றினாலும் ஒரு வித்தியாசமும் ஏற்படாது. ஆயுதந் தரித்த வீரர்களை அவர் தமது கைக்குள் வைத்திருக்கும்வரை இவ்வாறுதான். எதிலிலும் தன் னம்பிக்கை மிகுந்த அவர் தனக்குப் பயத்தைக் கொடுக்கும் எதிர் கட்சியின் மீதும் பிரயோகிக்கமாட்டார். தன்னைப் போன்ற தீவிர தேச பக்தி வாய்ந்த லக்ஷக் கணக்கான ஜனங்களின் நம்பிக்கையைப் பெற்ற அவர் யாருக்கு பயப்பட வேண்டும்?

லக்ஷியம்

இப்பொழுது டி'வெலராவின் லக்ஷியம் அயர்லாந்திற்கு முழு சுதந்திரமும் கிடைக்க வேண்டும் என்பதே. இதுவே பொதுவாக அவரது வாழ்க்கையின் வழிகாட்டியான கொள்கை. ஒரு காலத்தில் குடியேற்ற நாட்டு அந்தஸ்திற்காகப் பாடுபட்டார். மற்றொரு தடவை சுய ஆட்சி (Home Rule) க்காகப் பாடுபட்டார். ராஜ தந்திரத்தில் சொந்தக் கொள்கைகளைப் புகுத்த முயல்வது அனாவஸ்ய மென்றும், அபாயகரமானதென்றும் ஒருமேதாவி கூறுகின்றார். கால நிலைகள் அடிக்கடி மாறுகின்றன. சாமர்த்தியசாலியான ராஜ தந்திரி, இடம், பொருள், ஏவலுக்கு ஏற்றவாறு நடப்பான். டி'வெலராவை உறுதியான கொள்கை யற்றவமென்று கூறுவது பொருத்தமற்றது. எந்தக் காலத்திலாவது பிரசித்தி பெற்ற தலைவர்கள் எதிரிகளைத் தாக்கும் பொழுது முன் பின் யோஜனைகளுடன் நடந்ததுண்டா? அயர்லா

பாத்தியதையும் கடமையும் தொடர்ந்தே செல்லுகின்றன. தங்கள் பாத்தியதையை நிலைநாட்ட முன்வருவோர் கடமையைப்பற்றிச் சிந்திப்பதில்லையே!

ந்தின் உள் நாட்டுக் கலகத்தை ஆமோதிக்கும் பொழுது, டி'வெலரா முன் பின் யோஜனை செய்ய வில்லை. ஆனாலும் தான் தேசத்தின் அவசியத்திற்குத் தக்கபடி இத்தகைய முறைகளைக் கையாள வேண்டியது முக்கியமென்று வாதாடி யிருக்கிறார்.

இவ்வளவு துணிகரமான செயல்களைச் செய்யத் தூண்டியது அவரது தந்நல விழைவா, அல்லது தேசபக்தியா யென்று பலர் சந்தேகிக்கலாம். சமாதான மற்ற காலங்களில் தோன்றும் பெரிய மனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளினின்றே இத்தகைய சந்தேகங்கள் ஏற்படலாம். தங்களது நிலைமையைக் காப்பாற்றிக் கொள்ளத் தீவிர வாதிகளாகவே யவர்கள் இருக்கக்கடமைப் பட்டிருக்கிறார்கள். அப்பொழுது செய்யுங்காரியங்கள், தியாகங்கள் அபூர்வமானவை தான். ஆனால் மிதவாதியாகிவிடும் பக்ஷத்தில் மற்றவர்கள் அவனிருந்த பதவிக்கு வந்துவிடுவார்கள். இது சரித்திர பூர்வமான சம்பவம்.

அயர்லாந்தின் தலைநகரமாகிய டப்ளினுக்கு வந்தநாள் முதல் டி'வெலரா தக்ஷிண தொண்டர்படை யொன்றைத் திரட்டத் தொடங்கினார். தனது சாமர்த்தியத்தால் நெடுநாளளவும் அதற்குத் தலைவராயிருந்தார். ராணுவப்பயிர்ச்சியுங் கொடுத்தார். இவரது செயல்களைக் கண்ட அரசாங்கம் இவரைப்பிடித்து சிறை செய்து மரண தண்டனையளித்தது. அதுநிறைவேறு முன்னர் அமெரிக்கா பிரஜை யென்ற முறையில் ஜன்ம தண்டனையாக மாற்றப்பட்டது. மறு வருஷமாகிய 1817-ல் விடுதலையானார்.

சிறை வாசம்

அநேகம் ஐரிஷ் கலகக்காரர்களுடன் லின்கான் சிறையில் 1818-ம் வருஷம் போடப்பட்டார். அங்கு அவர்களுடன் சேர்ந்து சதி செய்யத் தொடங்கினார். இந்தக் கைதிகள் ஒன்றுகூடி அயர்லாந்தின் சுதந்திரத்திற்கு உழைக்கப் பல சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டனர். ஒருவருக்கொருவர் இட்ட சண்டையினால் சங்கங்கள் சீர் குலையவும், ராணுவம் ஒன்றை நிறுவிக்கொண்டார்கள். அதற்கு டி'வெலராவைத் தலைவராக நியமித்தார்கள், அதிகாரத்தின் ருஜியை யறிந்த அந்த வேளையிலிருந்து அதைக்கைவிட அவருக்கு மனமில்லாமற் போய்விட்டது.

மைகேல் காலின்ஸ் என்ற நண்பர், இவரைச் சிறையிலிருந்து தப்புவிக்க வேண்டுமென்று முயன்றார். சிறையின் கதவுத் தாழ்ப்பா

சிறியோர் வழிதப்பிச் சென்றாலும் பன்முறை அவர்களைச் சீர்திருத்த முயல்வது பெரியோர் கடன்.

ளுக்குச் சரியாக ஒரு கள்ளச்சாவி செய்யப் பிரயத்தனஞ்செய்தார். சிறைக்குள்ளிருக்கும் ரோமன் காதோலிக் கோயிலின் ஒரு பொறுப்பு இவரிடம் விடப்பட்டிருந்ததால், அங்கு வரும் மெழுகுவத்திகளைக் கொண்டுவந்து சாவியின் அளவிற்கு ஒரு பிரதியெடுத்துத் திருட்டுச் சாவி செய்தார். அதன் மூலமாக அவர் தப்பி தேசிய வீரரானார். ஆங்கிலேயரின் சாமர்த்தியத்தையும் தோற்கடித்து விட்டதாகக் கருதப்பட்டார். (உண்மையில் இவரைத் தப்பச்செய்தது மைகேல் காலின்ஸ்) குற்றஞ் செய்த தேசிய வாதிகளுக்கெல்லாம் விடுதலை சாசனம் வழங்கியவுடன் டப்ளின் நகருக்குள் பிரவேசித்தார். உடனே சில நாட்களில் மந்திரி சபையை நியமிக்க அயர்லாந்தின் நிர்வாகத் தலைவரானார்.

எப்பொழுதுமே இவர் தன் விருப்பப்படி நடப்பவர். அதில் சித்தியும் பெற்றவர். தன் தாயின் ஜாதிக்குத் தொண்டு செய்யத் தூண்டப் பெற்றார். தன் தந்தையின் ஜாதிக்கேற்றபடி வீரம் வாய்ந்தவரா யிருந்தார். ஸ்பானிய பிடிவாதம் அயர்லாந்தின் சோம்பலைக் கெடுத்தது. இங்கிலாந்து எப்பொழுதுமே சமாதானத்தை விரும்புவது. சட்டத்தை சிருஷ்டிக்கும் ஒருவன், அதையெல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறான். இது இங்கிலாந்திலும், ஸ்காத்லந்திலும் செல்லாது. ஆனால் அயர்லாந்தின் தலைமைப் பதவிக்கு இதுதான் தகுந்தது. பார்னல் இக் கட்சியைச் சேர்ந்தவர். இவர்களிருவருக்கும் மிக ஒற்றுமையுண்டு. சிலர் டி'வெலராவை வெறுக்கத் தொடங்கினர். சிலர் மைகேல் காலின்சின் கொலைக்குக் காரண பூதரென்றுங்கூட பழித்தனர்.

தப்பு அபிப்பிராயங்கள்

டி'வெலராவோடு நெருங்கிப் பழகினவர்களின் அபிப்பிராயங்கள் பலவுள. சொல்லும்படி காரியத்தில் நடப்பவர்களைப் பற்றி ஜனங்கள் தப்பிதமான அபிப்பிராயங் கொள்கின்றனர். அவரை ஆதரித்தவரில் பெரும்பான்மையோர் முன்னே தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக வாளுடன் யுத்தகளத்தில் மடிந்திராவிட்டால் நிச்சயமாக ஸ்தம்பித்துப் போயிருப்பார்.

அவரது ஆபோதனையின் பேரில் எண்ணற்ற கொலைகளும், மதவெறியான செயல்களும் நடந்திருக்கின்றன. பால்மர்ஸ்டன்

மனிதன் தன் முழு ஆயுளையும் வயிற்று வழிபாட்டிற்கே கொட்டி, வந்த வினையை மறந்துவிடுகிறான். சோற்றுக் கவலையை யொழிப்பதே சுத்த நெறியின் முதற் படி.

சொல்லுவது போன்று மனித உள்ளத்தில் ஒரு இச்சையுண்டு. அது சுதந்திரம் விரும்பும் ஆசையைவிட, நியாயத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற சிந்தனையைவிட பலமானது. அதுதான் தீங்கிளைப்பதுவும், மற்றவரின் சுதந்திரத்தைப் பறிப்பதுவும். தேசீய உலகில் காணப்படும் தீங்குகள் பலவற்றுள் இதைப் போன்று கொடியது மற்றொன்றுமில்லை. அடிமை நாட்டாரின் மீது இத்தகைய காரியங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இப்பொழுது டி'வெலராவுக்குத் தன்னைப் பின்பற்றுவோர்களைப் பார்த்து 'இரத்தத்தில் நீந்துமாறு' கட்டளையிட வேண்டிய அவசியமில்லை. தான் செய்யச் சொல்லுங் காரியங்களை அவைகளினால் வரும் நன்மையை யெதிர்பார்த்தே சொல்வார். பொருளாதார அடிமைத்தனத்தை வெறுக்கின்றார். தன் அயர்லாந்து பிற நாட்டுப் பொருள்களை வாங்கக் கூடாதென்று கூறுகிறார். தங் நாட்டுப் பொருள்களை யெவனும் வாங்காவிட்டால் தேசத்திற்கு வருங் கேடு அளவற்றதென்பது அவர் கருத்து. ஜனங்கள் உழுதுண்டு நிம்மதியான வாழ்க்கை நடத்த வேண்டும். ஐம்பது வருடங்களுக்கு முன்னால் ஜனங்கள் வாழ்ந்ததும் அவ்வாறே. முடிவாகக் கூறுமிடத்து டி'வெலராவின் கொள்கை மிகவும் பிற்போக்கானது.

பூரண சுதந்திரம்

சமீபத்தில் நடந்த ஐரிஷ் தேர்தலில் டி'வெலராவின் கட்சி பெரும்பான்மையான வாக்கால் வெற்றி யடைந்தது. இதைக் கண்டதும் பல ஆங்கிலேயர்கள் பீதிகொள்ளத் தொடங்கினர். அயர்லாந்திற்கும், இங்கிலாந்திற்கும் யாதொரு சம்பந்தமும் இருக்கக்கூடாது. ராஜவிஸ்வாஸப் பிரமாணமும், கொடுக்கும் வருஷாந்திரப் பணமும் நின்றுவிட வேண்டுமென்று கர்ஜித்துத் தனது கட்சியாரால் பார்லிமெண்டில் ஓர் தீர்மானமும் செய்துவிட்டார். பலர் இரு நாடுகளுக்கும் போர் வரும் என்று எதிர்பார்த்தனர். தெய்வாதீனமாக ஒன்றும் நிகழவில்லை.

சுதந்திரத்தை விரும்பி நிற்கும் பிற நாட்டினர்க்கு இப்பொழுது இவர் வழிகாட்டியாக விளங்குகிறார்.

பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை உலகின் தேவைக்குத் தக்கபடி ஒரு தெய்வீக புருஷனால் ஒரு உண்மை தெரிவிக்கப்படும். இப்போதும் ஒருவன் தோன்றியுள்ளான்—காந்தி. அவன் தெரிவிப்பது:—ஒற்றுமை, சுதந்திரம், ஸமரஸ ஸன்மார்க்கம்.

தமிழரும் தாய்மொழியும்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி".

தமிழ்த் தெய்வ வணக்கம்

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

மனோன்மணீயம்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப் போல்

ஈராறு மாதம் அங்கமெல்லாம் நொந்து பெற்ற அன்னை, தாலி கட்டக் கழுத்தைக் கொடுத்த மனைவி, தனக்குப் பிறந்த குழந்தை ஆகிய இம் மூவர் பேரில் எவனொருவனுக்கு ஆசையில்லையோ அவனை எதற்கும் நம்பொணாதே.

பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை,
வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒரு சொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

—பாரதியார்

பாஷை

"மனிதன் தன்னுடைய தேவைகளையும் குறைகளையும் சமூகத்தினிடம் சொல்லி, அவற்றைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக பாஷை மனிதனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நாம் எதை விரும்பினாலும் எதற்கு ஆசைப்பட்டாலும் அவ் விருப்பங்களையும் ஆசைகளையும் வார்த்தைகள் மூலமாகவே வெளியிட வேண்டும். ஆதலின் நமது தேவைகளைச் சொல்லி அவற்றை விரைவில் பூர்த்தி செய்துகொள்வதே பாஷையின் முக்கிய உபயோகமாகும்" என்று பெயர் பெற்ற ஆங்கிலக் கவியும் நூலாசிரியருமான ஆலிவர் கோல்ட்ஸ்மித் எழுதுகிறார். உடலில் உரமும் அறிவின் ஆற்றலும் ஆகிய இரண்டு சித்திகளே மனித வாழ்விற்கு அவசியமானது. உடம்பில் வன்மை யில்லையேல், அறிவின் ஆற்றல் இல்லை. பகுத்தறியும் சக்தி மனிதர்களிடம் இருப்பதாலேயே பாஷையும் அவர்களிடம் உண்டாயிருக்கிறது. இதனாலன்றோ மா பெரும் பண்டிதராகிய மாக்ஸ் முல்லர் "அறிவின்றி பாஷை ஏற்படாது; பாஷை யின்றி அறிவு வளர்ச்சி யில்லை" யென்று சொல்லுகிறார். நாம் பிறந்ததுவும் நமக்கு வேண்டுவது யாது? அன்னை அன்போடு அளிக்கும் "அமுதப் பாலும் அவள் அருமையுடன் பேசும் அன்னை மொழியுமே."

அறிவு விளக்கத்திற்கும் விசாலத்திற்கும் சுலபமாக அறிந்து கொள்வதற்கும் தாய் மொழி போன்று வேறு மொழி உதவி செய்யாது. ஒரு பாஷை ஒருவனுடைய உட் கருத்துக்களை உருவாக்கி வெளியிட எவ்விதம் உபயோகம் ஆகிறதோ, அவ்வாறே ஒரு மொழியினைப் பேசும் வகுப்பினரது உள் வாழ்வு, புற வாழ்வு ஆகிய இரண்டையும் மற்றவர்களுக்கு பாஷை அறிவிக்கும். மாதுரு பாஷையின் மூலமாகத்தான் மாதுரு தேச பக்தியை மக்களிடை அபிவிருத்தி செய்ய முடியும். தேசிய வளர்ச்சிக்குச் சிறந்த சாதனம் தாய் மொழி வளர்ச்சியே. "யாருக்குத் தாய்மொழிப்

சத்தியம், அறிவு, தர்மம், இரக்கம், சாந்தம், சகிப்புத் தன்மை இவை வாழ்வின் நெறிகளாகும். மனித வாழ்விற்கு இவை தாய், தந்தை, சகோதரன், சிநேகன், மனைவி போன்றன.

பற்றில்லையோ அவனுக்குத் தாய்நாட்டின்மீது பற்றுக் கிடையாது" என்பது ஆங்கில அருங் கவி லார்ட் பைரன் வாக்கு.

எத் தேசம் அபிவிருத்தி யடைந்திருக்கிறதோ அதன் தாய் மொழி போற்றப்படுவதைக் காணலாம். ஒரு தேசத்தில் ஒற்றுமையை வளர்ப்பதற்கு, தேசம் பாஷை என்னும் இரண்டில், தேசமே முதன்மை பெற்றிருப்பினும், தேசப் பற்றிற்கு அடிப்படைத் தாய் மொழிப் பற்றே. எச் சாதியா யிருப்பினும், எம் மதத்தினரா யிருப்பினும் பாஷையே ஒற்றுமையை நிலைநாட்டும். பாஷையின்றித் தேசமில்லை, மதமில்லை, சமூகமில்லை. "பாஷை என்பது சரீரத்தின் மேல் அணியப்படும் ஆடையன்று. அது சரீரத்தின் முக்கிய பாகமாகிய மேல் தோல். அதை இஷ்டம்போல் கடன் வாங்கி அனுபவிப்பதென்பது இயலாது. அதை நினைத்தபோது கழற்றி வீசிவிடுவது என்பது சாத்தியமன்று. நாகரீகமும் அறிவு வளர்ச்சியும் பாஷையை ஆதாரமாகக் கொண்டுள்ளன" என்று ஓர் அறிஞர் கூறுகிறார்.

ஒரு பாஷைக்குப் புத்துயிரும் புத் துணர்ச்சியும் புத்தொளியும் புத் தழகும் கொடுப்பவர்கள் கவிகள் அன்றோ? ஒரு நாட்டிற்கு அதன் தேசமே உயிரென்றால், அதன் சுதந்திரமே மூச்சென்றால், அதன் சொந்த மொழியே அதன் இரத்த ஓட்டமாகும். ஒரு தேசத்தில் தேசிய உணர்ச்சி அதிகம் ஏற்படவேண்டுமானால், அத் தேசத்தில் பாஷா உணர்ச்சி அதிகம் ஏற்படல் வேண்டும். அறிவின் அபிவிருத்திக்கும், ஆத்மீக அபிவிருத்திக்கும், சன்மார்க்க வளர்ச்சிக்கும், ஏதோ ஒரு ஜீவனத்திற்கும் உபயோகமாகும் பொருட்டு ஆதியில் நம் நாட்டில் கல்வி கற்றார்களேயன்றி, கற்பிக்கப்பட்டார்களேயன்றி, தற்காலத்தைப்போல் வயிறு வளர்ப்பதற்காக மட்டும் கல்வி கற்கவில்லை; கல்வி கற்பிக்கப்படவில்லை. தாய்மொழிப் பற்று இரத்தத்தில் ஊறிவிடுகிறது; வாழ்வில் கலந்துவிடுகிறது. பாஷைப் பழகப் பழக ஒருவித காந்த சக்தி அடைகிறது. அச் சக்தி ஒவ்வொரு வார்த்தையிலும் இருக்கிறது. அவரவர்களின் ஜாதியாருக்குத்தான் அவரவர்களின் மொழியின் மேன்மை தெரியும். அயலார்களுக்கு அது தெரியாது; அதில் ஒரு வசீகர சக்தி இருப்பதாகவும் மற்றவர்கள் அறிந்துகொள்ள முடியாது. தமிழர்கள் பேசும் பாஷையான தமிழ், காந்தம் போன்று தமிழர்களை வசீகரிக்கும். இக் காந்த சக்திதான் தமிழர்களைத் தட்டி எழுப்பி ஒன்று சேர்த்துக் கட்டி இழுக்கும் ஆற்றல் வாய்ந்தது.

அறத்தைக் காக்க உயிரையும் மற்றனைத்தையும் தியாகம் செய்வதே மேலானது. உயிரிழப்பது ஸ்திரமானதல்ல; அறந் தவிர்ப்பது என்று மழியா அவமானமாகும்.

தமிழின் தொன்மை

இளமை முதற்கொண்டு ஆங்கிலம் ஆழ்ந்து பயின்று, ஆங்கில நாகரீகத்தில் மூழ்கியிருக்கும் ஒரு தமிழரைத் திடீரென்று பலமாய்த் தாக்கினால், "ஐயோ" என்று தமிழில்தான் கத்துவாரேயன்றி, ஆங்கிலத்தில் "Alas! My God, Help me" (ஐயோ! கடவுளே, என்னைக் காப்பாற்று) என்று கூவமாட்டார். ஒவ்வொரு தேசத்தாரை அவர் பேசும் மொழியால்தான் அழைப்பது வழக்கம். தமிழைத் தாய்ப்பாஷையாகக் கொண்டு தமிழில் பேசுவதாலல்லவோ, நாமும் தமிழர் என்று அழைக்கப்படுகிறோம். தமிழ் என்ற வார்த்தைக்கே இனிமை அமுதம் என்னும் அருத்தமாகும். அதன் உச்சரிப்பு இனிது; அதன் இலக்கணம் இனிது; அதன் இலக்கியம் இனிது; அதன் கருத்து இனிது. ஒரு விஷயத்தை அயல் மொழியின் மூலமாக அறிவதைக் காட்டிலும், சொந்த பாஷையின் வழியாக அறிவதே இலகுவாயிருக்கும், இன்பமாயிருக்கும். பண்டைத் தமிழரசர்களும், தமிழர்களும், தமிழறிஞர்களும், பண்டிதர்களும் தமிழின் அருமை பெருமைகளை யறிந்து மொழிப்பற்றுக் கொண்டு, எவ்வளவுதூரம் தமிழை வளர்த்திருக்கிறார்கள்! மதுரைத் தமிழ்ச் சங்கம் எவ்வாறு ஆதரிக்கப்பட்டது!

அக் காலத்துப் புலவர்களது அன்பு ததும்பும் ஆர்வ மிக்க பொருள்கள் நிறைந்த இன்ப மொழிகளால் ஆக்கப்பெற்ற நூற்களால் தமிழ் மாது அலங்கரிக்கப் பெற்றிருக்கிறாள். தமிழ் இலக்கியப் பூங்காவில் அன்று பூத்த பூக்கள் இனியும் தமிழகத்தில் கமழ்ந்துகொண் டிருக்கின்றன. தமிழ் நாட்டின் அருந்தனமாகிய நாயன்மார்கள், கடவுளிடம் காட்டிய ஆழ்ந்த அன்பின் அடையாளமாக—ஆழ்வார்கள் அகத்திலிருந்து பொங்கிப் புரண்டு புறப்பட்ட அளவற்ற அன்பின் அடையாளமாக அவர்கள் இறைவனுக்கு இட்ட தண் தமிழ்ப் பா மாலைகள் இன்றளவும் வாடாது நிலைத்து நின்று தமிழக மெங்கும் மணந்து கொண்டிருக்கின்றன.

"கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ் நாடு.
வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி கார மென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ் நாடு."

மனித வாழ்வைத் தூய்மைப்படுத்தி, சுத்த நிலைக்கு ஜீவனை யழைத்துச் செல்லுவதே தர்மத்தின் பணி.

என்று "அருந் தமிழ்ச் சுவைகண்டு செந் தேன் சொரியும் செஞ்சொற் கவி" பாரதியார் தமிழ் நூல்களின் உயர்வைக்கொண்டே தமிழ் நாட்டைப் புகழ்வது மனதைக் கவர்கின்றது. எந் நாட்டில் பாஷாபிமானம் கொழுந்துவிட் டெரிகிறதோ, அந் நாட்டில் நூற்களும், கலைகளும் கணக்கற்ற உண்டாவதைக் காணலாம். நம் நாட்டின் வேதாந்திகள், சித்தாந்திகள், இன்னும் அநேக கலை ஞானிகள் கண்ட உண்மைகளையெல்லாம் ஆதியில் நமது தாய்ப் பாஷையிலேயே எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். பண்டைத் தமிழர் நாகரீகத்தின் நிலையை உள்ளபடி ஆராய்வதற்குத் தமிழின் ஆதரவின்றிப் பிறமொழியினால் முடியுமா? முடியாது, முடியாது. எல்லா நாட்டினர்களும், எல்லா மதத்தினர்களும், எல்லாப் பிரிவினர்களும், எல்லா வயதினர்களும், எல்லாக் காலத்தவர்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய தமிழ் வேதமாம் திருக்குறளை உலகத்திற்குக் கொடுத்திருக்கிறது தமிழ் நாடு என்ற பெருமை "தமிழ்" என்ற பதம் உலகத்தில் இருக்கும் வரை அழியாதது. தமிழ் இல்லாவிட்டால் நாயன்மார்கள் இல்லை, ஆழ்வார்கள் இல்லை, வள்ளுவர் இல்லை, ஔவை இல்லை, இளங்கோவடிகள் இல்லை, கம்பரில்லை, தமிழர் நாகரீகமே யில்லை, தமிழர் கலைகள் இல்லை. சொந்த பாஷை இல்லாவிட்டால், என்னதான் இருக்கும்? சுருங்கச் சொன்னால், தமிழர்களுக்கு ஒன்றுமே போற்றுவதற்குரியது இராது, இராது. பண்டைப் பெருமையைப் பற்றி பன்னிப் பன்னிப் பலப்பல பகருவதிற் பயனொன்றுமில்லை.

கிறிஸ்து பிறப்பதற்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்த சில நாகரீகச் சின்னங்கள் நம் தேசத்தில் ஓரிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாக அறியப்படுகிறது. நமது நாடும், பாஷையும் புராதீனமானவை. இன்னும் அவைகளைத் தெய்வீகத் தன்மை வாய்ந்ததெனப் போற்றுகிறோம். புதிதாய் விருத்தியான அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களில் புதிதாகக் குடியேறிய ஐரோப்பியர்களால் ஆதியில் பேசப்பட்ட, இப்பொழுதும் அதிகமாகப் பேசப்படுகிற ஆங்கில பாஷையே அத் தேசீய வளர்ச்சிக்கும், இயற்கை வளர்ச்சிக்கும் ஒவ்வாமலிருக்கும்பொழுது, பண்டை நாகரீகம் உயிருடனிருக்கும் தமிழகத்தில் ஆங்கிலேயருடைய பாஷையும், நாகரீகமும் எங்ஙனம் பொருத்தமுள்ளதா யிருக்கும்? நமது அறிவைப் பெருக்க இங்கிலீஷ் மூலமான போதனை எள்ளளவும் ஏற்றதன்று என்பதை எவரும் மறுக்கமுடியாது. இதன் உண்மையான தத்து

உங்கள் இயற்கையழகை மண் வகையான பொன் அணியுறுத்துமோ? அத் தீய மண்—பொன் உங்கள் உடலை அழுக்குப் படுத்தப்படுத்த உங்கள் மனதில் ஒரு செறுக்கும், அகந்தையும், பேராசையும், தற்புகழும், பெருமையும் எழுவதை அறிந்திலீரோ!

வத்தைக் கண்டு, தேச பாஷையின் மூலம் கல்வி புகட்ட வேண்டுமென அநேகர் கிளர்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். தாய்மொழி மூலம் கல்வி கற்பிக்கப்பட்டிருந்தால், நமது இன்றைய சரித்திரமே வேறு விதமாக மாறியிருக்கும்.

தமிழின் தற்கால நிலை

தமிழ்ப் பாஷையின் தற்கால நிலைமையைச் சற்று கவனித்துப் பார்ப்போம். சமஸ்கிருதம் கலவாத தனித் தமிழில் பேசவேண்டும், நூற்களை வாசிக்கவேண்டும், எழுதவேண்டும் என்று வாதாடுகிற சிலரும், அயல் மொழிகள் கலவாமலும் வழக்கச் சொற்கள் விரவாமலும் தமிழ்ப் பாஷையின் தூய்மையைக் காப்பாற்றுவதாகக் கூறி விபரீதமாகத் தூய தமிழ் முயற்சி செய்யும் சிலரும், உலகத்தின் மாறுபாட்டையும், காலத்தின் கடு வேகத்தையும் கவனியாது, வெறும் இலக்கிய இலக்கணத்தைமட்டும் படித்துவிட்டு, இந்தியாவின் வடக்கு எல்லை எது என அறியக்கூடிய அவ்வளவு பொது அறிவு கூட அடையாத சிலரும், இங்கிலீஷ் பாஷையில் பேசுவதும் எழுதுவதும் கௌரவமென்றும் தாய் மொழியை உல்லங்கனம் செய்வது குற்றமில்லையென்றும் கருதும் சிலரும் ஒருபக்கம் தமிழின் அபிவிருத்தியைக் கெடுத்துக்கொண்டிருக்க, சர்க்காரும் தமிழுக்குத் தக்கபடி ஆதரவு அளியாது, நம் நாட்டுக் கல்வியை நெகிழவிட்டு, ஆங்கிலத்தை அரசாங்க பாஷையென்று அதிகமாக ஆதரித்ததின் பயனாகத் தமிழ் நன்கு மதிக்கப்படவில்லையாகையால், ஆட்சிபுரிவோரும் இன்னொருபக்கம் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஓர் ஏவலாள் வேலை பார்க்கச் சென்றாலும், "எஸ் சார், 'நோ, சார்" என்ற வாக்குகளை ஆங்கிலத்தில் அவசியம் அறிந்திருக்க வேண்டியிருக்கிறபடியால், மாணவர்களும் ஆங்கிலத்தில் அதிமோகங்கொண்டு, அதை ஆவலுடன் கற்கத் தொடங்கி, அநேகர் ஆங்கிலத்திலும் தமிழிலும் தக்க பயிற்சி யில்லாது, அலங்கோலமான விதமாய்ப் பேசியும் எழுதியும் வருகிறார்கள்.

ஜப்பான் தேசத்தில் பெரிய மேதாவிகள் தங்களுடைய சொந்த பாஷையில் வெளிவரும் வர்த்தமானப் பத்திரிகைகளையே அதிகமாக வாசிக்கிறார்களாகையால், அங்கு தேச பாஷை அதிக உரம்பெற்று உண்டாகிக்கொண்டு வருகிறது. தமிழில் வாசிப்பது கேவலம் என்று நினைக்கும் மனிதர்கள் தாய்மொழியை வளர்க்காவிட்டாலும், அதை

அர்ச்சுனன் கூறுகிறான்:—பிறர் வீட்டில் புசிப்பதே பிராம்மணர்களுக்கு வெகு பிரியம்; பசும்புல் மேய்வது ஆடுகளுக்குச் சந்தோஷம்; விட்டுப்பிரிந்த கணவன் திரும்பிவருவதைப் பார்ப்பதே பதிவிரதைக்கு ஆனந்தம்; எனக்கோ போர்முனையில் நிற்பதே பரமானந்தம்.

நாசப்படுத்திக்கொண்டிருக்கிறார்களென்று ஏன் சொல்லக்கூடாது? மத ஸ்தாபகர்களான இயேசுநாதர், முகம்மது நபிநாயகம், புத்தபிரான், ஆச்சாரியார் சங்கரர், இராமானுஜர் முதலியோர்கள் பேசியதும் அவரவர்களுடைய தாய்பாஷையிலேயே. புத்தரை சில பிராமணர்கள் சமஸ்கிருதத்திலேயே பேசவேண்டும், எழுதவேண்டும் என்று கேட்டுக்கொள்ள, "பொதுஜனங்கள் எல்லாரும் அறிந்திருக்கும் பாஷையிலேயே பேசுவேன்" என்றார். உலகமே உச்சிமேற் கொள்ளும் திருக்குறள் ஆசிரியரான தன்னேரில்லாப் புலவர் பெருமான் திருவள்ளுவனாரின் அருமையையும், காவிய நயங்களெல்லாம் பொங்கித் ததும்பும் இராம சரிதம் இயற்றிய கம்பரின் பெருமையையும், அரச மரபிற் தோன்றினும் அருந் தமிழ் அமுதத்தை உண்டு இளமையில் துறவு பூண்டதுமன்றி, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை உண்டாக்கிய இளங்கோ அடிகளின் உயர்வையும், தமிழ் பாஷைக்கு வந்த குற்றம் தனக்கு நேர்ந்த குற்றமாக நினைத்துத் துயரடைந்து தனது உடலை வருத்திய உண்மைப் புலவரான—மணிமேகலையைத் தமிழர்க்களித்த சீத்தலைச்சாத்தனாரின் பண்பையும், சின்னஞ் சிறு பாலகர்களுக்குங் கூட விளங்கும்படியான மேன்மையுற்ற பல நீதி நூற்களை உண்டாக்கிய ஔவை பிராட்டியாரின் மாண்பையும், பக்திரசம் கனிந்தொழுகும் அருளுடைய பாக்களைப் பரவசத்தால் பாடிய நாயனார்களது ஆழ்வார்களது ஆழ்ந்த அன்பையும், மனங் கவரும் இனிய இனிய வெண்பாக்களால் நள சரித்திரத்தை ஆக்கிய புலவர் புகழேந்தியின் புகழையும், தமிழகத்தின் முதலாவது ஜீவிய சரித்திர ஆசிரியராகும் பெரிய புராணம் பாடிய பக்தசிரோன்மணி சேக்கிழாரின் செல்வத்தையும், பண்டைத் தமிழ்ச் சங்கத்தின் உத்தம உயர்கவிகளின் உருசியையும், புகழ்பெற்ற புலவர்களின் வன்மையையும், மற்ற பண்டித பெருமக்கள் அருமை பெருமைகளையும் அறியாது, ஷேக்ஸ்பியர், மில்டன், வொட்ஸ்வொர்த், டென்னிஸன், பைரன், கீட்ஸ் முதலிய ஆங்கிலக் கவிகளை அறிந்து, ஆனந்திக்கும் தமிழர்கள் தமிழ் நாட்டில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்! காலத்தின் கொடுமையால், கோலத்தால் தமிழில் எண்ணுவதைக்கூட சிலர் மறந்து அயல் பாஷையில் எண்ண ஆரம்பித்திருக்கிறார்கள்.

நமது தேகம் சதமல்ல, திரவியம் சதமல்ல, யமன் பாசக்கயிற்றுடன் நம் வாசலில் நாள் எண்ணிக்கொண்டே நிற்கிறான். நம்மையு மறியாமல் கொண்டுபோய்விடுவான். ஆதலால் நாம் வாழ்ந்திருக்கும்போதே பிறர் நன்மை தேடவேண்டும்.

197891

தமிழ் நாட்டில் பிறந்து, தமிழைத் தாய் பாஷையாகப் பேசித் தமிழ் பயின்று, தமிழபிமானம் பூண்ட தமிழ் மக்கள் பலிருப்ப, அந்நிய நாடுகளில் பிறந்து, அந்நிய பாஷைகளில் மழலைப் பேச்சுக்கள் பேசி, அவைகளைப் பயின்று, பின் நமது தேசம் வந்து, தமிழ் கற்று, தமிழில் பல புஸ்தகங்கள் எழுதியும், சில அரிய நூற்களை அவர்தம் பாஷைகளில் மொழிபெயர்த்துமிருக்கும் கிறிஸ்தவ மத போதகர்களான பெஸ்கி (வீரமாமுனிவர்), கால்ட்வெல், வின்ஸ்லோ, ஸ்வார்ஸ், போப், டாக்டர் ஜோன், பிஸ்ஸெட், சட்சென், சாண்டலர், பாப்லி முதலியோர்களின் அருஞ்செயல்கள் நமக்கு நல்ல பாடங்களல்லவா? பிரான்ஸு தேசத்தில் தமிழராகிய நாமே கண்டு ஆச்சரியப்படும்படியாக ஒருவர் தமிழில் அவ்வளவு பாண்டித்தியத்துடன் விளங்குகின்றார். ஜூலியன் வின்சன் என்பது அவரது பெயராகும்.

இப்பொழுது அதி தீவிரமாக முன்னேறிக்கொண்டிருக்கும் நாடுகளான இங்கிலாந்து, ஐரோப்பாவிலுள்ள பல தேசங்கள், இன்னும் அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள், ஜப்பான் முதலிய தேசங்கள் நல்ல புகழ் பெறுவதற்குக் காரணம் அவர்களுடைய பாஷாபிமானமே. ஜப்பானியர்கள் ஐரோப்பிய நாகரீகத்தை அதிகமாகப் பின்பற்றியபோதிலும், ஜப்பானிய சர்வகலாசாலைகளில் தேச பாஷையை அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். நமக்குக் கொடுக்கப்படும் கல்வி முறை மாற்றப்பட்டாலன்றி. தமிழ் தக்கபடி தழைக்காது. இந்தியாவில் தப்பித் தவறி இயற்கையாகவோ, வரப்பிரசாதத்தாலோ, சுய முயற்சியாலோ, வெளிவரும் சிலரையுங்கூட நமது சர்வகலாசாலைகள் அறியாது கிடக்கின்றன. ஆசியாக் கண்டத்தின் ஆஸ்தான வித்துவானை நமது ரவீந்திரரை, புல் பூண்டுகளுக்கும் உயிருண்டு, உணர்வு உண்டு என்று உலகிற்கு விளக்கிக் காட்டிய அறிஞர் ஜகதீச சந்திர போஸை (Bose), ரசாயன சாஸ்திரத்தில் இந்தியரில் உயர்வாக விளங்கும் தியாகியாம் ஆசிரியர் பிரபுல சந்திர ராயை, கணித சாஸ்திரத்தில் அகிலமெங்கும் பேர்பெற்றிருக்கும் கேம்பிரிட்ஜ் கலாசாலை மெச்சிய விற்பனர் காலஞ் சென்ற இராமானுஜத்தை ஆழ்ந்து அறிய ஆவலில்லாத நமது சர்வகலாசாலைகளின் நிலையை எவ்வாறு விவரிப்போம்! நமது நாட்டின் சில மேதாவிகளை அயல் நாட்டார் அறிந்து, அவர்களைப் பல தேசங்களுக்கு அறிமுகம் செய்து, உற்சாகமளித்திருக்கிறார்கள். ஏறக்குறைய 20 வருடங்கள்வரைகூட மறந்துபோக முடியாத அவ்வளவு ஒரு பெரிய அறிஞரையேனும் இதுவரை நமது சென்னைச் சர்வகலாசாலை உண்டாக்கி யிருக்கவில்லையே. பரிதாபம்! பரிதாபம்!!

பாரதப் பெண்மணிகளே! உங்கள் உயர்வு நாட்டின் உயர்வு, உங்கள் களிப்பு நாட்டின் களிப்பு, உங்கள் கற்பு நாட்டின் புகழ்.

சில பாஷைகளின் வளர்ச்சி

மகரிஷி தேவேந்திரநாத தாகூர் தமது ஜீவிய சரித்திரத்தையும், "வந்தே மாதரம்" என்ற வார்த்தையை உண்டாக்கிய பங்கிம் சந்திர சாட்டர்ஜி; தேசாபிமானம் தகதகவென்று கொழுந்துவிட்டெரியும் அவருடைய நாவல்களையும், லோகமான்ய பாலகங்காதார திலகர் தமது ஒப்பற்ற "கீதா ரகஸியத்"தையும் தம் தம் தாய் மொழிகளிலேயே எழுதிவிட்டுச் சென்றார்கள். கவி ரவீந்திரர், தாம் இயற்றும் நூல்களை வங்காளத்திலும், சர் போஸ் (Bose) தாம் கண்டறிந்த நுட்பங்களைத் தன் தாய் பாஷையிலும், காந்தி அடிகள் தமது ஜீவிய சரித்திரத்தைக் குஜராத்தியிலுமாக அவரவர் மொழிகளிலேயே எழுதி யிருக்கிறார்கள்.

கீழ் நாட்டு மேல் நாட்டுக் கலைகளை ஒன்றாய்ப் போதிக்கும் "விஸ்வ பாரதி" என்ற சர்வ தேச சர்வ கலாசாலை (International University)யை உலகப் புகழ் பெற்ற கலா நிலயத்தை ஏற்படுத்திப் பெரும் பேர் பெற்றிருப்பவரும், ஆசியாக் கண்டத்தின் ஆஸ்தான வித்துவானென (Poet Laureate of Asia) உலக மக்களால் போற்றப் பெறுபவரும், வங்கத் துதித்த செங்கதிர் வேந்தரெனப் பாவலரால் புகழ்ந்துரைக்கப் படுபவருமான பேரறிஞர் ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் தமது "கீதாஞ்சலி" என்னும் நூலுக்காகவே நோபல் வெகுமதி என்னும் அண்டப் புலமைப் பரிசு பெற்றார். ஆதியில் கீதாஞ்சலியை வங்க மொழியில்தான் எழுதினார். அப்பால் அவர் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தமது நூற்கள் அனைத்தையும் பங்காளியில் எழுதிவிட்ட பிறகே, தான் இஷ்டப்பட்டவைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கிறார். இவரது அநேக பங்காளிப் புஸ்தகங்கள் இனியும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் படவில்லை. இவ்விதமே சிலர் ஆங்கிலத்தில் அதி அறிவாளிகளா யிருந்தும்; சொந்த பாஷைகளிலேயே அநேக நூல்கள் இயற்றுகிறார்கள். உலகம் போற்றும் சில மேதாவிகள் தாய் பாஷைகளை மட்டும் அறிந்திருக்கிறார்கள். இதற்குச் சான்று ஐரோப்பாவிற்கு மகாத்மா காந்தி அவர்களை அறிமுகம் செய்து வைத்து, அவரைத் தமது நூலின் மூலமாக அதிகமாக அறியும்படி செய்த பிரான்ஸு பெரியார் ரோமன் ரோலண்டுதான்.

தமிழ் பாஷையின் தற்கால நிலையைக் காண பாஷைப் பற்று, தேசப் பற்று உடைய எவரும் வருந்தாமலிருக்க முடியாது. தேசா

பிறர் பெண்டிரைத் தன் தாயைப்போலவும், பிறர் பொருளைத் தூசிபோலவும் பிறர் -யிரைத் தன் பொன்னுயி போலவும் கருதுவோனே புனிதனாவான்.

பிமானம் ஓங்கி வளர்வதற்குப் பாஷாபிவிருத்தியே ஒரு முக்கிய கருவியென்று தலைவர்கள் அடிக்கடி பல்லவி, அநு பல்லவிகளுடன் பாடிக்கொண்டிருந்தாலும், செய்கையில் தீவிரமாகக் காட்டுவோரைக் காணோம். ஏதோ சிலர், எங்கோ சிலர் இல்லாமலில்லை. 900 ஆண்டுகளுக்கு முன் உண்டான பாஷையாயிருப்பினும், ஒரு சிறிய தேசமாயிருப்பினும், சுமார் 15 வருஷங்களாக பாஷாபிமானிகளின் ஊக்கத்தால், உழைப்பால் மலையாள பாஷை எவ்வளவோ விருத்தியடைந்திருக்கிறது! இரத்னங்கள் போன்ற நவநவமான அன்னிய நூற்களை மொழிபெயர்த்து இலக்கியத்தைப் பெருக்கி யிருக்கிறார்கள் மலையாளிகள். தெலுங்கு அபிவிருத்திக்காக எவ்வளவு பாடுபட்டார்கள், பாடுபட்டுக்கொண் டிருக்கிறார்கள் ஆந்திரர்கள்! ஏராளமான நூற்கள் அங்கு குவிந்துகொண் டிருக்கின்றன. பூணூலைப் பூணு நூல் என்று சொல்லி, எடுத்து வீசி எறிந்த பண்டித வீரேசலிங்க பந்துலு தெலுங்கில் எவ்வளவு எழுதிப் புஸ்தகப் பொக்கிஷத்திற்கு உதவியிருக்கிறார்! வங்க பாஷையின் விருத்தியோ வேகம், வேகம். மராத்தி, குஜராத்தி பாஷைகளின் அபிவிருத்தியோ அதிகம்.

ஹிந்தியில் நவ நவமான புஸ்தகங்கள் எத்தனையோ வெளிவந்திருக்கின்றன, இன்னும் பல வெளிவந்துகொண் டிருக்கின்றன. பலப்பல பெரிய பத்திரிகைகள் இப் பாஷையில் பிரசுரிக்கப்பட்டு உலாவிக்கொண் டிருக்கின்றன. ஆங்கிலத்திலுள்ள அநேக அரிய நூற்கள் ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பெற்று நூற்களாக வெளிவந்திருக்கின்றன. உலகில் எங்கேனும் ஒரு முக்கிய பிரசுரம் தோன்றினால், அது ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பெற்று, விரைவில் நூலாக வெளிவந்துலாவும். நல்ல நல்ல நூற்கள் புதிய சுவைகளுடனும் புதிய கருத்துக்களுடனும் தோன்றி, ஹிந்தி இலக்கியப் பொக்கிஷத்தை நிரப்பிக்கொண்டிருக்கின்றன. ஹிந்தி ஒரு பூரணமடைந்த பாஷையா யில்லாவிட்டாலும், அபிவிருத்தி யாகிக்கொண்டிருக்கிற பாஷை (Language in Making) யாயிருந்தாலும், அது சுமார் 50 வருடங்களுக்குள் இந்தியாவின் எல்லா மொழிகளைக் காட்டிலும் அதிகம் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. இதற்குக் காரணம் ஹிந்தியின் பக்தர்களே. நம் நாட்டிற்கு ஒரு தேசீய பாஷை வேண்டுமெனக் கிளர்ச்சி தோன்றிய பொழுது, ஹிந்தியைத் தேசீய மொழி (National Language = Lingua Franca) யாக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஹிந்திப் பிரச்சாரம் நமது மாதுரு பூமி யெங்கும் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இவ்

அத்திமரத்தில் புஷ்பங்களைக் காணினும் காணலாம்; உச்சிமீது வானுளே வெள்ளைக் காகங்களையும் காணலாம்; தண்ணீரில் மீன்களின் கால்களையும் எண்ணலாம்; ஆனால் மாதர் மனோநிலையைக் காண்பது அரிதினுமரிதே.

வாறு நம் தேசத்தின் ஒவ்வொரு பாஷையைப் பற்றியும் எழுதலாம், பேசலாம். ஆவதென்ன? தமிழ் தளர்ச்சியுற்றிருப்பதைக் கண்டு வருத்தமுண்டாகும். மற்ற பாஷைகளின் அபிவிருத்தியைக் கண்டு ஆத்திரமுண்டாகும். உண்மையில் உண்டாக வேண்டியது பாஷாபிமானமே; பாஷையில் வெறியே.

மதுரைத் தமிழ்ச் சங்கம் இப்பொழுது எப்படி யிருக்கிறது? காலஞ் சென்ற ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்க ளில்லாவிட்டால் தமிழ்ச் சங்கம் என்று பெயரளவில்கூட இல்லாது போய்விடும். பண்டைக்காலம் பார்த்த தமிழ்ச் சங்கமா, முத்தமிழ் வளர்த்த தமிழ்ச் சங்கமா, உலகம் போற்றும் திருக்குறளை ஏற்ற சங்கமா, "நெற்றிக் கண் திறந்து..............." என்று சோமசுந்தரக் கடவுளை நோக்கி அஞ்சா நெஞ்சத்துடன் குற்றம் சாட்டித் தாக்கிய நக்கீரரை உண்டாக்கிய சங்கமா இது என்று ஆச்சர்யமும் வருத்தமும் உண்டாகிறது.

நம்மிடையில் உண்மையுடனும் உறுதியுடனும் பாஷாபிமானம் உண்டாகியிருந்தால், வள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், ஔவை, மதனலீலையார், ஆண்டாள் போன்ற அநேகம் அரிய பெரிய அறிஞர்களும் பண்டிதர்களும் உண்டாகி யிருப்பார்கள். அவர்கள் அநேக வழிகளில் உழைத்து நாட்டிற்கு நலம் செய்திருப்பார்கள். அப் பெரியார்கள் பல அரும் நூற்களை ஆக்கியிருப்பார்கள்; அநேக தொழில்கள் வளர்ந்திருக்கும்; நூற்களும் உண்டாகியிருக்கும்; தமிழ் நாடு உலகத்திற்குத் தமிழர் நாகரீகத்தை, கலைகளை, தத்துவங்களைப் போதித்திருக்கும்; உலகம் தமிழின் உயர்வை அறிந்திருக்கும்; மதித்திருக்கும். தெய்வீகம் வளர்ந்த தமிழ் நாட்டில்—அன்பு பொங்கிப் புரண்ட தமிழ் நாட்டில்—வீரம் செறிந்த தமிழ் நாட்டில்—செல்வங்கள் யாவையும் படைத்த தமிழ் நாட்டில் தமிழ் மணம் சதா வீசிக்கொண்டிருக்கும். பாஷை சுயாதீனம் பெற்று விளங்கும்; பற்பல பத்திரிகைகள் வெளிவந்து உலாவிக்கொண்டிருக்கும்; பாமர ஜனங்களில் பலர் படித்துப் பண்டிதர்களாக விளங்கியிருப்பார்கள். சுருங்கச் சொன்னால் தமிழகத்திலுள்ள ஒவ்வொருவரும் தமிழ்ப் பயின்று, தமிழர் உணர்வு பெற்று, தமிழர் நாகரீகம் அடைந்து, ஜாதிப் பூசல்களின்றி, தமிழர்கள் ஒன்றுபட்டு உண்மை வீரத் தமிழர்களாய் வாழ்ந்திருப்பார்கள். தமிழர் தம் தவப் பயனால் ஸ்ரீயுத சுப்ரமண்ய பாரதியார் நமதிடையில் தோன்றி,

---

பஞ்சகாலங்களில் அன்னதானஞ் செய்வோன், சந்துஷ்டியான காலங்களில் பொன் தானஞ் செய்வோன், போர் முனையில் வீரனாய் விளங்குவோன், ஆகிய இவர்கள் பூசிக்கத் தக்கவர்கள்.

“செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.”

என்பவை போன்ற தம் அரிய ஆவேசப் பாக்களால் தேசாபிமானம், பாஷாபிமானம் என்னும் இன்பத் தேனூற்று என்றும் வற்றாது கசிந்து ஊறிப் பொங்கித் ததும்புமாறு செய்துவிட்டுச் சமீபத்தில் காலஞ் சென்றது எவரும் அறிந்த விஷயமாகும். அவர் தம் வேலையால்—ஜீவ சக்தியால் தான் தமிழகத்தில் பாஷாபிமானம் தலை காட்டத் தொடங்கி யிருக்கிறது; தேசாபிமானம் ஓங்க ஆரம்பித்திருக்கிறது.

தனித் தமிழ் முயற்சி

பண்டைத் தமிழ்ப் பண்டிதர்கள் அனைவரும் வேறு பாஷை வார்த்தைகளை உபயோகிப்பதில் சற்றும் தயங்கவில்லை. அதனால் அவர்கள் நூல்களுக்கு அவமதிப்பு வந்துவிடவுமில்லை. திருக்குறள், கம்ப ராமாயணம், தேவாரம், திருவருட்பா முதலிய உயர் நூற்களிற் அன்னிய மொழிச் சொற்கள் கலந்திருக்கின்றன வென்பதை எவர் மறுக்க முடியும்? பல ஜன சமூகத்தாரோடு பழகுவதாலும், விஞ்ஞான ஆராய்ச்சிகளாலும், சென்ற ஐரோப்பியப் பெரும் போருக்குப் பின் ஏற்பட்ட அநேக மாறுதல்களாலும் புத்தம் புதிய வாக்குகள் தமிழ் மொழியில் வந்து சேர்ந்திருக்கின்றன, சேர்ந்து கொண்டிருக்கின்றன. இயற்கையாகவே வந்து சேரும் அயல் மொழிகளைத் தடுப்பது தமிழ் வளர்ச்சியைத் தடுப்பதாகும். பிற மொழிக் கலப்பால் பாஷை வளர்ச்சியுறு மென்பதற்கு உதாரணங்கள் பற்பல இருக்கின்றன. ஹிந்தி மொழியின் வளர்ச்சிக்கு அப் பாஷையில் பல மொழிப் பதங்கள் கலப்பே யாகும். அன்னிய மொழிக் கலப்பால் பாஷையின் இலக்கணம் கெட்டுவிடாது; ஆனால் அப் பாஷை வளர்ச்சியுறும்.

அன்னிய பாஷைக் கலப்பைச் சிறிதும் ஒழிக்காத காரணத்தால்தான் இங்கிலீஷ் பாஷை உலகத்திலுள்ள பாஷைகளெல்லாவற்றைக் காட்டிலும் மொழிப் பெருக்கும் இலக்கியப் பெருக்கும் கொண்டு தலைசிறந்து விளங்குகிறது. “எந்தக் கருத்தையும் இலகுவான மொழிகளில் இசைக்கத்தக்க சக்தி ஆங்கில பாஷைக்கிருப்பது

பெண்மணிகாள்! நீங்கள் பாதி பாரத சமூகம் என்பதை எண்ணுங்கள். உங்கள் உயர்வினால் பாதி பாரத நாடு உயரும். உங்கள் தாழ்வினால் பாதி பாரத நாடு தாழும்.

போன்று வேறெந்த பாஷைக்கும் இல்லை” என்று ஜெர்மன் பாஷா நிபுணர் கிரிம் என்பவர் கூறுகிறார். “ஆங்கிலப் பாஷையைப் போன்று வேறெந்த பாஷைகளிலும் அன்னிய மொழிக் கலப்பு அதிகமாய்க் காண்பட மாட்டாது” என மொழி நூல் வல்லுனர்—அறிஞர்—ஆசிரியர் மாக்ஸ் முல்லர் கூறுகிறார். உதயபானுவின் கொடியை உயர்த்தி மகிழும் ஜப்பானியர்கள் அயல் மொழிக் கலப்பைச் சந்தோஷத்துடன் ஏற்றுத் தங்கள் மொழியில் கணக்கற்ற இலக்கிய நூற்களையும், பல கலைஞான நூற்களையும் விஞ்ஞான நூற்களையும் எழுதி வெளியிட்டுக் குவித்திருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது. தமிழ்த் தந்தைக்கும் சமஸ்கிருத அன்னைக்கும் பிறந்த மொழியே மலையாள பாஷை. தமிழையும் சமஸ்கிருதத்தையும் மலையாள பாஷையிலிருந்து எடுத்துவிட்டால், அதில் ஒன்றுமே மிஞ்சி யிருக்காது. கன்னட தேசத்தில் எடுக்கப்படும் தங்கத்தையும், மலையாளத்தில் உண்டாகும் ஏலக்காயையும், ஆந்திர தேசத்தில் இயற்றப்படும் தெலுங்கப் பாட்டுக்களையும், பஞ்சாப்பில் விளையும் கோதுமையையும், இலங்கை உற்பவிக்கும் தேங்காயையும், காஷ்மீர் கொடுக்கும் சால்வையையும், நேபாளத்தில் கிடைக்கும் மூலிகைகளையும் கஸ்தூரியையும், பர்மா அனுப்பும் அரிசியையும் தமிழர் உபயோகிப்பது குற்றமா? மனிதன் சேர்ந்து வாழும் பிராணி. ஒரு சமூகம் மட்டும் மற்ற ஜன சமூகங்களுடன் பிரிந்து, தனித்து வாழ்தலென்பது இயலாத காரியம். சில தமிழ்ப் புலவர்கள் ஆங்கில மொழியை உபயோகிப்பதில் சந்தோஷம் கொள்வதுடன் அம்மொழி தமிழுடன் கலப்பதைப் பற்றிச் சற்றும் அவர்களுக்குக் கவலை கிடையாது. தமிழ்ப் புஸ்தகங்களுக்கு ஆங்கிலத்தில் முகவுரைகளும் முன்னுரைகளும் எழுதும் இத் தமிழறிஞர்களைப் பற்றி என்ன கூறுவது? தமிழில் புதிதாக வந்து சேரும் இதர பாஷைப் பதங்களையும் சேர வொட்டாது முயல்வதுடன், தினசரி வாழ்க்கையில் சாதாரணமாய்க் கலந்திருக்கும் சமஸ்கிருத வாக்குகள் எல்லாவற்றையும் நீக்கிவிடவும் வேலை செய்துகொண் டிருக்கிறார்கள் இப் பண்டிதர்கள். சில தருணங்களில் இது விபரீதமாய் முடிந்தாலும் முடியும். இந்த விநோத விபரீத வேலைகளால் என்ன பயன் தமிழ் அடையப் போகிறது!

தமிழ் மொழியுடன் மற்ற மொழிப் பதங்கள் சேருவதைத் தடுத்துவிடின், தமிழின் வளர்ச்சி குன்றிவிடும். தமிழ்த் தாயை ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் போட்டு அடைத்துக் கொடுமை

அம்மணிகாள்! நீங்களன்றோ முன்னே விஜயனையும், ஹரிச்சந்திரனையும், துருவனையும், புத்தனையும் ஈன்றீர்கள்! உங்கள் நிறையன்றோ இன்றும் திலகராகவும், காந்தியாகவும், உருவெடுத்தது!

செய்யாதீர்கள். அவளது உணவை நிர்ணயிக்காதீர்கள். அவளது ஆகாரத்தைப் பற்றி அவளே அதிகமாக அறிவாள். அவளது வழியில் தடைகள் போடாது அவளது போக்கிற்கு விதிகள் ஏற்படுத்திக் கட்டுப்படுத்தாது, அவளுடைய இயற்கை வழியில் விட்டு விட்டால், தானே வன்மையுடன் வளர்ந்து புகழுடன் விளங்குவாள். தமிழ் மாதாவின் இயற்கை வளர்ச்சியில் நாம் எல்லா வழிகளிலும் உதவி புரிந்து, வேண்டிய சேவை செய்வது நமது கடமையாகும்.

வேண்டுகோள்.

தமிழ் நாட்டில் தமிழ்த் தொண்டர்கள் பலர் தோன்றல் வேண்டும். உண்மைத் தொண்டர்கள் நூறு பேர் மட்டும் தீவிரமாக வேலை செய்தால் அற்ப காலத்தில் அபாரமாக வேலை செய்துவிடலாம். தமிழ் நாடெங்கும் ஒவ்வொரு ஊரிலும் பொதுநலச் சங்கம் ஏற்படுத்த வேண்டும். புஸ்தகங்கள் பலவற்றைச் சேகரித்து ஊர்கள் தோறும் புஸ்தகசாலைகள் ஸ்தாபிக்க வேண்டும். பத்திரிகைகளை—முக்கியமாக நாட்டிற்கு நன்மை செய்யும் பத்திரிகைகளை ஆதரித்து, ஒவ்வோர் இடங்களிலும் வாசகசாலைகள் திறக்க வேண்டும். ஒருவர் விலைக்கு வாங்கிப் படிக்கத்தக்க ஆஸ்தி உள்ளவராயிருப்பினும், அந்தஸ்து உள்ளவரா யிருப்பினும், பிறர் கஷ்டப்பட்டு வாங்கிய புஸ்தகங்களை இரவலாக வாங்கி வாசிக்கும் இத் தூர்ப் பழக்கம் நம்மில் வேரூன்றிக் கிடப்பதால், புஸ்த ஆசிரியர்களை, அவர்கள் எழுதும் நூற்களை வாங்கி ஆதரித்து, இன்னும் புதிய புதிய நூற்கள் எழுதும்படி உற்சாகிக்க வேண்டும். செல்வந்தர்கள் நாடெங்கும் தமிழ் கலாசாலைகள், பள்ளிக்கூடங்கள் திறக்க வேண்டும். தமிழில் அநேக பரீட்சைகள் ஏற்படுத்த வேண்டும். மாணவர்களுக்குத் தேசப் பற்றும், பாஷைப் பற்றும் பற்றி எரியும்படியான முறையில் ஆரம்ப ஆசிரியர்களும், மற்ற ஆசிரியர்களும் அதிக கவனம் செலுத்திப் போதிக்கத் தக்கவிதம் ஏற்பாடு செய்ய வேண்டும். பல நவீனப் பாடப் புஸ்தகங்கள் தமிழில் எழுதப்படல் வேண்டும். எழுதப் படிக்கத் தெரியாத வயதான வாலிபர்களுக்கும் மங்கையர்களுக்கும், வயது சென்றவர்களுக்கும் இலகுவிலும் விரைவிலும் சந்தோஷத்துடன் கல்வி புகட்டுவதற்கான நவ நவமான முறைகளைக் கையாள வேண்டியது நமது கடமையாகும். நமது நாட்டில் 100-க்கு 94 பேர் படிக்கத் தெரியாதிருக்கும் பொழுது, நமது சகோதர சகோதரிகளின் அறியாமையைப் போக்கி, அவர்களின் கல்வி அபிவிருத்திக்காக நாம் எவ்வளவோ அதிகமாய்ப் பாடுபட வேண்டி யிருக்கிறது! தமிழாசிரியர்களுக்கு உயர்ந்த சம்பளம் கொடுக்க வேண்டும். கிராமங்கள்தோறும் பிரசங்கங்கள் அடிக்கடி தமிழில் நடைபெறும்படி செய்யல் வேண்டும். தமிழறிந்த நண்பர்கள் எல்லாரும் தமிழிலேயே கடிதங்கள் எழுதும் பழக்கத்திற்கு வர வேண்டும்.

முன் ஒரு காலத்தில் நமது தமிழ் நாட்டுப் பெண், ஒரே மைந்தனை உடையாள், "என் மகன் போர்க் களத்திற்கு முதுகு காட்டி ஓடினால் அவன் உண்ட முலையை அறுத்திடுவேன்" என்றாள்.

அயல் மொழிகளிலிருந்து உலகத்தின் உயர் நூற்கள் அனைத்தும் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். நமது அருமை நூல்களையும் அன்னிய மொழிகளில் மொழிபெயர்க்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். புத்தம் புது நூல்களைத் தமிழில் எழுதுவோருக்குத் தக்கபடி ஆதரவு அளிக்க வேண்டும். பூத, பௌதிக, விஞ்ஞான சாஸ்திரங்களைப் பற்றியும், பிற நவீன விஷயங்களைப் பற்றியும் தமிழில் முதனூல்கள் எழுத வேண்டும். இறவாத புத்தம் புது நூல்கள் தமிழில் இயற்ற வேண்டும். "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய சந்தம் இவற்றினையுடைய காவியங்களைச் செய்து தருவோனே நமது தமிழ் பாஷைக்குப் புத்துயிர் தருவோனாகின்றான்" என்று கவி சுப்ரமண்ய பாரதியார் கூறுவதைக் கவனிக்க வேண்டும். எளிய மொழிகளில், எளிய நடையில், எளிய கருத்துக்களில் அமைந்த புஸ்தகங்களே தமிழ் நாட்டிற்கு இப்பொழுது ஏராளமாகத் தேவை. வறுமையால் வாடும் தமிழ் வித்வான்களுக்கு அவரவர் சக்திக்குத் தக்கவாறு உதவி செய்ய முன்வர வேண்டும். "அந்த நாள் வந்திலை அருங்கவிப் புலவோய்" என்று கூறித் தனது தலையையே ஓர் வித்வானுக்குக் கொடுக்க முன்வந்த தமிழை உயிரென மதித்த குமணச் சக்கிரவர்த்தி போன்ற அரசர்கள் இல்லாத இக் காலத்தில்—தமிழ் வித்துவான்களுக்குப் பொன்னையும் பொருள்களையும் கணக்கற்றுக் கொடுத்துத் தமிழ் வளர்க்கக் கூடிய அரசர்கள் இல்லாத இக் காலத்தில்—பாரி. சடையப்பர், சீதக் காதி போன்ற தமிழபிமான வள்ளல்கள் இல்லாத இக் காலத்தில்—தமிழைக் காப்பாற்றுவதற்கு முற்காலத்தைப் போன்ற ஸ்தாபனங்கள் இல்லாத இக் காலத்தில்—தாய்ப் பாஷையை சிலர் நாய்ப் பாஷையாகக் கருதும் இக் காலத்தில்—அரசாங்கத்தார் அதற்கு ஆதரவு அளியாதிருக்கும் இக் காலத்தில், நமது தாய்ப் பாஷையாம் தமிழபி விருத்திக்காக நாம் ஒவ்வொருவரும் நம்மாலான அளவு பாடுபட முன்வர வேண்டியது அவசியத்திலும் அவசியமாகவும், அவசரத்திலும் அவசரமாகவும் இருக்கிறது.

அயல் நாட்டு ஆடையை நீங்கள் உடுத்த உடுத்த உங்கள் சமூகத்தை நிர்வாணமாக நிறுத்துகிறீர்கள்.

தமிழர் கலைகளைத் தமிழில் தமிழர்களால் தமிழர்களுக்குப் போதிப்பதற்குத் தமிழ் சர்வ கலாசாலை யொன்று தமிழ் நாட்டில் ஸ்தாபிக்க வேண்டுமென்று தமிழ் நாடெங்கும் தீவிரமான முயற்சிகளும் கிளர்ச்சிகளும் செய்ய வேண்டும். இப்பொழுது தீவிரமாய் விருத்தியடைந்து கொண்டிருக்கும் மொழிகளை எவ்வாறு வளர்த்தார்களோ அம் முறைகளை நாம் பின்பற்றித் தமிழை அபிவிருத்தி செய்ய முற்படல் வேண்டும். தமிழ் மொழியும், தமிழ்க் கலைகளும், தமிழர் நாகரீகமும், பொதுஜன அறிவும் ஓங்கி வளரும்பொருட்டுத் தமிழர் இயக்கம் தோற்றுவித்து, ஒவ்வொரு கிராமத்திலும் தமிழ்ச் சங்கம் ஸ்தாபித்து, சகல வழிகளிலும் தீவிரமாக வேலை செய்வதற்கு எல்லாத் தமிழர்களும் உடனே முன்வரல் வேண்டும். நம்முள் பாஷாபிமானம் என்னும் மணிச்சுடர் உற்சாகமென்னும் தைலமின்மையால் மங்கி யொளிர்வதை ஊக்கம் என்னும் தூண்டுகோலால் தூண்டிவிட்டு அதை வளர்ப்போமாக! அப்பொழுதுதான் காலத்திற்கேற்றவாறு கவிப் பெருக்கும், கலைப் பெருக்கும், கலை ஞானப் பெருக்கும் கடல் வெள்ளம் போன்று தமிழரிடையே பெருகும்; தமிழ் உலகத்தோரால் பெரிதும் மதிக்கப் பெற்றுத் தமிழர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

"வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே
வான மளந்த தனைத்து மளந்திடும்
வண் மொழி வாழிய வே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே"

என்று நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் பொங்கித் ததும்பும் "தமிழர் மறந்தாலும் தமிழ் மறவா"ப் புலவரேறு பாரதியாரின் வாக்குகளால் தமிழ்த் தாயை வாழ்த்தி வணங்குவோம்.

என் பாஷை பொன் பாஷை
சொந்த பாஷை உகந்த பாஷை
பிறந்த பாஷை சிறந்த பாஷை
சுய பாஷை நய பாஷை.

நீங்கள் நூற்றுடுத்தும் கதரே உங்கள் மானங் காக்கும் புடவை! விலை பெற்ற அயல் நாட்டு மேக வர்ணங்கள் உங்கள் சமூகத்திற்கு மேக ரோகங்களைப் போன்றன.

வறுமைப் பேயே! உன் ஆற்றல் எங்கே?

திரு. ஆரியூர் வ. பதுமநாப பிள்ளை அவர்கள்.

மாலை வேளை. பலவகைப் பறவைகளும் உற்சாகத்துடன் பறந்து திரிந்துகொண் டிருந்தன. அகன்ற கோல நீல வானம் பரந்ததண்கடலைத் தழுவி நின்று பார்ப்போரைப் பரவசப்படுத்தும் அற்புதக் காட்சி! ஒன்றன் பின் ஒன்றாக மோதி எழுந்து விழுந்து வரும் கடல் அலைகளும், கடற்கரையில் வரிசையாகவும் ஒழுங்காகவும் வளர்ந்து நின்று காற்றில் அசைந்தாடும் சவுக்கு மரங்களும் 'ஓம்' 'ஓம்' என்று பிரணவ கோஷம் செய்வனபோல் தோன்றியது. உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே குளிர்விக்கும் இனிய கடற்காற்று வீசிக்கொண்டிருந்தது. அக் காற்றின்பத்தையும் கடற்கரைக் காட்சி இன்பத்தையும் அனுபவித்தவாறே கரையோரமாகவே நடந்து போய்க்கொண்டிருந்தேன். செல்வர்கள் வீட்டுச் சிறுவர்கள் தத்தம் வீடுகளில் எத்தகைய உற்சாகத்துடன் விளையாடிக் கொண்டிருப்பார்களோ, அதைக் காட்டிலும் பன்மடங்கு சிறந்த உற்சாகம் உடையவர்களாய், கொந்தளிக்கும் கடலில் சிறிதும் பயமின்றிக் குதித்தும் நீந்தியும் விளையாடிக்கொண்டிருந்த செம்படச் சிறுவர்களின் மேல் என் சிந்தை சென்றது. அச்சம் என்பதையே சிறிதும் அறியாமல் அப் பாலர்கள் விளையாடிக்கொண்டிருந்த காட்சி எனக்குப் பெரு வியப் பூட்டியது. அவ்விடத்தில் நின்றுகொண்டு தூரத்தில் தோன்றிய தோணிகள் சிலவற்றை நோக்கினேன். கடற் பிரயாணத்தில்—அதிலும் கட்டுமரத்தில் ஏறிச் செல்லுவதில் எவ்வளவோ ஆபத்துகள் நேரக்கூடும் என்பதை நன்கு உணர்ந்திருந்தும், தினந்தோறும் கருங்கடலில் நெடுந்தூரம் மீன்பிடிக்கச் செல்லும் செம்படவர்களது வீரம் எனக்குப் பெரு வியப் பூட்டியது. அத்தகைய வீரர்களது குழந்தைகளும் கவலையை அறியாது களிப்பில் குறையாது கடலில் விளையாடுவதில் வியப்பொன்று மில்லையல்லவா? சிறந்த நூலாசிரியர்களையும் புலவர்களையும் பற்றிநிற்கும்

சீதையை நாம் இன்று தொழுவது அவள் பூண்ட நகையாலோ அல்லது அவளுடைய கற்பினாலோ என்பதை யோசித்துப் பாருங்கள்.

வறுமைப் பேயினால், ஏழைச் செம்படவச் சிறுவர்களது இன்பத்தைக்கூடக் குறைக்கச்செய்ய முடியவில்லையே என்பதை நினைக்க நினைக்க எனக்குப் பெரு வியப்பாகவே இருந்தது. கடற்கரை மணற் பரப்பாகிய பளிங்குத் தூளிட்ட படுக்கையிலே சிறிது படுத்துப் பார்க்கவேண்டும் என்னும் ஆர்வம், மெல்ல என்னைக் கீழே படுக்கச் செய்தது; யானும் மெய் மறந்தேன்.

செம்பட்டைத் தலைமயிர்; கன்னங்கரேலென்ற மேனி; நெருப்பில் சிவக்கக் காய்ந்த இரும்புக் குண்டுகள் போன்று செக்கச் செவேலென ஜ்வலிக்கும் கண்கள்; வாயின் இருபுறமும் வளைந்து நிற்கும் கோரப் பற்கள்; உரோமங்கள் அடர்ந்த உடம்பு. அத்தகைய பயங்கரத் தோற்றத்துடன் கூடிய கொடிய பேய் ஒன்று என் முன் தோன்றி நின்றது. தன்னைக் கண்டவுடன் அஞ்சி நடுங்குபவனையே பேய்பிடித்து ஆட்டிவைக்கும் என்பதையும், தன்னிடம் சிறிதும் அஞ்சாத நெஞ்சினரை அப் பேயும் நெருங்காது அகன்றொழியும் என்பதையும் ஏற்கெனவே தெரிந்துகொண்டிருந்தேன். ஆதலால் அப் பேயைக் கண்டபின்னும், என் நெஞ்சில் அச்சம் சிறிதும் உண்டாகவில்லை. அப் பேய் தனது கனல் விழிகளில் சினத் தீ பறக்க என்னை விழித்து நோக்கியது. அந் நோக்கத்தினாலேயே நான் பயந்து நடுநடுங்கி உளறத் தொடங்கிவிடுவேன் என்று அது நினைத்துக்கொண்டுவிட்டதுபோலும். அதற்கு நேர்மாறாக அதைப் பார்த்து யான் கலகலவென்று பரிகாசமாகச் சிரிக்கவே, அதன் கோபம் பன்மடங்கு அதிகரிக்கலாயிற்று. ஒரே அறையில் என்னைக் கொன்றுவிடும் நோக்கத்துடன் அப் பேய் என்னை நெருங்கி வந்தது. "சீ! அற்பப் பேயே எட்டி நில்!" என்று கம்பீர த்வனியில் கூறினேன். அதைக் கேட்ட அப் பேய் திடுக்கிட்டு நின்றது. ஓர் மனிதன் தன்னை அவ்வாறு கேவலப்படுத்தவும் துணிவுகொண்டுவிடுவதோ என்று அது வியந்து நின்றதுபோலும்! பின், அப் பேய் என்னை நோக்கிப் பின்வருமாறு கூறியது:—

"ஏ! அற்ப மனிதா! என்னை யாரென்று நினைத்துக்கொண்டுவிட்டாய்? கேவலம் தீவினைப் பயனால் இழிந்த பேய்த் தன்மை எய்தி அலைந்து திரியும் சாதாரணப் பேய்களுள் என்னையும் ஒருவனாக எண்ணிக்கொண்டுவிட்டாயோ? அட பேதாய்! யான் அத்தகைய அற்பப் பேயன்று. கருணைக் கடலாகிய கடவுள் ஒருவராலன்றி வேறு எவராலும் என்னை ஓட்டிவிட முடியாது. யான் மட்டும் மனங்கொண்டுவிட்டால், குடை நிழலிலிருந்து குஞ்சரம் ஊர்ந்து

கற்பென்பது உங்கள் கடமையே. நீங்கள் குடும்பத்திற்கு விளக்கு! நாயகருக்குக் களிப்பு! வீரருக்கு அன்னை! நாட்டிற்கு பலம்! உலகிற்கு உயிர்! என்பதை உணருங்கள். நல்ல வீர மைந்தரே உங்கள் செல்வம்!

சென்ற கொற்றவரையும் நடைமெலிந்து ஊர்கள்தோறும் திரியச் செய்யினும் செய்வேன்; எழுநிலை மாடங்கள் கொண்டு கண்களைக் கவரும் பேரழகோடு விளங்கிய மாளிகைகள் இருந்த இடத்தை, கழுதை மேயும் பாழ்நிலங்களாக ஆக்கினும் ஆக்குவேன்; குயிலைப் பழிக்கும் குரலும், மயிலைப் பழிக்கும் சாயலும், கிளியைப் பழிக்கும் மொழியும், கணையைப் பழிக்கும் இணை விழிகளும், மதியைப் பழிக்கும் முகமும், மலரைப் பழிக்கும் செங் கைகளும் உடைய சிங்கார போகன மங்கையர் காதல் வலையில் சிக்கிக் களித்திருந்து, அறுசுவை உணவுண்டு செருக்குற்றிருந்த செல்வர்களை, பசியின் கொடுமை தாங்காமல் பிச்சை எடுக்கும்படி பண்ணினும் பண்ணுவேன்; கல்விச் செல்வமே உயர்ந்த செல்வமென்று கருதிக் கலைப் பயிற்சியிலேயே பொழுது கழித்த புலவர்களை, செல்வர்களது தயவை நாடி அலையக்கூடியவர்களாக மாற்றினும் மாற்றுவேன்; தெய்வ வழிபாட்டிலேயே சிந்தை செலுத்தி இன்புற்றிருக்க விரும்பி நின்ற பக்தர்களின் மன உறுதியைப் பலவகைத் துன்பங்களாலும் நாளடைவில் குன்றச்செய்து, அவர்களைத் தாழ்த்தினும் தாழ்த்துவேன்; 'இல்லை' என்று இரந்தோர்க்கு 'இல்லை' என்று சொல்ல மனங்கொள்ளாத நல்லோரை, கொடிய கவலைப் பெருங்கடலுள் ஆழ்த்தினும் ஆழ்த்துவேன்; நாட்டின் நலத்தின் பொருட்டுத் தன்னலத்தைத் துறந்து, தேச சேவையில் தலைப்படுவோரது நன்முயற்சிகளுக்குப் பலவகைப்பட்ட இடையூறுகளை விளைவித்து, அவர்களது மன உற்சாகத்தை ஒழிப்பினும் ஒழிப்பேன்; சுருங்கக் கூறுமிடத்துப் பற்பல நற்பணிகளுக்கும் தடையாக இருந்து மக்களை 'நடைப் பிணங்க'ளாக மாற்றி வாட்டக்கூடிய பேராற்றல் எனக்கே உண்டு. இறைவன் திருவருள் பெற விரும்பும் மெய்யன்பர்களுள் பற்பலர் என்னைப் பெரிதும் விரும்பி ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். இன்றும் என்னைத் தோழமைக் கொண்டுள்ள தொண்டர்கள் பலராவர். தெய்வத் தன்மை பொருந்திய கவிஞர்கள் அனைவரும் என்னோடு நெருங்கிப் பழகியவர்களே ஆவர். அக் கவிஞர்கள் என்னோடு நெருங்கிய தொடர்பு கொண்டிராவிட்டால், இன்று மெய்யன்பர்கள் போற்றிப் புகழும் சீரிய செந்தமிழ் நூல்கள் பற்பல ஏற்பட்டிருக்குமோ? இவ்வளவு ஆற்றல் உடைய நான் யார் தெரியுமா? என்னையே 'வறுமைப் பேய்' என்று கூறுகின்றனர். நான் மட்டும் மனங்கொண்டுவிட்டால், உனது அகங்காரத்தை எவ்வளவு விரைவில் அடக்கிவிடக் கூடுமென்பதை இனியேனும் உணர்ந்து

பெண் செல்வங்களே! எப்போதும் சாப்பாட்டுப் பேச்சு, நகைப் பேச்சு, பணப் பேச்சு, புடவைப் பேச்சு, அழகுப் பேச்சு! இந்த ஒரு சாண் வயிற்றிற்கு வேண்டிய உணவிற்காக உங்கள் விலையுயர்ந்த வாழ்நாட்களை ஏன் பலியிடுகிறீர்கள்?

கொள்ளுவாயா?'' என்னும் வினாவுடன் வறுமைப் பேய் தனது நீண்ட பிரசங்கத்தை முடித்துக்கொண்டு நின்றது.

அப் பிரசங்கத்தைக் கேட்ட யான், பின்வருமாறு அப் பேயை நோக்கிக் கூறலானேன்:—

''ஏ! வறுமைப் பேயே! இறைவனிடம் இடையறாத பேரன்பு செலுத்தி நிற்கும் உண்மை யன்பர்கள் உன்னை வெறுப்பதில்லை என்றும், புலமையிற் சிறந்த பேரறிவாளர்களான கவிஞர்கள், உன்னுடன் பழக நேர்ந்ததனாலேயே சீரிய நூல்களைச் செய்ததாகவும் எண்ணிக்கொண்டு நீ மிக்க செருக்குற்றிருக்கின்றா யல்லவா? ஏ! பேயே! என்னே நின் பேதைமை இருந்தவாறு! என்றென்றும்—எந் நிலைதன்னிலும்—எந் நோத்திலும் இறைவன் ஒருவனிடமே உண்மை யன்பு கொண்டு நிற்கும் மெய்த் தொண்டர்கள், பொருட் செல்வத்தால் எத்தகைய இன்பமேனும், வறுமைப் பிணியால் எத்தகைய துன்பமேனும் அனுபவிப்பதில்லை. ''உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்—கூம்பலும் இல்லது அறிவு'' என்பது பொய்யறு புலவர் பொன்மொழி. நல்குரவும் செல்வமும் நாரணன் அன்பர்கட்கு ஒன்றேதான். இறைவனது திருவருட் செல்வத்தையே எதிர்பார்த்து நிற்கும் அப் பேரன்பர்கள், கேவலம் பொருட் செல்வத்தைச் சிறிதும் பொருட்படுத்துவதில்லை. அதனாலேயே, வறுமையினால் அவர்கள் சிறிதளவும் வருந்துவதுமில்லை. அன்பிற் சிறந்த பெரியோர், தம்மை அடுத்து இடுக்கண் விளைக்கும் கொடியோரிடமும் சினங்கொள்ளாமல் அன்பே காட்டி நிற்பர், தமக்குத் தீமை செய்வோரை எதிர்த்து நில்லாது, அவர்களிடமும் அன்பே காட்டுவது சீரிய மெய்யன்பர் இயல்பு. அதனாலேயே அவ் வன்பர்கள் உன்னை ஆதரித்துப் போற்றுவதாக எண்ணிக்கொண்டு நீ செருக்கி இருக்கலாமோ? உனது சேஷ்டைகளை அவர்கள் சிறிதளவும் பொருட்படுத்துவதே யில்லை. அதுகொண்டே அவர்கள் உன்னை ஆதரித்து நடத்துவதாக எண்ணிக்கொண்டுவிட்டாயோ? அட! அருளற்ற பேயே! அருள் நிரம்பிய அகத்தினர்களாகிய மெய்யன்பர்கள், அருளின் பசையும் இல்லாத கொடிய பேயாகிய உன்னையும் மதிப்பார்களோ?

தெய்வத் தன்மை வாய்ந்த அருட் புலவர்கள், உன்னோடு தொடர்பு கொள்ள நேர்ந்ததனாலேயே சீரிய நூல்களைச் செய்து உலகுக்கு உதவினர் என்று பெருமை பாராட்டிக்கொண்டாய்!

பெண் மாணிக்கங்களே! நீங்கள் வீரரின் ஆவேச ஊற்றன்றோ? உங்களுக்கு அணி கற்பன்றோ? நீங்களே உலகின் புகழுக்கும் அழகிற்கும் அணியன்றோ?

பேதைப் பேயே! ''நாவின் கிழத்தி உறைதலால் சேராளே—பூவின் கிழத்தி புலந்து'' என்னும் உலக வழக்குரை உனக்குத் தெரியாதோ? மாமியும் மருகியும் ஒரே இடத்தில் கருத்து ஒருமித்து வாழ்வது அரிதென்னும் உலகானுபவ உண்மையை நீ உணராதது என்னவோ? கேவலம் பொருட் செல்வத்தில் விருப்பங்கொண்டு புரவலரைப் புகழ்ந்து பாட மனங்கொண்ட புல்வர்களே உன்னால் வருந்தியிருக்கின்றார்கள் என்பதையும், இறைவனது திருவருட் செல்வத்திலேயே விருப்பங்கொண்டு நின்ற புனிதக் கவிஞர்களது மன உறுதியையாவது ஹிருதய பக்தியையாவது உன்னால் சிறிதளவும் அசைக்கக்கூட முடியவில்லை என்பதையும் நீ மறந்துவிடவேண்டாம்! மேலும் பொருட் செல்வத்தை விரும்பிப் பாடப்பெற்ற பாடல்கள் பலவும் விரைவில் மறைந்துவிட்டிருக்க, இறைவனது திருவருட் செல்வத்தையே விரும்பிப் பாடப்பெற்ற பாடல்கள் பலவும் இன்றளவும் எங்கணும் பரவிச் சிறந்திருப்பதன் நுட்பம் என்னவென்பதை நீ சிறிதளவேனும் சிந்தித்துப் பார்த்தாயோ? திருவருட் செல்வர்களான சீரிய செந்தமிழ்க் கவிஞர்களது அன்பு நிரம்பிய அருட்பாடல்களுக்கும், அடுத்தோரிடம் 'அன்பு' என்பதே சிறிதும் கொள்ளாத கொடிய பேயாகிய உனக்கும் எத்தகைய தொடர்புமில்லை என்பதை இனியேனும் உணர்ந்துகொள்ளுவாயாக. உனது கொடுமைகளுக்கு அஞ்சி அவ் வருட்புலவர்கள் பனுவல்கள் செய்யவில்லை என்பதையும்; அவர்களைக்கொண்டு அப் பனுவல்களை ஆண்டவனே பாட்டுவித்தருளினன் என்பதையும் உனது இருதயத்தில் இருத்திக்கொள்ளுவாயாக'' என்றேன் நான்.

''இறந்த காலத்தில் இருந்தவர்களைக் குறித்து இப்பொழுது வாதிப்பானேன்? இக் காலத்திலே, எனது ஆற்றலால் எத்தனை புலவர்களை—எத்தனை ஆசிரியர்களை—எத்தனை சதி-பதிகளை—எத்தனை அன்பர்களைத் துன்பக் கடலில் ஆழ்த்தி வாட்டிவருகிறேன் தெரியுமா? எத்தனை அறிஞர்களது உற்சாகத்தை ஒழித்து—மன உறுதியைக் குலைத்து, யான் விரும்பியவாறெல்லாம் ஆட்டுவித்துவருகிறேன் தெரியுமா? கண்ணாரக் கண்டாலன்றி, நீ என் ஆற்றல் எத்தகையது என்பதை உணர்ந்துகொள்ள மாட்டாயாதலின், என்னோடு யான் செல்லும் இடங்களுக்கு வருவாயாக'' என்று கூறி என்னை அழைத்தது வறுமைப் பேய்.

அதைக் கேட்ட யான் கலகல என்று சிரித்து, ''பேதைப் பேயே! நீ காட்டும் இடங்களையே நான் பார்க்கவேண்டும் என்ற நிபந்தனை ஏற்படுத்திக்கொண்டுவிட்டால், நீயே உனது கட்சியை

நமது ஆயுள் இருக்கும் போதே நமது கண்ணெதிரேயே அறஞ் செய்வது நிச்சயமான பலனுடையதாம்.

எளிதில் உறுதிப்படுத்திவிடுவாயல்லவா? எங்கெங்கெல்லாம் உனது ஆற்றல் பலிக்கவில்லையோ—எங்கெங்கெல்லாம் உனது கொடிய சூழ்ச்சிகள் யாவும் பயன்படா தொழிகின்றனவோ, அங்கங்கெல்லாம் என்னை அழைத்துக்கொண்டு செல்ல உன் மனம் ஒருப்படுமோ? மனோபலமும் ஆத்ம பரிசுத்தமும் இல்லாத சிற்சில கோழைகள் உன்னால் தைரியம் இழந்து விசனம் மிகுந்து வாடுவதைக் காட்டிவிட்டு, உனது ஆற்றலை நீயே மெச்சிக்கொண்டு விடலாம் என்பதே உன் எண்ணம் போலும்! ஏ! வறுமைப் பேயே! உனது ஆற்றல் எங்கெங்கெல்லாம் பலிக்காமற் போய்விடுகின்றது என்பதை நானே உனக்குக் காட்டுகின்றேன் பார்!” என்று கூறி, நினைத்த இடத்திற்குச் செல்லக்கூடிய சிறகுகளை எனக்கும் வறுமைப் பேய்க்கும் தோற்றுவித்தருளுமாறும், நாங்கள் எங்கு செல்லினும் எங்களது உருவங்கள் மற்றவர்களது கண்களுக்குப் புலனாகாதிருக்குமாறு அருள்புரியுமாறும் கருடாழ்வாரைப் பிரார்த்தித்து நின்றேன். அடடா! என்ன அற்புதம்! என்ன அதிசயம்!! அவ்வாறே எங்கள் இருவருக்கும் அழகிய சிறகுகள் தோன்றின! உடனே வறுமைப் பேயை நோக்கிப் ‘பற’ என்றேன். பேயும் யானும் வானம்பாடிகளைப்போல் வான நெடுவீதியிலே மட்டற்ற மகிழ்ச்சியுடன் கூடிய மனத்தினர்களாய்ப் பறந்து சென்றோம். அடடா! என்ன வேகம்! என்ன வேகம்!! மணிக்கு நூறு மைல் தூரம்!!!

வறுமைப் பேயே! என்னுடன் வாதம் செய்ததன் பலனைப் பார்த்தாயா? அலைந்து திரியும் பேய்த்தன்மை நீங்கி, பறந்து செல்லும் கந்தர்வத் தன்மையைப் பெற்றுவிட்டாய்போலத் தோன்றுகிறதே! கீழே பார்! ஆ! இதோ காவிரியும் கொள்ளிடமும்! இரண்டாறுகளுக்கும் இடையில் கொண்டல் தவழ்வதும், வண்டினம் முரல்வதும், மயிலினம் ஆடுவதும், குயிலினம் பாடுவதும், அண்டர்கோன் உறைவதுமாகிய மனோகரமான குளிர்ந்த சோலையைப் பார்! எத்தனை கோபுரங்கள்! எவ்வளவு உயர்ந்த மதில்கள்!! வார்புற்ற கதிர்ச் செந்நெல் தாள் சாய்த்துத் தலை வணக்கும் காட்சியையும், வயல்களில் சேல்கள் துள்ளிக் குதித்து விளையாடும் காட்சியையும் பார்! நோக்கும் பக்கம் எல்லாம் இன்பக் காட்சிகள்! இதுவே திரு அரங்கம் பெரிய கோயில்! கீழே இறங்கி, திரு அரங்கேசரை சேவித்துவிட்டுச் செல்வோம் வா! என்று கூறியவாறே கீழே இறங்கினேன்; பேயும் இறங்கியது.

தூய்மை, நேர்மை, உண்மை, நன்மை, தவம், உறுதி, ஒப்புரவு, அமைதி, பொறுமை, எளிமை, சால்பு, அறிவாண்மை முதலியவை அந்தண்மையாகும். இவ் வறங்களைப் பயின்று ஒழுக்கமுடன் அருட்பணி புரிதலே அந்தணர் கடன்; இத் தன்மை பெற்ற எவ்வுயிரும் அத் தன்மையடையலாம்.

“ஆம்! இதுவே பூலோக வைகுண்டம்! இதோ திருமாமணி மண்டபம்! இதோ எழுந்தருளியிருக்கிறார் செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்! அதோ அரையர்கள் செவிக்கினிய செஞ்சொற்களாம் ஆழ்வார் அருட்பாக்களை உண்மை யன்பர்களது உள்ளம் உருகும்வண்ணம் பண்ணில் அமைத்துப் பாடி நிற்கின்றனர். பெருமாளைச் சுற்றி நிற்பவர்களைச் சற்று கவனிப்போம். எத்தனை கைங்கர்ய பார்கள்! எத்தனை ‘கனவான்கள்’! எத்தனை ஆடம்பர வேடதாரிகள்! எத்தனை கிலுசு மனிதர்கள்! அதோ! அந்தத் தூணின் மறைவில் நின்றுகொண்டு, இரு விழிகளிலும் நீர் பெருகி வழிய பெருமாளைத் துதித்து நிற்கும் அவன் யார்? அவன் அழுது நிற்பதன் காரணம் என்ன? அவனது மன நிலையை யான் அறிவது எங்ஙனம்?” என்று கூறி நின்ற யான், திருவரங்கச் செல்வனாரது திருவடிகளிலே சிந்தையைச் செலுத்தி, அகங் கனிந்து போற்றி நின்று, என் எதிர்ப்பட்டோரது மன நிலையையும் அவர்களது வாழ்க்கைச் சம்பவங்களையும் ஒரே ஒருநாள் மட்டும் எனக்கு உணர்த்தியருளுமாறு நம் பெருமானைப் பிரார்த்தித்துக் கொண்டேன். என்னே! திருவருள் இருந்தவாறு! யான் பிரார்த்தித்தவாறே தூண் ஓரத்தில் அழுது நின்றவனது மன நிலையும் அவனது வாழ்க்கைச் சம்பவங்களும் என் மனத்தில் தெளிவாகத் தெரிந்தன. ஆச்சரியம் மேலிட்டு வறுமைப் பேயை நோக்கி, “அதோ தூணருகில் நீர் பெருகி வழியும் விழிகளுடன் நிற்பவனைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?” என வினவினேன்.

“குடும்பத் தொல்லைகள் பொறுத்தற் கரியனவாகப் பெருகியிருக்கலாம்; உறவினரின் உதவி எதுவும் அவனுக்குக் கிடைக்காதிருக்கலாம்; சாப்பாட்டுக்கும் வழியின்றித் திண்டாடி நிற்கும் நிலையும் அவனுக்கு நேர்ந்திருக்கலாம். அவற்றையெல்லாம் நினைத்துக்கொண்டு, அவன் பெருமாள் முன்பு அழுது நிற்கிறான்போலும்! இக் காட்சியொன்றே எனது ஆற்றலை எத்தகைத்து என்பதை உணர்த்துமன்றோ!” என்றது வறுமைப் பேய்.

அது கேட்டுக் கலகல என்று சிரித்த யான், “அட குருட்டுப் பேயே! அவன் முகத்தை நன்கு கவனித்துப் பார்! அம் முகத்தில் துக்கக் குறிகளுள் ஏதேனும் காணப்படுகின்றனவோ? சிரிக்கும் முகத்தினின்றும் பெருகி வழியும் கண்ணீர், இன்பக் கண்ணீரோ? துன்பக் கண்ணீரோ?” என வினவினேன்.

பிறர் நலத்தின் பொருட்டு, பொறுமையுடன் இடர் தாங்கி அருட்பணி செய்வோர் தனக்கென வாழாப் பிறர்க் குரியாளர்.

அவ் வினாவுக்கு விடை பகர இயலாத வறுமைப் பேய் திருதிருவென விழித்து நின்றது.

"பேதைப் பேயே! அவன் தனக்கு நேரும் துன்பங்களைத் தனது மன உறுதியைச் சோதிக்கத் திருவுள்ளங் கொண்டு இறைவன் தோற்றுவிக்கும் சோதனைகளே என்று கொண்டு, சிறிதும் வருந்தாது ஏற்றுக்கொள்பவன் ஆவன். தனது தாயாகவும் தந்தையாகவும், குருவாகவும், தலைவனாகவும் திருவரங்கேசர் ஒருவரையே உள்ளத்துள் கொண்டிருப்பவனாதலின், உறவினரிடம் பற்றேனும் நம்பிக்கையேனும் கொண்டு ஏங்கி நிற்பவன் அல்லன். பொருட் செல்வப் பித்து அவனுக்குச் சிறிதும் இல்லை. வறுமைப் பேயாகிய உனது கொடுமைகளைக் கண்டு எள்ளி நகையாடும் இயல்பினன் அவன். அறிந்தோ அறியாமலோ தன் பக்கலில் நேர்ந்திருக்கக் கூடிய பல வகைப்பட்ட அபசாரங்களையும் கருதாது, 'அஞ்சேல்!' என்று அருள் செய்து நிற்பது போன்று தோன்றும் அழகிய மணவாளப் பெருமானது அபயத் திருக்கைப் பேழைகைக் கண்டும், அப் பெருமானது கைமாறற்ற தனிப் பெருங் கருணைப் பெருக்கைச் சிந்தித்துமே அவன் அவ்வாறு மனம் உருகக் கண்களில் நீர் பெருக அழுது நிற்கிறான். வறுமைப் பேயே! உனது ஆற்றல் அவனிடம் சிறிதும் பலிக்கவில்லை என்பதைக் கண்டுகொண்டாயா?" என்றேன் யான்; பேய்க்கு வாய் திறக்க வழி ஏது? நாணத்தால் தலை குனிந்தது.

பின்னர், பெருமானிடம் விடைபெற்று ஒரு பத்திரிகாசிரியர் வீட்டை அடைந்தோம். அவருக்கு சுமார் ஐம்பது வயது இருக்கலாம். நான்கு குழந்தைகள். பழைய நாற்காலி ஒன்றிலே அவ் வாசிரியர் வீற்றிருந்தார். அவரது மனைவியோ ஜுரம் கண்டு படுத்துக்கொண்டிருந்தாள். கைக்குழந்தை பக்கத்திலிருந்து தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தது. 'நாயனா! துட்டு கொடு' என்று அவ் வாசிரியரது வலக் கையை ஒரு சிறுவனும், இடக் கையை ஒரு சிறுமியும் பற்றி இழுத்துக்கொண்டு நின்றனர். பிரசித்தி பெற்றதொரு மாதப் பத்திரிகையின் ஆசிரியர் பதவியிலுள்ள அவர், ஏனைய ஆசிரியர்களைப் போலன்றிப் பத்திரிகையின் முக்காற் பாகத்திற்கும் தக்க ஆராய்ச்சியோடு கூடிய சீரிய விஷயங்களைத் தமது சொந்த மூளை உழைப்பைக்கொண்டு எழுதி வருபவராக இருந்துங் கூட, அவருக்கு மாதச் சம்பளமாகக் கிடைப்பது முப்பது ரூபாயே என்பதைத் தெரிந்துகொண்ட என் மனம் அவரிடம் பெரிதும் இரக்கம் கொண்டது. அச் சொற்பத் தொகைக்குள் வீட்டு வரியையுங் கட்டிக் குடும்பச் செலவையும் அடக்கி, விருந்தினர்க்குச் செய்ய

மனிதன் தனக்காக வாழ வரவில்லை.

நேரும் செலவை அவ்வேழை ஆசிரியர் அடக்கிக்கொண்டு விடவேண்டும். அத்தகைய நிலையிலுள்ள அவர், மனைவியின் நிலை கண்டு அழுவாரா? மக்களின் முகம் நோக்கி அழுவாரா? தனது தரித்திரத்தை நினைத்து அழுவாரா? இறைவன் விளைக்கும் சோதனைகளை எண்ணி அழுவாரா? பாவம்! ஏழை ஆசிரியர் எதை நினைத்து அழுவார்?

வறுமைப் பேயே! நீ இவ்வெளிய ஆசிரியரை இவ்வளவு துன்புறுத்தினும்—இவருக்கு அதிருஷ்ட தேவியின் அநுக்ரகம் ஏற்படாவாறு தடுத்து நின்றாலும் இவர் அகம் கலங்கி அழுகிறாரா? அழுவதற்குப் பதிலாக சுவரில் மாட்டியிருக்கும் கண்ணபிரான் திருவுருவப் படத்தைப் பார்த்து இவர் சிரிப்பதைப் பார்! இவர் கண்ணனை நோக்கி என்னென்று முறையிடுகின்றார் என்பதைக் கவனி!

"கண்ணா! இத்தகைய சோதனைகளால், யான் உன்னிடம் கொண்டிருக்கும் பக்தியில் தளர்வடைவேன் என்று நினைத்துக் கொண்டுவிட்டாயோ? உன் திருவருளைத் துணை கொண்ட பலத்தால், வறுமைப் பேயின் விளையாடல்களைக் கண்டு, உற்சாகம் குன்றிவிடும் கோழைமையை என் நெஞ்சினின்றும் எளிதில் ஓட்டிவிடுவேன் அன்றோ? கேவலம், வறுமைப் பேயோ என் மன உறுதியை மாற்றக்கூடும்?"

'மிடி' என்னும் கொடிய பேயே! இவ் வாசிரியரிடத்தில் உனது ஆற்றல் என்னாயிற்று பார்த்தனையோ? இத்தகைய ஆசிரியர்கள், தற்காலத் தமிழ் நாட்டில் பற்பலர் உளர் என்பதை நீ மறந்துவிட வேண்டாம்.

இனி, தென்மதுரையம்பதிக்குச் செல்வோம் வா! என்று கூறி, யானும் வறுமைப் பேயும் செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் திலகமனைய தென்மதுரைக்குப் பறந்து சென்றோம். அப்பால், மேலப் பாண்டி யாகும் பெரியகுளம் தாலுகாவிற்குப் பாய்ந்தோம். பிறகு ஒரு கிராமத்தில் ஒரு சிறிய வீட்டை அடைந்தோம். அவ் வீட்டின் அறை ஒன்றிலே ஒரு ஆசிரியர் நாற்காலியில் வீற்றிருந்தார். என்னருகில் நின்றுகொண்டிருந்த வறுமைப் பேய்க்கு, அவ் வாசிரியரது நிலைமையைப் பின்வருமாறு எடுத்துக் கூறத் தொடங்கினேன்:—

"வையத்துப் பொய்யின்பப் பொருள்களிலே மையல் மிகுந்து அறிவு மயங்கிக் கிடப்போர்க்கு, மெய்யறிவூட்டி உய்விக்கக்கூடிய

அப்பர், இயேசுநாதர், புத்தர், காந்தி முதலியோர் கடவுட் பணியும் காசினிப் பணியும் செய்தனர். இவரே பெரு வாழ்வு வாழ்ந்தவர்.

உண்மைப் பொருள்களை எல்லோர் தமக்கும் இன்பம் பயக்கக்கூடிய எளிய முறையில் எடுத்துக் காட்டும் உத்தம பத்திரிகைத் தொண்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியருக்கு, அத்ருஷ்ட தேவியின் அநுக்கிரகம் இல்லாதொழிந்தது அத் தேவிக்கே குறைவாகுமேயன்றி, அவ் வாசிரியருக்கு எவ்விதத்திலும் குறைவாகாது. ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்றே பத்திரிகையை வெளியிட்டு விடவேண்டும் என்பது அவரது பேரார்வமே; ஆயினும், பாழும் பணக் கஷ்டம் அவரது ஆர்வத்தைத் தடுத்து நிற்கின்றது. பத்திரிகையின் சந்தாதாரர்களில் பற்பலர், சந்தாவின்றிக் கிடைக்கும்வரையில் பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு 'வி.பி.' கிடைப்பின் விரைவில் திருப்பிவிடும் மகானுபாவர்களாக இருக்கின்றனர். பத்திரிகைத் தொழிலில் இலாபம் என்பதே இன்றி, ஒழுங்காக நடத்துவதற்கும் முடியாதபடி பலவகைப்பட்ட கஷ்டங்களும் நேர்ந்துங்கூட, பத்திரிகைப் பைத்தியம் அவரது நெஞ்சினின்றும நீங்குவதாகத் தோன்றவில்லை."

யான் கூறியவற்றைக் கேட்ட வறுமைப் பேய் அவ் வாசிரியரைப் பார்த்துப் பரிகாசமாகச் சிரித்தது. அது கண்ட யான் "ஏ! வறுமைப் பேயே! இவ் வாசிரியரது பத்திரிகைப் பித்தை எண்ணிச் சிரிக்கிறாயோ? உனது சேட்டைகளால் இவரது நன்முயற்சிகள் தடைபட்டு நிற்பதை எண்ணிச் சிரிக்கிறாயோ? ஏ! பேதைப் பேயே! எதிரிலுள்ள திருமாலின் திருவுருவப் படத்தைப் பார்த்து, இவ் வாசிரியர் செய்யும் முறையீட்டைக் கேள்" என்றேன்.

"மாயவனே! உலகத்தில் பணமில்லாதோரைப் புண்ணியம் இல்லாதவர்களென்றும், திருமகளின் திருவருள் இல்லாதவர்களென்றும் பாமரர்கள் பலர் இழிவாகப் பேசுகின்றனர். "வேரி மாறாத பூமேல் இருப்பாள் வினை தீர்க்குமே" என்று ஆழ்வார் அருளியவாறு வினைத் தொடர்பை அறுத்து, அடியேனது ஆன்மாவை உய்வித்தருளவே திருமகளது திருவருளை யான் வேண்டிநிற்கின்றேனேயல்லாது, கேவலம் நிலைபேறில்லாத அற்பப் பொருட் செல்வத்தில் இச்சைகொண்டு யான் திருமகளைப் பிரார்த்திக்கவில்லை. வீர சுவர்க்கத்தை வேண்டி நிற்போர் மண்ணுலக மன்னர் வாழ்வை சற்றும் மதியாததேபோல், ஆன்ம உய்வில் சிந்தை செலுத்தி நிற்கும் அடியேற்குப் பணப் பைத்தியம் சிறிதளவும் இல்லை. இறைவனே! ஏதோ என்னாலான சிறு பணிகளைச் செய்ய விரும்பி நின்றால், பாழும் வறுமைப் பேய் அவற்றிற்குப் பெருந் தடையாக நிற்கின்றது. ஆயினும், அதனாலேயே யான் கொண்ட உற்சாகம் தளர்ந்துவிடப் போவதில்லை. யான் மேற்கொண்ட தொண்டே

அன்பர்காள்! நாடு உங்கள் அருட் பணியைக் கூவி யழைக்கிறது. பாரத தேவி, நமது தர்ம தேவதை, உங்களை அழைக்கிறாள்.

எனக்குப் போதிய ஊக்கம் ஊட்டி நிற்கின்றது. ஜன சமூக சேவையே என் நெஞ்சுக்கு இன்பமாக இருந்து வருகின்றது. அத்தகைய இன்பம் ஒன்றினாலேயே ஏனைய எத்தகைய துன்பங்களையும் சோதனைகளையும் மிக்க பொறுமையுடன் சகித்து நடந்துகொள்ளக்கூடிய சக்தியைத் தந்திருக்கின்றாய். ஆதலின், அற்ப வறுமைப் பேய் என்னை என்ன செய்துவிட முடியும்?" அம் முறையீட்டைக் கேட்ட வறுமைப் பேய், எனக்கு முன்பே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுவிட்டது.

பின்னர், அவ் வறுமைப் பேயும் யானும் சென்னை மாநகரத்திற்குப் பறந்து சென்றோம். ஆயிரக் கணக்கான சந்தாதாரர்களைப் பெற்று—எல்லா வகைப்பட்ட வசதிகளும் உடையதொரு பிரபல பத்திரிகாலயத்தில் இறங்கினோம். அக் காரியாலயத்தில் ஆசிரிய ஆசனத்தில் அமர்ந்திருந்தவர், மாதம் நூறு ரூபாய் சம்பளம் வாங்குபவர். அப் பத்திரிகாலயம் ஒரு தினசரிப் பத்திரிகாலயம் அன்று; மாதம் இருமுறை வெளிவரும் பத்திரிகையின் காரியாலயமே. அவர் எதிரில்—அவரோடு சம்பாஷிக்கும் சந்தர்ப்பம் எப்பொழுது வாய்க்குமோ என்று எதிர்பார்த்துக் காத்துக்கொண்டு, எளிய தோற்றமுடைய எழுத்தாளர் ஒருவர் அமர்ந்துகொண்டிருந்தார். மனித சக்திக்கு மீறிய பொறுமையுடன் காரியாலயச் சுவரைப் பார்த்துக்கொண்டே மணிக் கணக்காகக் காத்துக்கொண்டிருந்துங் கூட, ஆசிரியர் திருக்கண் நோக்கம் அவர்மேல் விழவில்லை. அக் காட்சியைக் கண்ட என்னருகில் நின்ற வறுமைப் பேய் என்னை நோக்கி, "தன்னைச் சிறிதும் மதியாதவர் என்று தெரிந்துங்கூட இச் செருக்கு மிக்க ஆசிரியரோடு உரையாட விரும்பிநிற்கும் இவ் வெளிய கட்டுரையாளரிடமாவது எனது ஆற்றல் பலித்துவிட்டதோ இல்லையோ?" என வினவியது.

அதைக் கேட்ட யான் கலகலவென்று சிரித்து, "பேதைப் பேயே! உனது கொடுமையைச் சகிக்கவொண்ணாமல், இச் செருக்கு மிக்க ஆசிரியருடன் நயந்து உரையாடி, இவரது தயவைச் சம்பாதிக்கும் நோக்கத்துடனேயே இக் கட்டுரையாளன் இங்கு உட்கார்ந்துகொண்டிருப்பதாக நினைத்துக்கொண்டு விட்டாயோ? இவனது வெளித் தோற்றம் எளியதே ஆயினும், இறைவனது கருணை ஒன்றையேயன்றி ஏனைய எவர் தயவையும் இவன் எதிர்பாப்பவனன்று. கேவலம், பணத்திற்காகவோ கீர்த்திக்காகவோ இவன் கட்டுரை வரைபவன் அல்லன். ஆனால், இவனுக்குக் கட்டுரைப் பிரசுரப் பைத்தியம் எப்படிப் பிடித்தது என்றாலோ, அது ஒரு

பாரதத்தின் அருமை பெருமைகளை தேன் மொழிகளால் எடுத்தாட்டுவது "பாரதி" என்னும் இப் பத்திரிகை.

தேவ ரகசியம்; அதை விவரித்துரைக்கக்கூடிய சக்தி எனக்கில்லை. இக் கட்டுரையாளன், வருஷத்தில் இரண்டு மூன்று முறைகளிலேயே சென்னைக்கு வருபவன் என்பதையும், இவன் வீண் வம்பளப்புப் பேச்சை முற்றிலும் வெறுப்பவன் என்பதையும், தன்னுடன் சிற்சில நிமிஷங்களே உரையாட ஆர்வம் மிகுந்து நிற்பவன் என்பதையும் இவ் வாசிரியர் நன்கு உணர்ந்திருந்தும் ஒரு கட்டுரையாளனுக்கு உரிய கௌரவத்தை இவ் வெளியவனுக்கும் தருவதோ என்று இவ் வாசிரியர் கருதுகிறார்போலும்! இதற்காக—இவ் வவமதிப்புக்காக இக் கட்டுரையாளன் சிறிதும் வருந்தவில்லை. அதற்கு மாறாகத் தற்கால நவீன நாகரீகத்தின் தன்மையை எண்ணிப் புன்னகை கொள்ளுகின்றான். ஆதலின், வறுமைப் பேயே! உனது ஆற்றல் இக் கட்டுரையாளனிடம் பலித்துவிட்டதென்று நினைத்துக் கொண்டு, வீணே செருக்குற்றுவிடாதே!" என்றேன்.

பின்னர் இருவரும் எளிய சிறு குடிசை ஒன்றுக்குச் சென்றோம். ஏழைத் தொழிலாளன் ஒருவன் தனது மனத்திற்கினிய மனைவியோடும் மூன்று குழந்தைகளோடும் அதில் வசித்துக்கொண்டிருந்தான். பலவிடங்களில் அலைந்து திரிந்தும் வேலை எதுவும் கிடைக்காமையால், பெரிதும் சோர்வடைந்தவனாய் அப்பொழுதுதான் குடிசைக்குத் திரும்பி வந்து படுத்தான். பகல் முழுவதும் பெய்த இடைவிடாப் பெருமழையினால், அவனுக்கு எவ் வேலையும் கிடைக்கவில்லை. அதன் பயனாக தான் பட்டினி கிடக்க நேர்ந்ததற்கும் அவன் வருந்தவில்லை; குழந்தைகளை நினைத்தே அவனது நெஞ்சம் குமுறியது. இரண்டு நாட்களுக்கு முன் மிகுத்து வைத்திருந்த கேழ்வரகைக் கூழ் காய்ச்சி, தனது நாயகன் எதிரில் கொண்டு வந்து வைத்து, 'பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிவுடையவளாய்' அவனை நோக்கினள் அவனது மனைவி. இருவர் கண்களும் கலந்தன. வறுமைப் பேய் அவ் வெளியவன் மனத்தில் தோற்றுவித்த சோர்வு, எங்கேயோ பறந்துவிட்டது. 'இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை' எனும் உண்மையை உணர்ந்து ஆனந்தத்தில் ஆழ்ந்தான். மறுகணத்தில் என் அருகில் நின்றிருந்த வறுமைப் பேய், மாயமாக மறைந்துவிட்டது. திடீரென விழித்துக்கொண்டேன். என் கைக்கடியாரத்தில் இரவு மணி ஒன்பதாயிருந்தது. கண்டவை அனைத்தும் கனவென உணர்ந்தேன். "ஆன்ம ஒளிக்கடல் மூழ்கித் திளைப்பவர்க்கு அச்சமும் உண்டோடா?—மனமே!—தேன் மடை இங்கு திறந்தது கண்டு தேக்கித் திரிவமடா!" என்ற பாரதியாரின் வீரப் பாட்டைப் பாடியவாறே வீட்டை நாடி நடந்தேன்.

---

33 கோடி பாரத மக்களையும் கடவுளின் 33 கோடி அம்சங்களாக நினைத்து வழிபடுங்கள்.

எனது குருநாதரின் கடிதம்.

(மனோகரனார்.)

VIII

இந்தியர்களே!

உலகை ஏறிட்டுப் பாருங்கள். அயல் நாடுகளனைத்துஞ் சென்றுகொண்டிருக்கும் வேகத்தைக் கவனியுங்கள். இன்னும் உங்கள் பண்டைப் பெருமையைப் பற்றிப் பன்னிப் பன்னிப் பேசிக்கொண்டு வாளா யிருக்கப் போகிறீர்களா? இன்று அயல் நாட்டான் ஆகாயத்திற் பறக்கிறானென்றால், எங்கள் முன்னோர்கள் மயிற் பொறியிலும், புஷ்பக விமானத்திலும் வானத்திற் சென்றனரென்று வாய்ப் பறை யறைகிறீர்கள். இதுகாலை மேல் நாட்டான் தந்தி, டெலிபோன், ஆகாய வசனி என்ற அற்புத சாதனங்களைக் கண்டு பிடித்திருக்கிறானென்றால், எங்கள் பெரியோர்கள் ஞானதிருஷ்டியைக் கொண்டு இருந்தவிடத்தி னின்றும் யாவுமுணர்ந்து வந்தார்களென்று இறுமாப்புடன் கூறுகிறீர்கள். இன்று ஐரோப்பியன் கிழவனைக் குமரனாக்குகிறான்; ஆணைப் பெண்ணாக்கவும், பெண்ணை ஆணாக்கவும், இறந்தவரைப் பிழைப்பிக்கவும் முயலுகின்றானென்றால், எங்கள் முதியோர்கள் 'நரிகளைப் பரிகளாக்கினர்; மக்களை விலங்குகளாக்கினர்; கல்லைப் பெண்ணுருவாக்கினர்; நாரதர் போன்ற ஆடவர் பெண்ணுருவந் தாங்கிப் பிள்ளைகளையும் பெற்றனர்; சமர்க்களத்தில் உயிர் விட்டவரை சஞ்சீவிகொண்டு உயிர்ப்பித்திருக்கின்றனர்; கூடுவிட்டுக் கூடுபாய்ந்தனர், என்று பெருமை யடிக்கத் தொடங்குகிறீர்கள். அயல் நாட்டினர் கண்டு பிடிக்கும் பின்னும் பல அதிசயங்களைக் கூறப் புகின், அவர்கள் அனைவரும் நந் (இந்திய) நாட்டுப் பூர்வீக நூல்களைத் திருடிச் சென்று, அதைப் படித்துப் பார்த்தே அவ் வதிசயங்களை யியற்றி வருகின்றனரென்று அடியோடு கூறத் தலைப்படுகிறீர்கள். அதற்கு ஆதாரவாகச் சரித்திரக்காரர் சிலர் கூறியுள்ள "இந் நாட்டுப் பண்டைய நூல்கள் சிலவற்றை ஐரோப்பியர் கைப்பற்றிச் சென்றன" ரென்ற கூற்றை எடுத்துக் காட்டுகின்றீர்கள். அந்தோ! உங்கள் அறியாமையின் அழகுதானென்னே! ஜேம்ஸ் வாட் நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்ததற்கும், ஜார்ஜ் ஸ்டீவன்சன் இரயில் வண்டித் தொடரைக் கண்டுபிடித்ததற்கும், கலிலியோ என்ற

இவ் வுலகக் கோவிலின் சந்நிதியாகி அறமெலா முதித்த நமது பாரத தேசம், இப்போது வறுமையையும், மடமையையும், அடிமைத்தனமும் உற்றுத் தவிக்கிறது.

வான சாஸ்திரி வான சாஸ்திர உண்மைகளையும், பூமையக் கவர்ச்சியின் சக்தியினையும் கண்டுபிடித்ததற்கும், அமெரிக்க அறிஞர் எடிசன் ஞானியார் எண்ணற்ற புதுமைகளைக் கண்டுபிடித்ததற்கும் எந்த நூல்களை யாதாரமாகக் கொண்டனரென்பதைச் சிறிது சிந்தித்தீர்களா? உங்கள் நாட்டிடையில் வசிக்கும் உங்கள் சோதரர் ஜகதீச சந்திர வசு அவர்கள் உலோகங்களுக்கும் உயிருண்டென்ற உண்மையைக் கண்டு உலகம் அறிய மெய்ப்பித்து வருவதற்கும், தாவரங்களின் திட்ட நுட்பங்களை யாராய்ந்து வெளியிட்டு வருவதற்கும் எந்த நூலை யாதாரவாகக் கொண்டாரென்பதைக் கூறமாட்டுவீர்களா? உங்கள் தயாநந்தர் பல வேத மந்திரங்களுக்கு விஞ்ஞானக் கலைகளை விளக்குபவை யென்று விரிவுரை கண்டிருக்கிறாரென்று விளம்புகிறீர்களா? ஆயின், அவ் விரிவுரைகளை யங்கீகரித்த ஆரிய சமாஜிகள் எத்தனை யற்புதங்களை யியற்றியுள்ளரென்பதை எடுத்துக் கூறுவீர்களா? தயாநந்தர்தான் கொண்ட கருத்திற்கிணங்க மந்திரங்களுக்குப் பொருள் காணப் புகுந்து, பதங்களைச் சிதைத்துச் சின்னாபின்னப் படுத்திப் பட்டுள்ள பாட்டினை உற்றுக் கவனித்தீர்களா? பீஜ கணிதமும் பிறந்தவிட மெங்கே யென்கிறீர்கள். அவை வளர்ந்தவிட மெங்கே யென்பதைக் கூறுங்கள். சோதிட நூலும், மருத்துவ நூலும் முதலில் தோன்றிய விடமெது வென்கிறீர்கள். இன்று சோதிடமும், மருத்துவமும் சோர்ந்திருப்பது உங்கள் நாட்டிலென்பதை மறந்துவிட்டீர்களா? மேல் நாட்டினர் மரப் பட்டைகளை யுடுத்தி நிலை யற்றுத் திரிந்து கொண்டிருந்த காலத்திலேயே, எம் முன்னோர்கள் பட்டாடைகளையும், மஸ்லின் துணிகளையு முடுத்தி, மாளிகைகளை யெழுப்பி, நகரங்களைக் கண்டு, நாகரீகம் வாய்ந்து கைத்தொழில்களில் மிகுந்து, எல்லோரா, கரிபுரம் போன்ற விடங்களிலுள்ள கற் குடைவுகளையுஞ் செய்து. கூட கோபுரங்களையு மமைத்துப் பெருமை யுற்றனரெனப் பெருமை பேசுகிறீர்கள் பலபடப் பேசுவானேன்? பழம் பெருமையைப் பேசிக் காலங் கழிக்கும் உங்களின் இன்றைய நிலையென்ன வென்பதைச் சிறிது கூறுங்கள்.

இந்திய மக்கள் முப்பத்தைந்து கோடிக்கு மேற்பட்ட தொகையினரென்பதற்குச் சந்தேகமில்லை. உங்கள் நாட்டில் 6,85,665 கிராமங்களும், 2,316 நகரங்களும் உள. உங்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் நாட்டுப் புறங்களிலும் நூற்றுக்குப் பதின்மர் நகரப்புறங்களிலும் வாழ்ந்து வருகிறீர்கள். எனவே நகரப் புறங்களில் அமைந்துள்ள நாகரீகத்தின் சுவையை உங்களில்

நமது பாரதம் மிருக பலத்தின் கூரிய நகங்களிலும் பற்களிலும் அகப்பட்டுத் தவிக்கிறது. அடிமைத்தன மென்னும் முதலை வாயில் சிக்குண்டு "பாரதமே" எனக் கூவி யழைக்கிறது.

எத்தனை பேர் அனுபவித்து வருகிறார்களென்பதை எண்ணிப் பாருங்கள். சாத்திரத்தில் உயர்ந்த கோத்திரம் வாய்ந்தவர்களெனப்படும் உங்களில் இன்று எத்தனைப் பேர் கல்வி கற்றிருக்கிறீர்கள்? பிரிட்டிஷ் இந்தியாவில் ஆரம்பக் கல்வியைப் பயில்பவரின் எண்ணிக்கை நூற்றுக்கு 2.8 பேர் எனவே, பையன்களுள் நூற்றுக்கு 4·5ம், பெண்களுக்குள் 0·95ம் எனத் தெரிய வருகிறது. இதே காலத்தில் பிற நாடுகளின் ஆரம்பக் கல்வி பயில்பவரின் எண்ணிக்கையைக் கவனியுங்கள். அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்களில் நூற்றுக்கு 19.8ம், ஸ்காட்லாண்டில் நூற்றுக்கு 17.3ம், இங்கிலாந்து வேல்ஸ் என்ற இரு நாடுகளிலும் நூற்றுக்கு 16.5ம், ஜர்மனியில் நூற்றுக்கு 13·9ம், ஜப்பானில் நூற்றுக்கு 13.0ம் ஆமெனில், உங்கள் நாட்டின் தாழ்ந்த நிலை உங்களுக்குப் புலனாக வில்லையா? இன்றைய நிலையில்—உலகப் போட்டியில் உங்கள் நாடும், நீங்களும் தலைதூக்க வேண்டுமென்று கருதுகிறீர்களல்லவா? ஆயின் உங்களிடையில் பரவியுள்ள அஞ்ஞானத்தை யோட்டுவதற்கு, மெஞ்ஞானக் கல்வியை எங்கும் பரப்புங்கள். வேதாந்த தத்துவ சாஸ்திரங்களைக் கொண்ட பாரமார்த்திகக் கல்வியில், உங்கள் நாடு ஒரு காலத்தில் உயர்ந்திருந்ததென்பது உண்மையே. ஆனால் இக் காலத்தில் உலக வாழ்க்கைக்கு இன்றியமையாததான இலௌகிகக் கல்வியில் நீங்கள் மிகவும் பிற்போக்கடைந் திருக்கிறீர்களென்பதை மறுக்க வல்லீர்களா? உங்கள் நாட்டில் வேதாந்தக் கருத்துக்கள் ஓங்கி நின்றதன் பயனால் உங்களிடையில் இன்று "எல்லாம் அநித்தியம்; விதியின் பயனாலன்றி நம்மாலாவ தொன்றில்லை; உலகைத் துறந்து சந்நியாசம் பெறுதலே வாழ்க்கையின் நோக்கம்" என்பது போன்ற சோம்பேறி வாய் வேதாந்தம் மாத்திரமே மிகுந்து நிற்கின்றது. 'உங்கள் உலக வாழ்க்கையை நடத்துவதற்கான கடமைகளைச் செய்வதற்கு முற்படுங்கள்' என்று உங்கள் கடமையை வற்புறுத்த எழுந்த பகவத்கீதை இன்று உலகை வெறுக்குமாறு உங்களைத் தூண்டும் நிலையில் வேண்டி நிற்கிறது! அவ்வாறு அதற்குப் பொருள்கொண்டு பிரசாரம் செய்திருக்கிறீர்கள். ஆகவே உண்மையில் உங்களிடையில் இன்று உலகியற் கல்வி ஊன்றி வளர வேண்டும். விஞ்ஞானக் கலைகள் விரிந்து பரவ வேண்டும். கைத்தொழிற் கலைகள் கனம் பெற வேண்டும். விவசாய அறிவு விரிவடைய வேண்டும்.

பழக்கத்தின் காரணமாகவும், சமயத்தின் போராலும் உங்களிடையில் கணக்கற்ற மூடக் கொள்கைகள் முயங்கிக் கிடக்கின்றன. அவை

ஒவ்வொருவனுந் தானே அந்தணன், அரசன், வணிகன், வேளாளன் என்பதை யுணரவும்!

செய்யும் அனர்த்தங்கள் பல. துன்பத்தை இன்பமெனக் கருதியும், அடிமை வாழ்க்கையைச் சுதந்திர வாழ்க்கையென எண்ணியும் நடக்கும் உங்கள் நிலையைக் கண்டு அயலார் எள்ளி நகையாடுகிறதைக் கவனிக்கிறீர்களில்லை. சுயராஜ்ய மென்ற சுதந்திர உரிமை வேண்டுமென்று கோருகிறீர்கள்; ஆனால், உங்கள் பெண்ணரசிகளை அடிமை வாழ்க்கையினின்றும் அகற்றுவதற்கு அஞ்சுகிறீர்கள்! நாட்டின் உரிமையைச் சாதிக்க நனி விரும்புகிறீர்கள்; ஆனால், நாளும் நாழிகையும் நல்லதல்லவென காரியஞ் செய்யாது காலங் கழிக்கிறீர்கள்! அந்தோ! சோதிட சாஸ்திரம் உங்களைச் சோர்வடையச் செய்திருக்கிறது. உண்மையான சாஸ்திரமாகிய கணித சோதிடத்தை விடுத்துப் பொய்யும், புரட்டுங் கூறும் பலித சோதிடத்தை நம்பிக் காலத்தையும், பணத்தையும் வீணாக்கி, அலைந்து திரிகிறீர்கள்! பலன் கூறும் சோதிட சாஸ்திரத்தின் துணையால் பின்னால் நடப்பதை முன்னறிந்து, எத்தனை ஆபத்துகளுக்கு நீங்களும், உங்கள் நாடும் உள்ளாகாமல் தப்பித்துக் கொண்டீர்களென்பதைக் கூறுங்கள்? காலமும், ஏற்ற சாதனங்களும் கைக்கூடிய பொழுது, நாளும் நக்ஷத்திரமும் நன்றாகயில்லையென கடமையைச் செய்யாது காலங் கடத்துகிறீர்கள்! உலக சிருஷ்டியில் உங்களைப் போல் தோன்றியுள்ள பிற உயிர்களைக் கண்டு சகுனங்களென்று மிரட்சியடைகிறீர்கள்! அந்தோ! சகுன சாஸ்திரம் உங்களுக்குச் சாதித்து வரும் இடையூறுகள் எண்ணிடங்குவனவாமோ! இறைவன் படைப்பில் தோன்றிய நாளுங் கிழமையும் நல்லனவேயன்றி தீயனவென்பதில்லையே. எனவே (ராகு) காலமும், (மரண) யோகமும் கருதுவதிற் பயனில்லை. சென்றுபோன ஒரு நிமிட நேரத்தை மீண்டும் பெற முடியாதென்ற உண்மையையோர்ந்து, அதன் அருமை பெருமைகளையறிந்து, காலத்தை வீணாக்காது கருமஞ் செய்ய முற்படுவீர்களா? பேய் பிசாசுகள், பில்லி சூனியங்களென்ற பொய்த் தோற்றங்களை உண்மையென நம்பி உறுதியிழக்கிறீர்கள்! "உடம்பார் அழிந்தால் உயிரார் அழிவார்" என்றபடி. பௌதிக சரீரத்தைக் கொண்டு உலவி வந்த உயிர், அச் சரீரமழிந்த பின் மறையாமல் வேறு உருக்கொண்டு பேயாகவும், பூதமாகவும் மக்களை வருத்தி வருகின்றனவென்பதை எவ்வாறு நம்புகிறீர்கள்? பௌதிக சக்தியையிழந்தபின் உயிருக்குப் பல உருவங்களோடு மக்களின் பௌதிகக் கண்களுக்கு மீண்டுங் காணப்படுவதற்குச் சக்தியுண்டோ? இத்தகைய பேய்கள் பெண்களைப் பிடித்து வருத்துகிறதென்பதும் பேதமையேயாகும். கல்வி கற்ற—அறிவு வாய்ந்த பெண்களை உலகைப் பேய்கள் பற்றாதிருப்பதன் காரணத்தைச் சற்று யோசித்தீர்களா? பேய்களைப் பற்றியும், பில்லி சூனியங்களைப்

இந்தியா கிராம நாடு. கிராமத்தின் உயர்வே இந்தியாவின் உயர்வு. ஆதலின் கிராமப் பணிக்கு நீங்கள் வீறுகொண்டு எழுங்கள்.

பற்றியும் பயங்கரமான—வீணான கற்பனைக் கதைகள் பலவற்றை உங்கள் சிறு குழந்தைகளுக்குக் கூறி, அவர்களைக் கோழைகளாக்கி விடுகிறீர்கள். உங்கள் பாட்டிமார்கள் குழந்தைகளுக்குப் பன்னிப் பன்னிக் கூறும் பழங் கதைகள் பலவும் இத்தகையனவேயாம். இந் நிலையில் வளரும் உங்கள் சமூகத்தில் வீரர்களும், சூரர்களும் வெளிப்படுவார்களென எதிர்பார்ப்பதெங்ஙனம்? சிறு வயதினின்றுமே அஞ்சாமையும், ஆண்மையும், வீரமும் செறிந்த சிறந்த சரித்திரங்களைக் கேட்டு வளரும் மக்கள் வீர தீரர்களாக விளங்க வல்லார்களென்பதைக் கவனியுங்கள்.

உங்களிடையில் விரிவாக வழங்கி வரும் புராணக் கதைகள் பலவற்றுள் என்ன நீதியைக் கற்று வருகிறீர்களென்பதைச் சிந்தித்துப் பாருங்கள். துருவன் சரிதையைப் படித்த ஒரு சிறுவன் என்ன படிப்பினையைப் பெறுகிறான்? தவத்தையியற்றி உயர்வடையப் போகிறானா? அரிச்சந்திரனை ஆதர்சமாகக் கொண்ட நீங்கள் அரிச்சந்திரனைப் போல் நடக்கப் போகிறீர்களா? கொண்ட பெண்ணையும், பெற்ற பிள்ளையையும் விற்கக்கூடிய பொருள்களெனக் கொண்டு அடிமை வியாபாரம் செய்த அரிச்சந்திரனை இன்று உலகம் ஆதரிக்கக் கூடுமா? முறை தவறிய வகையில் முழு மோசம் புரியும் கௌசிகனைப் போன்ற மாக்களுக்கு மண்டியிட்டு வணங்கப் போகிறீர்களா? மச்சகந்தி யென்ற மங்கையின் மையலில் விழுந்து மயங்கிய சந்தனுவைப் போன்ற தந்தையருக்காக வேண்டி உங்களில் எத்தனைப் பேர் வீஷ்டுமனைப் போல் வீடு (இல்லறம்) துறக்க வல்லீர்கள்? கண்ணபிரானின் காதல் லீலைகளைக் கருதிப் படித்த எத்தனைப் பேர் அவரைப்போல் காமரசத்தைச் சுவைக்கக் கருதாதவர்கள்? கடவுள் அவதாரமாகக் கற்பிக்கப்பட்ட கண்ணன் மீது, சிற்றின்ப ஊழல்களையாரோபித்துப் புனைந்துள்ள சரித்திரச் செய்திகளின் ஆபாசத்தை எவ்வாறு மூடி மறைக்க முடியும்? எண்ணற்ற பெண்களின் கற்பைக் கவர்ந்தும் நித்திய பிரம்மச்சாரி யென்று நீதிப் பெயரைப் பெற்ற பெருமானின் பெருமையைப் பேசிப் புகழும் பிரசங்கிகளின் அறிவுதானென்னே! எத்துணை இழிதகைய செயலுக்கும் தத்துவார்த்தங்கள் புனைந்து கூறி உயர்வைக் கற்பிக்கும் உயர்ந்த பண்டிதர்கள் மலிந்த உங்கள் நாட்டில் உத்தம நடத்தைக்கு வழி யெங்கே பிறக்கும்? ஸ்ரீ கிருஷ்ணரின் சரித்திரத்தில் நுழைந்த ஆபாசங்களை ஆராய்ச்சி முகத்தால் அகற்றிப் பொய்யுரைகளையும், புனைந்துரைகளையும் நீக்கிக் கிருஷ்ணரின் உண்மைச் சரித்திரத்தை எழுதி உலகுக்கு உபகரித்துள்ள லஜபதி ராயரின் உழைப்பை, உங்களில் எத்தனை பேர் கவனித்தீர்

மனிதனிடத்து முன்னரே அடங்கிக் கிடக்கும் பூரணத் தன்மையை வெளிக்குக் கொண்டு வருதலே கல்வியாம்.

கள்? வேத காலத்தில் மக்களின் நிலை இவ்வாறிருந்ததென ஆராய்ந்து முடிவு கட்டிய லோகமான்ய பால கங்காதர திலகரின் "ஆரியரின் வட துருவவாசம்" என்ற சிறிய நூலின் சிறப்பினைக் கண்டீர்களா? எனவே புராணக் கதைகள் என்ற மாத்திரத்தில் உயர்வாகக் கருதிவிடாமல் அவற்றில் நீதிக்கும், உண்மைக்கும், ஆதர்சத்திற்கும், கால நிலைக்கும் பயன்படக்கூடிய சிறந்த சரித்திரங்களை மாத்திரம் சிறுவர் சிறுமிகளுக்குக் கற்பிக்க முயலுங்கள். உங்கள் குழந்தைகள் உங்கள் நாட்டின் உண்மைச் சரித்திரங்களை (History) ஊன்றிப் படிக்கட்டும். பீமனின் புய வலியும், அர்ச்சுனனின் ஆற்றலும், அபிமன்னனின் ஆண்மையும், கிருஷ்ணனின் இராஜ தந்திரமும், சிவாஜியின் வீரமும், பிரதாபனின் கீர்த்தியும், பிருதிவியின் விறலும், பத்மினியின் கற்பும், சம்யுக்தையின் காதலும், ஜான்ஸி ராணியின் தீரமும் உங்கள் குழந்தைகளால் கற்கப்படட்டும். ஆதர்ச புருஷர்களின் சரித்திரங்களைச் சாமானிய மனிதர்களின் ஜீவியங்களெனவே கொள்ளுங்கள். அப்படிக்கன்றி அவர்களைக் கடவுளின் அவதாரங்களென்று கற்பனை செய்து உயர்வு படுத்தி, அவர்களின் சரிதைகளை உபயோகமற்றவைகளாக்கி விடாதீர்கள்.

எந்தச் செய்தியை—எந்த சரித்திரத்தை—எந்த நீதியையாயினும் கடவுள் கூறியதென்றதாலோ, இருஷிகள் திருவாய் மலர்ந்ததென்றதாலோ, வடமொழியில்—செய்யுள் உருவில் சொல்லப்பட்டதென்றதாலோ உண்மையென நம்பிவிடாதீர்கள். உலக இயல்புக்கும், உண்மைக்கும், அனுபவத்திற்கும் ஒத்திட்டுப் பார்த்துப் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து உறுதிப்படுத்துங்கள். புராணங்களில் கற்பிக்கப்பட்ட முப்பத்து முக்கோடி தெய்வங்களன்றி காடன், மாடன், முனியாண்டி, கறுப்பன், கம்பத்தடியான், காத்தவராயன், கடகடப்பான் என்ற எண்ணற்ற ஆண் தெய்வங்களும், மாரி, மகமாயி, செல்லாயி, அங்காளம்மன், ஒங்காளியம்மன், பிடாரியம்மன், மாரியாத்தாள், மலையாளத்தாள் என்ற எண்ணற்ற பெண் தெய்வங்களும் அசைக்க முடியாதபடி உங்கள் நாடெங்கும் மலையடிகளிலும் குளக்கரைகளிலும், நதிக் கரைகளிலும், மரத் தடிகளிலும், ஊர்ப் புறங்களிலும் நின்று காவல் காத்து வருகையில் உங்கள் நாட்டை மகம்மதியர்களும், ஆங்கிலேயரும் அடிமை கொண்டு விட்டனரே! இத்தனைக் கடவுள்களும் உங்களுக்குச் செய்த நன்மைகள் யாவை? உங்களை அறிவாளிகளாக்கினவா? அன்றி பஞ்சத்திலும், நோயிலும் பட்டொழியாமல் உங்களைக் காத்தனவா? அல்லது உங்கள் நாட்டினரனைவரையும் ஒற்றுமைப் படுத்தியாவது உபகரித்தனவா? இல்லை;

மனிதனிடத்து முன்னரே அடங்கிக் கிடக்கும் தெய்வத் தன்மையை வெளிக்குக் கொண்டு வருதலே ஞானமாம்.

இல்லை; இல்லையே. சிவன் கோவில், பெருமாள் கோவில், விநாயகன் கோவில், சுப்பிரமணியர் கோவில், அம்மன் கோவில் என எத்தனை வித கோவில்கள்! எத்தனை வித வழிபாடுகள்! எத்தனை வித மதச் சின்னங்கள்! எத்தனை வித உருவங்கள்! எத்தனை வித மதங்கள்! அந்தோ! சிவ பெருமானின் கோவில்கள் என்பவற்றையே கவனியுங்கள். ஊர்கள் எங்கும் சிவ பெருமான் ஒருவராக விளங்கவில்லையே! ஒரு ஊரில் பிரகதீச்வரன்; மற்றொரு ஊரில் பசுபதீச்வரன்; இன்னொரு ஊரில் மஹேசுவரன்; பிறிதொரு ஊரில் சொக்கநாதர். இது போன்ற எத்தனையோ வெவ்வேறு பெயர்கள்! அப்படியே மஹா விஷ்ணுவின் கோவில்கள் என்பவற்றையே கவனியுங்கள். ஒரு கோயிலில் ரங்கநாதர்; மற்றொரு கோயிலில் வெங்கடாசலபதி; இன்னொரு கோயிலில் கள்ளழகர்; பிறிதொரு கோயிலில் பூவராக மூர்த்தி. இது போன்ற எத்தனையோ வெவ்வேறு நாமங்கள்! நாமங்கள் பலவாயினும் மூர்த்தி யொன்றாகவாவது கருதுகின்றார்களா? திருப்பதி வெங்கடாசலபதியை வழிபட்டு வந்த வொருவர் ஸ்ரீரங்கம் வந்து வசிக்க முற்பட்டவிடத்து, அவ்வூர் இரங்கநாதரை மஹா விஷ்ணுவின் மூர்த்த மென்பதைக் கருதியாவது தன் குல தெய்வமாகக் கொண்டு தொழுகிறாரா? இல்லை. ஆண்டுக் கொருமுறையோ அல்லது சில ஆண்டுகளுக் கொருமுறையோ திருப்பதிக்கே சென்று வழிபட்டாலன்றி மனந் திருப்தி யடையமாட்டார் அப்படியே சைவர்களுமாவர். பல் வேறு பெயர்களால் பல் வேறு கோவில்களில் குடிகொண்ட விஷ்ணு மூர்த்திகளே பல ஒன்று கூடி ஒன்றுக்கொன்று உபசாரம் புரியுந் திரு விழாக்களும் நடைபெறுகின்றன! பழனியாண்டவருக்குச் செய்துகொண்ட ஒரு பிரார்த்தனையைத் திருச்செந்தூர் வேலவனுக்குச் செலுத்த நீங்கள் ஒருப்பட மாட்டீர்கள். ஒரு குக் கிராமத்திலுள்ள கரிய பெருமாளுக்குச் செய்துகொண்ட ஒரு நோன்பினை, மற்றொரு கிராமத்திலுள்ள கருதாராயப் பெருமாளுக்குச் செலுத்தச் சம்மதிக்க மாட்டீர்கள்! இத் தெய்வங்களின் பெயரால் நீங்கள் நடத்தும் திரு விழாக்களின் ஆபாசத்தை என்னென்பது? கடவுளுக்குப் படுக்கை யறை மூஸ்தீபுகளும், கடவுள் வேசி யகத்திற்குச் சென்று வந்து தன் மனைவியிடம் பூசல் விளைக்கும் பூசைகளும், கடவுள் பக்தியையும், தத்துவ ஞானத்தையும் புகட்ட வந்தவையெனக் கூறப்படுகின்றன! அன்பனுக்காக வேண்டி ஈசன் ஆளாக வந்து தாசி யில்லத்திற்குத் தூது போன சரித்திரமும் புண்ணிய புராணமாக எண்ணி யோதப்படுகிறது! கடவுளின் பெயரால் பெண்களைப் பொட்டுக் கட்டி விடுத்து, பகிரங்க விபசாரிகளாக்கி வாழும் நீங்கள் உங்களின் சமயத் தூய்மையை எவ்வாறு சாதிக்கப்

நமது கடமையாவது வழியைச் செம்மைப் படுத்துதலே. பகவான் மிஞ்சியவற்றை யெல்லாம் செய்கிறார் என்பதே.

போகிறீர்கள்? ஊர்கள்தோறும் கடவுள்களைக் கற்பனை செய்து, கோயில்களுங் கட்டி, அதற்கென ஸ்தல புராணங்களையுஞ் சிருஷ்டித்துப் பாமர மக்களை ஏய்த்தும், தாங்களே ஏமாறியும் வாழும் உங்கள் நிலையை என்னென்பது? அருணாசல புராணமும், திருவிளையாடற் புராணமும், ஸ்ரீரங்க மகத்துவமும், பண்டரிபுர பக்த விஜயமும், இது போன்ற மற்றும் பல புராணங்களும் பொய்க் கற்பனைகள் பல புகுத்தி எழுதப்பட்டவை யென்பதை நீங்கள் அறியும் நாள் எந்நாளோ?

உலக இயல்புக்கும், நீதிக்கும் முரணான வகையில் மதங்களின் வெளி வேஷங்களுக்காக நடந்து உயர்வு பெற்றதாகக் கூறப்படும் பக்தர் சரித்திரங்களை ஒதுக்கித் தள்ளுங்கள். சைவ வேடம் புனைந்த ஒருவன் வேண்டினானென்று புத்திரனைக் கொன்று கறி சமைத்துப் படைத்த செய்கையை உங்களில் எத்தனை பேர் பின்பற்ற வல்லீர்கள்? வைணவ வேடந் தரித்த ஒருவன் விரும்பியதற்கிணங்கித் தன் மனைவியைக் கூட்டிக் கொடுக்க முற்பட்ட பக்தனை நீங்கள் பின் பற்றப் போகிறீர்களா? ஆ! இது பற்றி இன்னும் விவரித் தெழுத இலேகினி இடந் தரவில்லை. மதத்தின் பெயரால் ஆடு, கோழி, எருமை ஆகிய உயிர் பிராணிகளைப் பலியிடும் வழக்கத்தை இன்னும் அனுமதித்துக் கொண்டிருக்கிறீர்களே! அவற்றைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணம் உங்கள் மனத்திற் கெட்டவில்லையா? உங்கள் கோயில்களின் கற்றூண்களிலும், கல் மண்டபங்களிலும், கோபுரங்களிலும், சித்திரத் தேர்களிலும் செதுக்கப்பட்டுள்ள சிற்றின்ப ஊழல்களை விவரிக்கும் இழிதகைய சிற்றின்பங்களும் உங்கள் சமயத்தின் தூய்மையைக் காத்து வருபவை யாமா? கிருஷ்ண பரமாத்வாவின் லீலைகளுக்குத் தத்துவார்த்தங்கள் கூறிப் புகழும் பண்டிதர்கள் ஜகன்னாதத்தி லுள்ள கிருஷ்ணர் கோவிலின் கோபுரங்களில் அமைந்துள்ள சித்திரங்களை ஒரு முறை சென்று பார்க்கட்டும். அக் கோயில் சித்திரக் காட்சிகளைப் புகைப்படம் பிடித்தலும் கூடாதென்று துரைத்தனத்தார் தடை செய்திருப்பதையுஞ் சிந்தித்துப் பாருங்கள். கடவுளின் பெயரால் பிரார்த்தனைகள் செய்துகொள்ளும் மூட வழக்கம் உங்களில் பிரபல மடைந்திருக்கிறதே! சுகாதாரக் குறைவாலும், வேறு பல இயற்கைக் காரணங்களாலும் நோய்கள் உண்டாவதைத் கவனியாமல் அவற்றைத் தீர்க்கும்படிக்கும், அவ்வாறு நோய் நீங்கினால் காவடி கட்டுகிறேன், வாய்ப் பூட்டுப் போட்டுக் கொள்கிறேன், உண்டிகை செலுத்துகிறேன், அபிஷேகம் செய்து வைக்கிறேன், உடம்பில் இரும்பு ஊசிகளைக் குத்திக்கொள்கிறேன் என்பது போன்ற எண்

ஒருவனைத் தன் பலங்கொண்டு நிற்குமாறு செய்ய வல்லது எதுவோ, அதுவே மெய்யான கல்வியாகும்.

ணற்ற பிரார்த்தனைகளைச் செய்தும் கோயில் தெய்வங்களை வேண்டிக் கொள்ளுகிறீர்கள். அந்தோ! கடவுளை எவ்வாறு கருதி யிருக்கிறீர்கள்! இலஞ்சம் வாங்கும் ஒரு உத்தியோகஸ்தனுக்கும், பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்ளுமாறு நீங்கள் கோரும் கடவுளுக்கும் வித்தியாசமென்ன?

சைவ வைணவப் பண்டிதர்கள் தங்கள் கோவில்களின் அமைப்பைப் பற்றித் தத்துவார்த்தங்கள் கூறி வானமளாவப் புகழ்ந்து வருகின்றனர். தாங்கள் ஏகேசுவர உபாசனையில் (ஒரு தெய்வ வணக்கத்தில்) தலை சிறந்தவர்களெனத் தருக்கிக் கூறுகின்றனர். ஆனால் அவர்களின் பிரபலமான கோவில்களைச் சேர்ந்தாற்போல் பல குட்டித் தெய்வங்களும் கோயில் கொண்டு, பூசை யேற்று வருவதை அவர்கள் கவனிப்பதில்லை. எத்தனையோ சைவ, வைணவக் கோயில்களில் சைவ, வைணவப் பெரியார்கள் முனியன், வீரன், நல்லய்யன், நாவடியான், கறுப்பண்ணன் என்பது போன்ற கறுப்புத் தெய்வங்களைக் காவல்காரர்களாக அமைத்து, அவைகளுக்கு உயிர்ப்பலி யிட்டுப் பூசைகள் நடத்த முற்படுகின்றனர்! உங்கள் கோயில்களில் காற்றுப் புகாதவாறு அமைத்துள்ள கர்ப்பகிருகம், அர்த்த மண்டபம் முதலிய அறைகளின் நேர்மையும், அவற்றில் வௌவால்கள் வாசஞ் செய்வதற்கேற்ப இருள் சூழ்ந்திருக்கும் இனிமையும், கோயில்களெங்கும் படிந்துள்ள ஈரமும், புழுதியுங் கலந்து வீசும் வாசனையும், அபிஷேக ஆராதனைப் பொருள்களாகிய பால், பழம், நெய் முதலியன விக்ரகங்களின் மீது நாள் பலவாகத் தங்கி நாற்றம் வீசித் தன்னில் சிறு புழுக்களைச் சிருஷ்டிக்கச் செய்யும் சிறப்பும் கண்டோர் பரிதபிக்கத் தக்கனவன்றோ? பின்னும் இத்தகைய கோயில்களில் குடிகொண்டுள்ள கடவுள் மூர்த்தங்களின் மேல் கற்பித்துள்ள மகத்துவங்களோ அளவிடலரிதாகும். உங்களிடையில் மலிந்துள்ள இது போன்ற இன்னுஞ் சில மூடக் கொள்கைகளைப் பற்றி அடுத்த கடிதத்தில் விவரிக்கலாம். இதிற் சில விஷயங்கள் கடுமையாகக் காணப்படுகிறதென வருத்தமடையாதீர்கள். நீங்கள் கைக்கொண்டுள்ளவை யென அபிமானம் வைத்து நோக்காதீர்கள். நடு நிலைமையினின்று பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து உண்மை காண முயலுங்கள். உண்மையைவிட உயர்ந்த தருமம் வேறொன்றில்லை. "ஸத்யாத் நாஸ்தி பரோ தர்ம:" என்று வேதம் முறையிடுகிறது. வந்தே மாதரம்

எவனும் பிறர்க்குக் கற்பிக்க முடியாது என்பதை நீங்கள் அறிகின்றீர்களல்லவா? ஆசிரியன் தன்னைக் கற்பிப்பவனாகக் கருதுவதனால், அனைத்தையும் கெடுத்து விடுகிறான்.

பைந்தமிழ்ச் சோலை.

கண்ணம்மா—என் காதலன்.

“ஞான வினோதன்”

1. கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம் (அடி தங்கமே
கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம் [தங்கம்)
எண்ண முரைத்துவிடில் தங்கமே தங்கம்—பின்னர்
ஏதெனிலுஞ் செய்வமடி தங்கமே தங்கம்.

2. கன்னிகை யாயிருந்து தங்கமே தங்கம்—தாங்கள்
காலங் கழிப்பமடி தங்கமே தங்கம்
அன்னிய மன்னர் மக்கள் பூமியிலுண்டாம்—என்னும்
அதனையுஞ் சொல்லிடடி தங்கமே தங்கம்.

3. ஆற்றங் கரையதனில் முன்னமொரு நாள்—எனை
அழைத்துத் தனியிடத்திற் பேசிய தெல்லாம்
தூற்றி நகர் முரசு சாற்றுவ னென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம்.

4. சோர மிழைத்திடையர் பெண்களுடனே—அவன்
சூழ்ச்சித் திறமை பல காட்டுவ தெல்லாம்
வீர மறக் குலத்து மாதரி டத்தே
வேண்டிய தில்லை யென்று சொல்லி விடடீ.

5. பெண் ணென்று பூமிதனிற் பிறந்து விட்டால்—மிகப்
பீழை யிருக்குதடி தங்கமே தங்கம்
பண்ணொன்று வேய்ங்குழலில் ஊதி வந்திட்டான்—அதைப்
பற்றி மறக்குதில்லை பஞ்சை யுள்ளமே.

தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம், கம்பரி ராமாயணம் முதலியவற்றிற்குப் பின்னர் தமிழன்னை நீள் துயிலில் ஆழ்ந்து போய் விட்டாள். மேற்புலக் கலைகளின் கூட்டுறவு ஏற்பட்ட பின்னும் 19-ம் நூற்றாண்டின் இறுதிவரையும் காத்துக்கொண்டிருக்க

ஆசிரியர்கள் பையன்களைக் கிளிப்பிள்ளைகளாக்கி, அவர்களது மூளைக்குள் பல பொருள்களைத் திணிப்பதினால், மூளைகளைப் பாழாக்கி விடுகின்றனர்.

வேண்டியது வந்துவிட்டது. தமிழன்னைக்குத் திருப்பள்ளி எழுச்சிப் பாடிய நால்வருள்—சுந்தரம் பிள்ளை, வி. கோ. சூ. சாஸ்திரியார், பாரதியார், வா. வே. ஸு. ஐயர்—பாரதியார் தலைசிறந்து விளங்குகின்றார். இறந்த காலத்தோடு தற்காலத்தை இணைத்து காலக் கடலுக்கோர் பாலம் இட்ட பெருமை பாரதியாருக்கே உரித்தாகும்.

பாரத வர்ஷத்தின் குல தெய்வமாகிவிட்ட கண்ணனுக்குப் பாமாலை சூட்டாத கவிகள் வெகு அருமை. அன்று பாரத யுத்தத்தில் தன் உற்றார் உறவினர்களைக் கண்டுவிட்ட அர்ச்சுனன் அவர்களைக் கொன்று இன்புறுவதை வெறுத்து போர் புரிய மறுத்துவிடுகின்றான். அப்பொழுது கீதா சாஸ்திரத்தை அருளி விசயனுடைய இரத்தை வெற்றிபெற ஓட்டியது கண்ணனுடைய திவ்ய ஸ்வரூபமே. அது நம் கவியின் உளத்தையும் ஆகருஷித்து விட்டிருந்தது.

பரமன்பால் காதல் கொண்டவர்கள் இறைவனைப் பல பாவங்களால் வழிபடுவது ஓர் பழைய வழக்கம். இதைப் பின்பற்றியே பாரதியாரும் கண்ணனை தாயாகவும், தந்தையாகவும், தநயனாகவும், குருவாகவும், நாயகியாகவும், நாயகனாகவும், மற்றும் பல விதங்களாகப் பாவித்து பாடியிருக்கின்றார். இறைவனை மற்ற பாவங்களால் வழிபடலைவிட நாயக நாயகி பாவங்களால் வழிபடலே சிறந்தது. திருக்கோவையாரையும், திருவருட்பாவையும் சுவைத்துப் தேக்கெறிந்த தமிழருக்கு இங்ஙனம் வழிபடல் புதிதாகப்படாது. ஆனால் ‘இப்பாவத்தை ஆளுவது கத்தியின் கூர்ப் பக்கத்தின் மீது நடப்பதைப் போன்ற கஷ்டமான காரியம்’ என்று ஓர் நவீன ரஸிகர் கருதுகின்றார்.

மேலும் பக்தர்கள் பல அம்ஸங்களில் காதலர்களை ஒத்தவர்கள். எனவே இங்கு நம் ஆசுகவி கண்ணனை காதலனாகப் பாவித்துத் தன்னை அவன் காதலியாகவும் நினைத்துக்கொண்டு பாடுகிறார். தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை புனல்விடு கயலினை—அல்ல—அனலிடு புழுவினை நிகர்த்தது. ‘நீங்கில் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்’—இதுவன்றோ காதலின் சுபாவம். தன் மெய்ப்பாட்டைநாயகனுக்குத் தெரிவிக்க அவனிடம் தோழியைத் தூது செல்லவிடுகின்றாள்.

பண்டிதர்கள் கல்வி யறிவு முழுமையையும் தங்களுக்கே உரிமையாக்கியும் அதைப் பாடசாலைக்குள்ளேயே அடைத்து வைத்தும் வந்தமையால், நாட்டைக் கேடடையும் நிலைமைக்குக் கொணர்ந்ததே பலனாயிற்று.

"ஆற்றங் கரையதனில் முன்னமொரு நாள்—எனை
அழைத்துத் தனியிடத்திற் பேசிய தெல்லாம்
தூற்றி நகர் முரசு சாற்றுவ னென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம்.

சோர மிழைத்திடையர் பெண்களுடனே—அவன்
சூழ்ச்சித் திறமை பல காட்டுவ தெல்லாம்
வீர மறக் குலத்து மாதரி டத்தே
வேண்டிய தில்லை யென்று சொல்லி விடடி!"

என்று கண்ணனை பயமுறுத்த இவ்விதம் தோழியிடம் சொல்லி அனுப்புகின்றாள். சுருதியின் முடிவுப் பொருளான கண்ணனே இவற்றிற்கெல்லாம் சாய்பவன்! கபட நாடக சூத்திரதாரி.

"பண்ணென்று வேய்ங்குழலில் ஊதி வந்திட்டான்—அதைப்
பற்றி மறக்குதில்லை பஞ்சை யுள்ளமே"

அது இசைவாரியா? காதலின் முரசா! காதலின் மனதைத் தன்பால் பற்றி ஈர்த்த அக் குழலிசை!

கண்ணன், என் காதலன்—இப் பாட்டு எளிய நடை, எளிய பதங்கள், எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய சந்தம் இவைகளால் சமைக்கப்பெற்ற விழுமிய கருத்துக்களை கொண்டுளது இங்கு ஆசிரியர் தம்மை முழுதுமிழந்து தன்னை ஓர் காதலியாகவே நினைத்துக்கொண்டு நடிக்கின்றார். இது—இப் பாட்டு—நம் உளத்துள்புக்கு நம்மை அறியாமலே நம் மனதைத் தன் லட்சிய பூமிக்குக் களவாடிச் சென்று விடுகின்றது. எனவே பாரதியாரின் கவிதை தமிழ் நாட்டிற் சென்று அளிக்கப்பட்டதோர் இன்னிசை விருந்தெனக் கோடலும் குற்றமாகுமோ?

"பாரதி"ப் பத்திரிகையும், நமது வெளியீடுகளான புஸ்தகங்களும் மலேயா நாடுகளில் கீழ் குறிப்பிட்டுள்ளவர்களிடம் கிடைக்கும்.

Messrs. T. Subramanyam & Co.,
7, Batu Road, KUALA LUMPUR, F. M. S.

The Manager, "India Novel Depot,"
71, Serangoon Road, SINGAPORE, S. S.

இந் நாட்டு மக்களுக்குக் கல்வியை ஊட்டும் பொறுப்பு மீண்டும் தியாகிகளது தலைமீதே சுமத்தப்படல் வேண்டும்.

ஆராய்ச்சி மேடை.

"ஞாயிறு"

ஈழமண்டலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழபி விருத்திக்காகப் பாடுபடும் கலாநிலையத்தாரால் "ஞாயிறு" என்னும் பத்திரிகை உயர்தரத்தில் புதிய முறையில் வெளியிடப்படுகிறது. "ஞாயிறு" ஆசிரியக் கழகம் சிறந்த அறிகளைக் கொண்டிருக்கிறது. அதன் அமைச்சரான ஸ்ரீலஸ்ரீ சுவாமி உருத்திர கோடீசுவரர் அவர்களையும் அவரது பொதுநலத் தொண்டையும் தமிழ் உலகு நன்கறியும். இந்த ஆசிரியக் கழகத்தின் அங்கத்தினரே இப் பத்திரிகையின் பெருமைக்குச் சான்றாகும்.

சென்னையில் ஆங்கிலத்தில் வெளியிடப் பெறும் "திரிவேணி"யைப் போலவே, முதன்மையாக இயக்கியம், பொதுவாக நாகரீகம், சமயம், சரித்திரம், காவியம், ஓவியம், ஆராய்ச்சி, கலைகள் முதலியவைகளின் விருத்தியைக் கருதி இரு மாதங்களுக்கொரு முறை "ஞாயிறு" பதிப்பிக்கப்படுகிறது. தமிழகத்திலே எல்லா வழிகளிலும் சிறந்த இம் மாதிரியான பத்திரிகை வெளிவந்ததே கிடையாது. அருமையான கட்டுரைகள் பத்திரிகையை அலங்கரிக்கின்றன. இன்னும் இலகுவான நடையில் எழுதப்பட்டால்தான் பொதுஜனங்களுக்கு மிகமிக உதவியாயிருக்கும். ஆசிரியர்கள் இதனைக் கவனிப்பார்களாக. பால் போன்ற காகிதம்; முத்துப் போன்ற எழுத்துக்கள். அளவும் அமைப்பும் வசீகரிக்கத்தக்கவை. இந் "ஞாயிறு" ஞாயிறு போன்று எல்லாத் தமிழ் மக்களுக்கும் ஒளியை அளிப்பதாக!

வருடம் 1-க்குச் சந்தா ரூ 4—0—0. தனிப் பிரதி 12 அணா.

கிடைக்குமிடம்:

யாழ்ப்பாணக் கலா நிலையம்,
யாழ்ப்பாணம், சிலோன்.

"சுவாமி"

வெறும் பேச்சினால் என்ன காரியம் நடக்கும்?

ஆசிரியக் குறிப்புகள்.

ஆசிரியரது அறிக்கை

அடுத்த மாத முதற்கொண்டு இனி மாதந்தோறும் "பாரதி"யில் **மாதர் உலகம்** என்ற தலைப்பின் கீழ் பெண்களின் முன்னேற்றம் சம்பந்தமான விஷயங்கள் வெளிவரும். தமிழபிவிருத்தி, சமூக சீர்திருத்தம், தமிழர் இயக்கம் முதலியவைகளைப் பற்றிக் குறிப்புகளும் அடிக்கடி எழுதப்பெறும்.

கலா நிலையம், யாழ்ப்பாணம்

தமிழரது கலைகள் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் **கலாநிலையம்** என்றதொரு தமிழ்ச் சங்கம் ஸ்தாபிக்கப் பெற்று, தீவிரமாய் வேலை செய்து வருவதை அறிந்து மிக மிகச் சந்தோஷம் அடைகிறோம். அடிக்கடி பெரிய அறிஞர்களால் இங்கு தமிழ் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன. ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கத்தார் நடத்தும் பரீக்ஷைகளுக்காக வகுப்புகள் இங்கு ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. இக் கலாமண்டபத்திலிருந்து "ஞாயிறு" என்னும் நாமத்துடன் இரு திங்கட்கொரு பத்திரிகை வெளிவருகிறது. இக் கலாநிலையத்தில் புஸ்தகசாலை ஒன்று இருக்கிறது. பல பத்திரிகைகள் வருகின்றன. ஆடி மாதம் முதல் வாரத்தை **நூல் வாரம்** ஆகக் கொண்டு அங்கத்தினரில் அநேகர் பற்பல விடங்களில் நூற்கள் தேடினதின் பயனாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல அருமைப் புஸ்தகங்கள் கிடைத்தன. நூலாராய்ச்சிக் கழகம் ஒன்றும் இதில் வேலை செய்துகொண்டிருக்கிறது. கலைகளையும், பாஷைகளையும், சில தொழில்களையும், வியாபாரக் கல்வியையும் தபால் மூலமாய் ஆங்கிலத்தில் சில ஸ்தாபனங்கள் போதிக்கின்றது போன்று, இக் கலாநிலையத்தார் கடித முறையில் தமிழ்க் கல்வியைப் புகட்ட முன்வந்திருக்கிறார்கள். தபால் கடிதப் போக்கு வரவால் தமிழ் கற்பிக்க முதலாவது முன்வந்த கௌரவம் யாழ்ப்பாணம் கலாநிலையத்திற்கே உரியது.

தமிழ் நாட்டில் பிரசித்திபெற்ற உயர்திரு சுவாமி உருத்திர கோடீசுவரர் அவர்களது தமிழ்த் தொண்டு அதிகமாய் இங்கு பரிமளிப்பதை அறிகிறோம். இச் கலாநிலையத்தின் நிருவாக சபையில் பரமேசுவரக் கலாசாலைத் தலைவர் உயர்திரு. சு. நடேசம் பிள்ளை

மனத்தால் ஒன்றுபட்டு, மணத்தால் ஒன்றுபடாதவர்களிருப்பது போலவே, காதலற்று மணமுற்றவர்கள் அநேகரிருக்கிறார்கள்.

பி. ஏ, பி. எல். அவர்களும் மற்றும் சிறந்த பண்டிதர்களும் சேர்ந்தும் உழைத்து வருவதால் இந் நிலையம் வெகு சீக்கிரத்தில் சிறந்த அபிவிருத்தி அடையுமென எதிர்பார்க்கிறோம். இத் தமிச் சங்கம் வாழ்க! என்றும் வாழ்க!

காங்கிரஸ்

பல வருடங்களாக வளர்ந்து வந்த காங்கிரஸ் கலைக்கப்பட்டது. சர்வாதிகாரிகளை ஏற்படுத்துவதாம். ஒருவித ஸ்தாபனமுமின்றி எப்படிச் சர்வாதிகாரியை ஏற்படுத்துவது? நல்ல விந்தை! பெயருக்கு ஒரு காங்கிரஸ் சபை இல்லாவிடினும், ஒவ்வொரு இந்தியனுடைய மனதிலும் காங்கிரஸ் வளர்ந்துகொண்டு வருகிறது. காங்கிரஸ் சபை மறைந்தாலும் அது இந் நாட்டு மக்கள் நெஞ்சில் கரைந்து, கலந்திருக்கிறது.

சமர்பதி சத்தியாக்கிரக ஆச்சிரமம்

இந்த ஆச்சிரமம் கலைக்கப்பட்டது. அநேக தொண்டர்களுக்குப் பயிற்சி கொடுத்து, அவர்களைச் சத்தியாக்கிரகிகளாக்கியது. ஆனால் இப்பொழுது இந்த ஆச்சிரமம் பரதகண்ட முழுவதும் நடமாடிக்கொண்டு, நடமாடும் ஆச்சிரமமாக இருக்கிறது.

பெருமாள்

மதுரை ஜில்லா உத்தமபாளையத்திற்குச் சமீபத்திலுள்ள அம்மாபட்டி என்ற கிராமத்தில் ஸ்ரீமான் அருணாசலக் கவண்டரவர்களின் குமாரர் பெருமாள் என்னும் மாணவர் தன்னுடைய ஹைஸ்கூல் படிப்பை முடித்துவிட்டு, சென்ற ஜூன் மாதத்தில் கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்களது சாந்திநிகேதனத்திற்குச் சென்று கலா பவன் என்னும் சித்திரக் கலாசாலையில் பயிற்சி பெற்றுக்கொண் டிருக்கிறார். ஒரு தமிழர் வங்க நாட்டில், அதுவும் உலகப் பிரசித்தி பெற்ற கலாசாலையில் கலைப் பயிற்சி பெற்றுச் சித்தி அடைவது வருங் காலத் தமிழ் நாட்டுக்கு மிக்க உதவியாகும். இவ் வாலிபரது சமூகமான ஒக்காலியர்களுக்கே இது ஒரு பெரிய கௌரவமாகும். 60 ஆண்டு நிறைந்த ஒரு கிழத் தகப்பனை விட்டுவிட்டு கலைப்பசியால் சாந்திநிகேதனம் சென்றிருக்கும் இம் மாணவருக்கு வெற்றி கிடைப்பதாக!

அடிகள் விடுதலை

மகாத்மா காந்தி அவர்களைத் திடீரென்று பிடிப்பதுவும் அவரை எவ்வித நிபந்தனையுமின்றி விட்டுவிடுவதும் சாதாரணமாகி விட்டது. சமீபத்தில் விடுதலை பெற்ற அடிகளை மறுபடியும் சிறைக்குக்

எதை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாகுமோ அதை அறிய வேண்டும்.

கொண்டு போனார்கள். ஹரிஜன சேவைக்காக ஏற்கனவே சிறையிலிருக்கும் பொழுது அவருக்கு அளிக்கப்பட்ட வசதிகள் குறைபடவே தம்மிலிருக்கும் சத்யாக்கிரக ஆயுதத்தை உபயோகப்படுத்தினார். அடிகள் 8 நாட்கள் உண்ணா விரதமிருக்கவே தளரா அரசாங்கம் தலைகுனிந்து அவரை எவ்வித நிபந்தனையுமின்றி 23—8—'33-ல் விடுதலை செய்துவிட்டது. இவ் விரத காலத்தில் அவர் சோர்வுற்று வருந்தியதால், அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு போனார்கள். அவருக்கு உபச்சாரம் செய்யும் பொருட்டு அவருடைய மனைவியார் கஸ்தூரி பாயையும் விடுதலை செய்து அவரையும் வைத்தியசாலைக்கு அனுப்பினார்கள். எனினும் மகாத்மாவின் நிலையைக் கவனித்து அவருக்கு ஏதேனும் அபாயம் ஏற்பட்டாலும் ஏற்படலாமென்று சந்தேகித்து அரசாங்கத்தார் அவருக்கு விடுதலை கொடுத்துவிட்டார்கள்.

மகாத்மாவின் சத்தியாக்கிரகமே அரசாங்கத்திடம் வெற்றி பெற்றது. மிருக பலம் ஆத்ம சக்தியின் முன்நிற்குமோ? குரூர அரச நீதிகளைக் கண்டு ஞானிகள் பயப்பட மாட்டார்கள். அநியாய அரச ஆக்கினைகள் பெரியார்களை ஒன்றுஞ் செய்யாது. இதை இப்பொழுதுதான் தற்கால அரசாங்கங்கள் அறிய ஆரம்பித்திருக்கின்றன. அரச நீதி தெய்வ நீதியை தழுவியிருக்க வேண்டும். மாறுபடுமேல், உலகில் சாந்தி கெட்டு சண்டைகளும் சச்சரவுகளும் குழப்பங்களும் ஏற்படும்.

ஒக்காலிய விவசாயிகள் சங்கம், கூடலூர்

மதுரை ஜில்லாவில் பெரியகுளம் தாலுகாவில் பல சமூகங்கள் வாழ்ந்து வந்தாலும், விவசாயத்தையே தங்கள் குலத் தொழிலாகக் கொண்ட ஒக்காலியர்கள் கம்பம் பள்ளத்தாக்கிற்கே முதுகு எலும்பு போன்றிருக்கிறார்கள். பெரியாற்றங் கரையிலிருக்கும் இவர்கள் அதி சீக்கிரத்தில் அதி அபிவிருத்தி அடைந்திருக்கிறார்கள். இவர்கள் முன்னேற்றத்தின் பயனாக ஒற்றுமை உணர்ச்சியால் இவர்களுக்குச் சங்கங்கள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. கூடலூர் என்னும் கிராமத்தில் **ஒக்கலிகர விவசாயிகள் சங்கம்** என்ற பெயருடன் ஒரு சங்கம் நிறுவி ஓராண்டுக்கு மேலாகிறது. வருடப் பொதுக் கூட்டமும் சிறப்புடன் நடைபெற்றது. இங்கு சுமார் 650 வீடுகளிருக்கின்றன. ஒவ்வொரு வீடும் இதில் ஒரு அங்கமே. சமூகக் கட்டுப்பாட்டின் மூலமாய் நானாவழிகளில் தங்கள் சமூகத்திற்கு நல்ல தொண்டு செய்து வருகிறார்கள். கட்டாயக் கல்வி, வயது வந்தவர்களுக்குக் கல்வி, காவல், பொருளாதாரச் சீர்திருத்தம் முத

அன்பு துன்பத்தை இன்பமாக்குகிறது; பாரத்தை இலேசாக்குகிறது; கசப்பை இனிப்பாக்குகிறது.

லிய திட்டங்களைப் போட்டு வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். சட்டங்கள் செய்வதும் திட்டங்கள் போடுவதும் மிகவும் இலகுவானது. அவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து, அவைகளின்படி நடந்து அவைகளில் வெற்றி பெறுவதே மகா கஷ்டமானது.

எங்கள் சமூகம் மற்றெல்லா ஜாதிகளைக் காட்டிலும் உயர்வானதென்று தற்பெருமை கூறிக்கொள்ளாது, தனது மரபின் குறைகளை நீக்கப் பாடுபட்டு வருவதுடன் தங்கள் கல்வி, பொருளாதார அபிவிருத்தியில் ஒன்று சேர்ந்து உழைக்கும் இச் சங்கத்தார்களைப் போற்றுகிறோம். வீதிகள்தோறும் பள்ளிக்கூடங்களும், இராப் பள்ளிக்கூடங்களும். புஸ்தக—வாசகசாலைகளும் இச் சங்கத்தாரால் உண்டாகட்டும். அதிகாரத்தை உபயோகிக்காது, அன்பையே அஸ்திவாரமாகக்கொண்டு செய்யும் எந்தப் பொதுக்காரியமும் மேன்மையுற்றுப் பிரகாசிக்கும். இக் கிராமத்தில் தங்கள் சமூகத்தில் அனைவரும் கட்டாயமாய்க் கல்வி கற்றுக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானம் செய்து இச் சங்கத்தார் உழைப்பது போன்று மற்ற சமூகத்தார்களும் உழைப்பார்களே யானால், நம் நாட்டில் கல்வி யில்லாக் குறை விரைவில் நீங்கிவிடும். 150 வருடங்களுக்கு மேலாக நம்மை ஆண்டும், ஆங்கிலர் நம்மில் 100-க்கு 95 பேர்களுக்குக் கல்வி கற்பிக்காதிருக்கிறார்கள். நமது நாடு அடிமை நாடு. நமது காரியங்களை விரைவில் நன்றாய்ச் செய்ய முடியாதபடி கல்வி இன்மையும் வறுமையும் வந்து குறுக்கிட்டுத் தடுக்கின்றன. ஆகையால் ஒவ்வொருவரும் தத்தம்மாலான அளவு தேசாபிவிருத்திக்கு உழைக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்-அன்பர் மகாநாடு

தமிழ் மக்களுக்கு இடையில் ஒரு ஒற்றுமையையும் ஊக்கத்தையும் உண்டாக்குவதுடன் தமிழை வளர்ப்பதாக **தமிழ் அன்பர் மகாநாடு** என்ற பெயருடன் சென்னைப் புஸ்தகாலயப் பிரசார சங்கத்தினர் ஒரு கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். தமிழ் மொழியிலே உள்ள இலக்கியங்கள் வளம் பெறுவதற்கும் பொது ஜனங்களிடையே கல்வி யறிவு பரவுவதற்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக புத்தகாசிரியர்கள், பிரசுர கர்த்தர்கள் புஸ்தக வியாபாரிகள் ஆகிய இவர்களையும் பத்திரிகாசிரியர்கள், உபாத்தியாயர்கள், புத்தகாலய அதிகாரிகள் முதலியோர்களையும் சேர்த்தே இம் மகாநாட்டைக் கூட்ட இச் சங்கத்தின் உத்தேசம். இச் சங்

எண்ணங்க ளெல்லாம் வஸ்துக்களே.

கத்தின் முயற்சிகளை நாம் பெரிதும் போற்றுகிறோம். பத்திரிகாசிரியர், புத்தகாசிரியர், பதிப்பாசிரியர், பிரசுரகர்த்தர், புஸ்தக வியாபாரி, அச்சிடுபவர் என்ற முறையில் நாம் இம் மகாநாட்டில் அதிகமாய்ப் பங்கெடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

தமிழ் நாட்டு மூவேந்தர்களும் தமிழை வளர்த்தார்கள். முத்தமிழ்ச் சங்கங்களிலும் தமிழ் செழிப்புடன் வளர்ந்து வந்தது. இப்பொழுது தமிழை ஆதரிப்பவரே இல்லையென்றால், தமிழை வளர்ப்பவர்கள் எங்கிருந்து வரப்போகிறார்கள்? தமிழ் மாது இன்று அகௌரவமடைந்து அதிக அல்லலுற்று வாடுகிறாள். இந்த மீ 'பாரதி'யில் ஒரு வியாசம் "தமிழரும் தாய்மொழியும்" என்று நாம் எழுதியுள்ளோம். அதில் தமிழின் பண்டைப் பெருமையையும்—தற்காலத் தன்மையையும் பற்றி எழுதியுள்ளோம். இதை மறுபடியும் வாசிக்க.

தமிழ்த் தாய்க்குத் திருப்பள்ளி எழுச்சியைப் பலர் பாடினார்கள். எனினும் இதில் பாரதியாரே முதன்மை பெற்று விளங்குகிறார். இருட் காலம் கடந்துவிட்டது. நமது தமிழ் அன்னையும் நீண்ட நித்திரையிலிருந்து விழித்துக்கொண்டு விட்டாள். அன்னையின் பாதார விந்தங்களை வணங்குவோமாக! நமது தமிழர்களுக்கு நல்ல காலம் உண்டாக வேண்டுமாயின், தமிழுக்குச் சேவை செய்தல் வேண்டும். நமது நாட்டுப் புஸ்தகப் பொக்கிஷத்தைப் பிறருக்குத் திறந்து, அவர்களுக்கு அங்கு கிடக்கும் இரத்தினங்களைக் காட்டி அவைகளின் உயர்வை அவர்களுக்கு உணர்த்தல் வேண்டும். அயல் தேசத்தாரது அரிய பெரிய நூற்களையும் விஞ்ஞான நூற்களையும் மற்றும் பிறவற்றையும் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். அனைவரும் அறிந்துகொள்ளத் தக்க நடையில் அநேக புஸ்தகங்கள் எழுதப்படல் வேண்டும். தாய்மொழியின் மூலமாகவே சர்வகலாசாலைகளில் கல்வி கற்பிக்க வேண்டும். பல்வேறு வழிகளில் தமிழ் அன்னைக்குத் தொண்டு செய்து அவளை உன்னத நிலையில் வைக்க வேண்டியது நமது கடமையாகும்.

தமிழ் வளர்ச்சிக்காக தமிழ் இயக்க' தோற்றுவித்து, தமிழ் உலகமெங்கும் தமிழ்ச் சங்கங்கள் நிறுவித் தமிழை வளர்க்க வேண்டும். தமிழ் மொழி வாழ்க!

பொறுப்பாசிரியர் ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரசில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

197891

நமது புதிய பிரசுரங்கள்

வெளிவந்துவிட்டன! வெளிவந்துவிட்டன!!

சோவியத் ருஷியா.

பண்டித ஜவஹர் லால் நேரு எழுதிய ஆங்கில நூலின்
நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.
"தமிழ் நாடு" ஆசிரியர்
டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்களின்
முகவுரையுடன் கூடியது.
தோட்டியும் தொண்டமானும் பிச்சைக்காரனும் பிரபுவும்
ஏற்றத் தாழ்வில்லாமல் குபேர வாழ்வு வாழுகின்ற
சோவியத் ருஷியாவை அறிய இதுவே முதல் சந்தர்ப்பம்.
விஷயத்தை விளக்க கண்ணைக் கவரும் 21 ஆப்டோன்
படங்களுடன் கூடிய

ஆர்ட் & கிளேஸ் பதிப்பு விலை ரூ. *1—4—0.*
தபாற் செலவு வேறு

ராட்டூர்-வீரன்- துர்க்கா தாஸ்.

(சரித்திர சம்பந்தமான ஓர் தேசீய நாடகம்)

வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திர லால் ராய்
எழுதியது.
அவரது நாடகங்களுக்குள்ளேயும்
இத் துர்க்கா தாஸே முதன்மையானது.

ஆரம்ப முதல் இறுதி வரை
அற்புதம்! ஆச்சர்யம்!! ஆனந்தம்!!!
தேசபக்தி ததும்புகிறது! சத்தியம் ஒளிர்கிறது!!
ஆவேச நடை! அலங்கார பாஷை!!
மயிர் சிலிர்க்குஞ் செயல்கள்!!!
கிரௌன் $\frac{1}{8}$ சைஸ்
380 பக்கங்கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—4—0.
தபாற் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம்.